அறிஞர் அண்ணா

நினைவுமலர்

1969

பச்சையப்பன் கல்லூரி

காஞ்சிபுரம்-3

அறிஞர் அண்ணா
நினைவு மலர்

மலர்க் குழுவினர்

1256/69
2

தலைவர்:

பேராசிரியர் சி. சிவசுப்பிரமணியன், B. Sc.,

துணைத் தலைவர்:

பேராசிரியர் வி. என். சதாசிவ ராவ், M. A.

ஆசிரியர்:

பேராசிரியர் கோ. இராமச்சந்திரன், M. A.

157620

துணை ஆசிரியர்கள்:

மு. பி. பாலசுப்பிரமணியன், M. A.
நா. ஆறுமுகம், M. A.

செயலாளர்கள்:

உ. சி. நடராசன், III B. A.
கோ. தமிழ்வாணன், III B. Sc.,

உறுப்பினர்கள்:

வை, சோமசுந்தரம், II B. Sc.
வெ. செயராமன், II B. Sc.,
B. N. நரசிம்மன், II B. Sc.,
V. நாராயணசாமி, II B. Sc .
சு. வடிவேலு, II B. A.
வெற்றிச்செல்வன், III B. A.
T. C. சீனிவாசன், III B. A.
M. குமாரசாமி, II B. A.

தாய் உள்ளம் நீ!

வல்லம். வேங்கடபதி, எம்.ஏ.
தமிழ் விரிவுரையாளர்.

தமிழகத்தின் இதயம்நீ! உயிர்வெள் ளம்நீ
தனித்த பெருங் காவியம்நீ! தமிழ்த்தோன் றல்நீ!
அமுதம்நீ! கலைவாழும் திருக்கோ யில்நீ!
அள்ளஅள்ளக் குறையாத ஆசைத் தேன்நீ!
குமையாது வெடிக்காது பழமைக் காட்டைக்
கொளுத்திவிட்ட எரிமலைநீ! புரட்சித்தீநீ!
அமையாத செங்கதிர்நீ! அறிவாற் றல்நீ!
ஆகாயம் போல்விரிந்த தாய்உள் ளம்நீ!

சங்கத்துப் பொன்னேட்டில் குவித்து வைத்த
சருக்கரைநீ! தீந்தமிழ்நீ! கபிலர் பாநீ!
அங்கத்தின் அணுவெல்லாம் சிலிர்ப்பு கொள்ள
அசைந்துவரும் தென்றல்நீ! குழற் கீதம்நீ!
தங்கம்நீ! தவழ்நிலாநீ! தனிஇன் பம்நீ!
தன்மானச் சிகரம்நீ! தமிழ்ச்சிங் கம்நீ!
இங்கிந்நாள் எந்தமிழர் இதயம் ஏற்ற
இணையற்ற தலைவன்நீ! அண்ணா நீயே!

மோதுகின்ற சமுதாய நெருப்பு ஆற்றில்
மூழ்கியேநீ மூச்சடக்கி நீந்தி நீந்தி
சூதுமிகு சுழல்களிலே சாய்ந்திடாமல்
சுகபோக வலைவீச்சுக்கு அகப்படாமல்
நோதலுக்கும் சாதலுக்கும் அஞ்சி டாமல்
நோன்புபல தாமியற்றி நிமிர்ந்து நின்று
தீதறியாப் புதுப்பாதை அமைத்துத் தந்த
தென்னாட்டின் வழிகாட்டி அண்ணா நீயே!

தமிழகத்தில் ஒரு தனி அரசியல் இயக்கத்தைத் தொடங்கி, பேணிவளர்த்து அரசைக் கைப்பற்றிப் புகழின் உச்சியில் வீற்றிருந்த நற்றமிழர் அறிஞர் அண்ணாதுரை மறைந்துவிட்டார். அவர் மறைவு தமிழக மக்கள் அனைவரையும் கண்ணீர்க் கடலில் மூழ்கடித்துவிட்டது.

அவர் ஒரு சிறந்த கலைஞராக விளங்கிய காரணத்தால் மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தார். மாற்றாரை மதிக்கும் பண்பும்—எவர்க்கும் எக்காரணத்தைக்கொண்டும் தீங்கு செய்யாத அருள் உள்ளமும் அவர் பெற்றிருந்தார். இந்த இனிய பண்புகள் அவருடைய அரசியல் வாழ்விலும் மணம் வீசின. எனவேதான் அவர் மாற்றுக் கட்சிக்காரர்களின் பாராட்டுதலையும் மதிப்பையும் ஒருசேரப் பெற்றார். அகில இந்திய அரசியல் மட்டத்தில் அவர் புகழ் ஓங்குவதற்கும் இப்பண்புகளே உதவின.

அறிஞர் அண்ணாதுரை காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; காஞ்சிபுரத்தில் வளர்ந்தவர்; காஞ்சி பச்சையப்பன் கல்வி நிலையங்களில் கல்வி பயின்றவர்; சென்னை பச்சையப்பன் அறநிலையக் கல்விக் கூடமொன்றில் சிறிது காலம் ஆசிரியராக இருந்து வாழ்க்கையைத் துவக்கியவர் என்பதெல்லாம் நமக்குப்பெருமை.

எளிய குடும்பத்தில் பிறந்து, எளியவர்க்கெல்லாம் எளியவராகவும் சிந்தனையில் சிறந்தவராகவும் எண்ணற்ற மக்களை மிக எளிதில் தன் வசப்படுத்தி பெருவாழ்வு வாழ்ந்த அன்னார் நினைவாக இச்சொல் மலரை இக்கல்லூரியின் பேரவைச் சார்பாக வெளியிடுகிறோம். வாழ்க அவர் புகழ்.

பச்சையப்பன் கல்லூரி,
காஞ்சிபுரம்,
3—3—1969.

சி. சிவசுப்பிரமணியன்,
கல்லூரி முதல்வர்.

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI
March: 5, 1969.

I am glad to know that you are bringing out a Souvenir in honour of the late Thiru C N. Annadurai, former Chief Minister of Tamil Nadu. I send my best wishes for the success of the publication.

V. V. GIRI.

M. A. Manickavelu, B.A., B.L.,

FORT ST. GEORGE
MADRAS-9
March 7, 1969

I am glad that a Souvenir will be brought out in honour of the late Dr. C N Annadurai I think it will contain interesting anecdotes of the late Chief Minister since the publication emanates from Kancheepuram, his home town I wish you all success.

M. A. Manickavelu.

M. MUTHUSWAMY,
Minister For
Local Administration.

Fort St. George,
MADRAS-9.
7—3—1969

I am glad to learn that the students and staff of the Pachaiyappa's College, Kanchipuram are bringing out a souvenir in honour of the late Thiru Dr. C. N. Annadurai, former Chief Minister of Tamil Nadu, and I wish their endeavour every success.

M. Muthuswamy.

K. V. SUBBIAH, B.A.,
Minister For
Religious Endowments.

Fort St. George,
MADRAS-9.

The students should know politics but at the same time that they should be out of politics. They should bestow their attention to the studies. This is the considered view of our late beloved Chief Minister. I hope that students will pay respect to our departed leader by interesting themselves in their studies. I wish you success in your enterprise.

K. V. Subbiah.

VELUR D. NARAYANAN,
M.A., B.L.,

Ripon Buildings,
MADRAS-3.
March: 10th 1969.

I am sure the Souvenir will be very useful to one and all and particularly will be an inspiration to the students. It is my sincere wish that students should follow the footpaths of our beloved Anna in every walk of life to enable them stand in good stead and be of useful service to the Nation.

D. Narayanan.

C. V. M. அண்ணுமலை, M.L.A.,
கடம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி.

காஞ்சிபுரம்,
5—3—1969.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் பேரவை மாணவர்கள் ஒருமித்த கருத்தோடு உவகைகூட்டி, பாசத்தால்—நேசத்தால், அன்பால், ஆசையால் தமிழார்வத்தால். தமிழர்தம் வாழ்விற்கும், வளத்திற்கும் தொன்மைமிகு எழுச்சிக்கும் வித்தூன்றிய வித்தகர், தலைவர், தமிழக முதல்வராயிருந்து சிறப்பின் சிகரமாய் விளங்கிய மறைந்த பேரறிஞர் அண்ணு, அவர்களின் நினைவாக மலர் வெளியிடுவது கண்டு மட்டிலா மகிழ்வெய்துகிறேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இப்பொழுது உள்ளது போன்ற நிலை இல்லாமல் படித்த வர்க்கம் பாமர மக்களிடம் ஒன்றியில்லாத ஒரு நிலை இருந்தது. அப்போது பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளில் எழுத்தில் தனி நடையோடும், பேச்சில் தனி சிறப்போடும் எளிமையின் சின்னமாய் பாமர மக்களோடு ஒன்றிப் பழகினுர். அவர் பேசாத கல்லூரிகளே இல்லை. அவரைத் தூற்றியவர்கள் சிறப்பித்து வாழ்த்தி வரவேற்றதை அவர் காலத்திலேயே காணும் நல்வாய்ப்பினைப் பெற்று விளங்கிய பெருந்தகையவர்கள் நம்மையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்தார். அவர்களுக்கு நன்றிக் கடனாற்றும் வகையில் காஞ்சி பச்சையப்பன் கல்லூரி இளம் மாணவத் தோழர்கள் மலர் வெளியிடும் மாண்புறு முயற்சி போற்றற்குரியதென கூறி வாழ்த்துகிறேன்.

M. G. இராமச்சந்திரன்,
சட்டமன்ற உறுப்பினர்.

160, லாயிட்சு சாலை,
சென்னை-14.

பேரறிஞர் அண்ணு பிறந்ததால் காஞ்சி பெருமை பெற்றது. கலைஞர் பெருந்தகை அண்ணு கல்வி பயின்றதால் பச்சையப்பன் கல்லூரி பெருமை பெற்றது. அறிஞர் பெருந்தகையோடு வாழ்ந்ததால் நாமெல்லாம் பெருமை பெற்ருேம் அவர் முதல் அமைச்சர் ஆனதால் இந்த அரசு பெருமை பெற்றது. அவர் பேசினுர், பேசிய மொழிகள் பெருமை பெற்றன. அவர் எழுதினுர், இலக்கியம் பெருமை பெற்றது. அவர் நடித்தார், நாடகம் பெருமை பெற்றது. அரசியலில் நுழைந்தார், தமிழக அரசியல் பெருமை பெற்றது. இவ்வளவு பெருமையைச் சேர்ந்த பேரறிஞரின் கழகக் குடும்பத்திலே நாமும் ஒரு உறுப்பினனுக, பாசத்தலைவனின் நேசத் தொண்டனுக, அருமை அண்ணனின் ஆசைத்தம்பியாக, வாழ்ந்துவரும் பேற்றைப் பெற்ருேமே, உலகில் வேறு யாருக்கும் இப்படிப்பட்ட பேறு கிடைக்க வில்லையே என்று இறுமாந்திருந்த நேரத்தில் இவ்வளவு பெருமையையும், புகழையும் தானும் பெறவேண்டுமென்ற பேராசையால் 'காலம்' அவரை அணைத்துக்கொண்டு நம்மையெல்லாம் அனுதைகளாக ஆக்கி. ஆனந்தத்தைச்சிதற அடித்துவிட்டது. நம்மை வாழ்விக்க வந்த 'பேரொளி' இருளிலே வழிகாட்டிவிட்டு மறைந்துவிட்டது.

எங்கே அந்தப் பேரொளி? எங்கே நமது தெய்வம்? எங்கே நமது அண்ணு?

K. M. இராசகோபால்,
தமிழக சட்டமன்ற உறுப்பினர்,
உத்திரமேரூர் தொகுதி.

கம்பராசபுரம், தம்மனூர் அஞ்சல்
10—3—69.

இருபதாம் நூற்ருண்டின் தமிழ் காத்த தலைமகனுய், மாமேதையாய், ஏழைகளின் உள்ளத்தில் நீங்காத இடம்பெற்ற ஏந்தலாய், சொல்லாற்றல் பெற்ற வல்லவராய், பார்ப்போர்க்கு எளிய நடையினராய் வாழ்ந்தவர் நம் அண்ணன். அவரோடு மோதி உடைபட்டுச் சுக்கு நூருய்ப் போன ஏய்ப்போர் பலர். இயற்கையின் கொடிய கரங்கள் அந்தத் தலைமகனின் உயிரைத் தட்டிப்பறித்தபோது தமிழன்னை தடுக்காமல் வாளாய் இருந்து விட்டாள். தமிழ் அழ, தமிழ் மக்கள் அழ, தமிழ்த்தாயே உமை நொந்தேன். இவ்வாறு மனம் வெந்திருந்தபோது காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அண்ணனுக்கு நினைவு மலர் வெளியிடுவதுகண்டு பூரித்து, மாணவ மணிகளைப் பாராட்டுகிறேன்.

N. D. Sundaravadivelu, M.A., L.T.,
Chief Educational Adviser and Ex-officio Additional
Secretary to Government,
Education Department.

FORT ST. GEORGE, MADRAS-9.
March: 5, 1969.

I am glad to learn that the College Union, Pachaiyappa's College, Kanchipuram, proposes to bring out a Souvenir on 13-3-1969 In honour of the late Thiru C. N. Annadurai, former Chief Minister of Tamil Nadu.

Thiru Arignar C. N Annadurai was a brilliant product of the Pachaiyappa's High School, Kanchipuram and Pachaiyappa's College, Madras. He was a versatile genius. His command over our own mother tongue Tamil and English was superb. He could wield his pen equally powerfully in both the languages. He was an orator of the highest order both in Tamil and English.

As one who was privileged to know him for nearly 35 years, I would like to place before the present generation for their special attention, the fact that all through his life he was a voracious reader. His reading was not limited to any narrow field;–it was broad–based.

It was his innate talent developed by studious habits of learning that made him the great figure that he was. In him, we witnessed the rare combination of intellectual brilliance of the highest order, with genuinely intense feeling for his fellow beings. His consideration for the poor is too well known to require detailed narration.

May we honour his memory, by following his foot-steps in broad based learning and in applying all our learning and knowledge to the amelioration and upliftment of the people of this country.

N. D. Sundaravadivelu.

அண்ணுவோ! அகன்றனையே

பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்

கற்றூர்வாழ் காஞ்சியிலே கலைவளர்க்கும் நற்குடியில் கனிவாய்த் தோன்றி
மற்றூரும் காணுத மாவாழ்வு தனையேற்று மகிழ்ந்த அண்ணுல்!
உற்றூர்கள் ஒருபுறமும் உன்தமிழர் ஒருபுறமும் உலைந்து மாழ்க
எற்றேஎன் றெல்லோரும் இனைந்தேங்க எங்ககன்ருய் எம்மை விட்டே?

தோன்றியநாள் முதற்கொண்டே தொண்டதனை வாழ்வெனவே துலங்க ஏற்ருய்!
கான்றறியாய்ப் பிறஉயிரைக் கல்வியதே மற்றவர்பால் கனிவு என்றே
சான்றவனும் பச்சையப்பர் கல்லூரி தனில்பயின்று தரணி தன்மேல்
தோன்றியநல் ஒளிவிளக்கே! தூயோனே! எங்ககன்ருய் தொன்மை கண்டாய்!

அண்ணுவென் றெல்லோரும் ஆர்வமொடு அன்பொழுக அருகி ருந்து
பண்ணுலே நின்புகழைப் பாராட்டப் பணிவோடு பரிந்து ஏற்ருய்!
மண்ணுள வந்தஒரு மாதலைவன் என்றுலகம் மகிழ்ந்து போற்ற
எண்ணரிய ஈராண்டு ஈடில்லா தாண்டாயே! எங்குற் ருயோ?

அறுபதாம் ஆண்டளவை அனைவோரும் ஒன்ருகி அன்பு பொங்கி
உறுவதாம் நல்விழவு உற்றதென யாம்மகிழ ஒன்ரே செய்தாய்?
பொருவிலாய் தன்னடக்கம் பூண்டவனே புகழ்வேண்டாம் என்று கொல்லோ
ஒருவிஞய் இவ்வுலகை உற்றவர்யாம் உனைப்பாட ஒளித்த அண்ணுல்!

எல்லோரும் நம்மவரே எனநினைத்து அன்புளத்தால் இயைந்து வாழ்ந்தாய்!
வல்லோரும் உனைஉணர்ந்து வாழ்த்துவதும் கண்டிலையோ, வரம்பி லாதாய்?
பல்லோரும் ஒருங்கிருந்து பாருலகின் 'அண்ணுவோ அண்ணு' என்று
கல்லாரும் நெஞ்சுருகக் கலங்குவது கண்டிலையோ காஞ்சிச் செல்வ!

அருந்தமிழாம் பெருஞ்செல்வி அண்ணுவே நின்செயலால் ஆக்க முற்ருள்
அருந்தமிழர் உன்னுலே அறிவுற்றே தலைநிமிர்ந்து ஆண்மை யுற்ருர்
அருந்தமிழ்நா டுன்னுலே அருமையுடைத் தன்பெயரை அணிந்து நிற்க
அருந்தமிழா! அண்ணுவோ! அருளுடையாய்! எங்ககன்ருய் அவலம் அந்தோ!

எந்நாளும் இவ்வுலகம் எழிலார்ந்த நற்றலைவ உன்னை எண்ணிப்
பண்ணுலே போற்றுவதும் பாராள உன்துணையே பற்றுக் கோடாக்
கண்ணுகக் கண்ணியத்தைக் கடமையினைக் கட்டுப்பா டுடனே கொண்டு
அண்ணு உன் அருள்கலக்க ஆளுவதும் ஆற்றுவதும் அறிவாய் ஐயா!

உன்னைமறந் தினித்தமிழர் ஒருநாளும் வாழ்வாற்ருர் உலகர் என்றும்
உன்னைஒரு வழிகாட்டி எனக்கொண்டு உரம்பெற்றே நிற்பர் அண்ணுல்!
கண்ணனைய மைந்தர்களும் கன்னிநலத் தமிழர்களும் கற்ருர் மற்ருர்
மன்னிநலம் பெறவாழ்த்தி வழிகாட்டி உடனிருப்பாய் மலர்ந்த அண்ணுல்!

அண்ணா



S. V. கிரி
இளங்கலை, இறுதியாண்டு

மாணவர்களுடைய கைவண்ணம்.

B. சௌந்தரராசன்
இளங்கலை, இறுதியாண்டு.



இனப்பற்றும் மொழிப்பற்றும்

பேராசிரியர் கோ. இராமச்சந்திரன், எம். ஏ.
(துணை முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர்)

மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டவராய் வாழ்ந்தார் என்பதைத் தமிழ்நாடே அறியும்,

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஆங்கிலேயனும் இனப்பற்று, மொழிப் பற்று, நாட்டுப்பற்று ஆகிய மூன்றையும் பெற்று, உலகம் பாராட்ட வாழ்ந்து வருவதைப் பார்க்கிறோம். ஒரு ஆங்கிலேயனைக் குறைபடப் பேசினால் அவன் கவலைப்படமாட்டான்; இனத்தைப்பற்றிக் குறைபடப் பேசும்பொழுது ஒருக்கால் பொறுத்துக்கொண்டாலும் பொறுத்துக்கொள்ளுவான்; ஆனால் மொழியிலுள்ள ஒரு சிறந்த இலக்கிய நூலையோ அன்றி நாட்டையோ பற்றிக் குறைவாகக் கூறி விட்டால் அவன் நம்மோடு மோத வந்துவிடுவான் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டிருக்கிறோம். ஒரு தமிழன், தன்னுடைய மொழியைப் பற்றியோ அன்றி நாட்டைப் பற்றியோ, பிறர் குறைபடப் பேசினால் ஐயத்திற்கிடமின்றிப் பொறுத்துக் கொள்ளுவான். மாறாக, தன்னைப்பற்றிப் பிறர்குறைவாகப் பேசினால் சிறிதும் பொறுத்துக் கொள்ளாமல் மல்லுக்குச் செல்லுவான். இதுவே இன்றைய தமிழனுடைய நிலையாகும்.

"தமிழென்று தோள் தட்டி ஆடு—நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு",

எனவும்;

"தன்னைப் பழித்தவனை தாய்தடுத்தால் விட்டுவிடு
தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே",

எனவும் பாடிவிட்டுச் சென்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்", என்றார் பாரதியார். இன்றைய தமிழனிடம் மொழிப் பற்றும் இல்லை; இனப்பற்றும் இல்லை; நாட்டுப் பற்றும் இல்லை; மாறாகக் காழ்ப் புணர்ச்சியும் கயமைத் தன்மையும் குடிகொண்டிருக்கின்றன. மொழி விழி போன்றது. கற்றவர் இதனை நன்கு அறிவர். கண்களைக்கெடுத்துக்கொண்டு வாழ ஒருவரும் விரும்புவதில்லை. அவ்வாறே மொழியின் தகுதியைக் குறைத்தும் பழித்தும் கூறிக்கொண்டு வாழ்வது கடைகெட்ட தன்மை என்பதை ஒவ்வொரு வரும் உணரவேண்டும். தமிழிலக்கிய நூல்களிலே சிலவற்றின் பெயர் களைக்கூடச் சொல்லத் தெரியாதவர்கள், ஆங்கில நூல்களின் பெயர்களை மாத்திர மல்ல—முடியுமானால் கருத்துக்களையுஞ் சொல்லிப் போலித்தனமான புகழைத் தேடிக்கொள்ளப் பாடுபடுகின்றனர்—தகுதியை உயர்த்திக்கொள்ள முயற்சி

செய்கின்றனர். இந்த இழிநிலை காலப்போக்கில் மாறிவிடும் என்பதற்காக நாம் காத்திருக்கத் தேவையில்லை. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதைத் தமிழர்களாகிய நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். தமிழர்கள் அன்றும் ஒற்றுமையுடன் வாழ்ந்ததில்லை; இன்றும் வாழவில்லை. நம்மிடமுள்ள நாய்க் குணத்தை விட்டொழித்து, காக்கைக் குணத்தை (காக்கை குருவி எங்கள் இனம்) பெற்று உயரப் பாடுபடவேண்டும்

உலக இனங்களுக்குள் தமிழினமே மூத்த இனமாகும்; தமிழ் மொழியே முதன் மொழியாகும். இன்னும் சில ஆண்டுகளுக்குள் மேற் கூறிய இரண்டு உண்மைகளை உலகத்திற்கு அறிவிக்கும் நிலை இங்கு ஏற்பட்டுவிடும் என்பது உறுதி.

"தமிழ்ச்சொற்கள் முதல் முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்திலே எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்ச்சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்கள், மக்களினத்தின் பொதுப்பண்பைக் குறிக்கும் அடிப்படையாகும்; எனவே கூர்ந்து ஆராயின், தமிழ்ச்சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பலவேறு வடிவங்கொண்டன என்பது புலப்படும்", என மொழி நூல் புலவராக விளங்கிய அருள் G. ஞானப்பிரகாசர் (இலங்கை) அகராதி ஒன்றின் வாயிலாக (An Etymological And Comparative Lexicon of The Tamil Language) தெரிவித்துச் சென்றார். ஆம்! மேற் காட்டிய கருத்து நூற்றுக்கு நூறும் உண்மையானதே எனச் சில ஆண்டுகளுக்குள் அறுதியிட்டு உறுதியாக நிறுவப்பட்டுவிடும்.

ஆரியம், திராவிடம் என்னும் வழக்குகள் இன்று பலருக்கு மருட்சியை உண்டாக்குகின்றன. 'ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து' (சுந்தரம் பிள்ளை) என்னும் தொடரைப் பயன்படுத்தினால், ஒரு இனத்தவருடைய உள்ளங்களெல்லாம் புண்படும் என நாம் கவலைப்படுகிறோம்.
ஆனால்,

"And no Tamil linguist has come forward with results of further study calculated to modify the picture of a rather primitive and poorish culture that Caldwell ascribed to the Pre-Aryan Tamils," ('The culture And History of the Tamils,' p-7 by K. A. Nilakanta Sastri) என்னும் கருத்தைக் கூறினால் தமிழர்களுடைய உள்ளங்களெல்லாம் புண்படுமே எனக் கவலைப்படுவார் ஒருவரும் இல்லை—அவரும் கவலைப்படவில்லை. முதலில் காட்டிய தொடரை (ஆரியம் போல் என்பதை) பயன்படுத்த நமக்கு உரிமையில்லை. காலமெல்லாம் தமிழுக்காகவே உழைத்த மறை மலையடிகளுக்குச் சிலையை நிறுவவும் நமக்கு உரிமையில்லை. 'திராவிடம்' என்னும் வழக்கு 'தமிழ்' என்னும் சொல்லையும் (திராவிட மொழிகள் என மிகமிகப் பிற்காலத்திலேதான் பன்மைப் பொருள்படக் கூறும் வழக்கு, செல்வாக்குப் பெற்றது); 'திராவிடர்' என்னும் வழக்கு தமிழர்களையும்—தமிழ் இனத்தையும்—குறிப்பிடுவனவாகும் என்பது தெளிவு. இந்திய மொழிகளுக்கெல்லாம் மூல மொழி வடமொழியாகும் எனப் பெரும்பதவியில் உள்ளவர்கள் முதல் எழுத்து வாசனையை அறியாத எளிய மனிதர் வரை—பலரும், குறிப்பிடுவதை நாகரிகம் என்றே இன்றைக்கும் கருதுகின்றனர். அவர்களெல்லாரும் மொழி நூலறிஞர்களெனத் தங்களைக் கருதுகின்றனரோ என்னவோ என்பது நம்மைப் போன்றவர்களுக்கு விளங்கவில்லை.

நாடோடிகளாய்த் திரிந்த ஆரியர் கி. மு. 1500–ஆண்டுகள் அளவில் இந்தியாவிற்குள் நுழைந்தனர் என வரலாறு கூறுகிறது. அவர்களுடைய வருகைக்கு முன்னரே வடஇந்தியாவில் நாகரிகமுடன் வாழ்ந்தவர்கள்—திராவிடர் கள்—தமிழர்கள் ஆவர், என இன்று உலகம் ஒப்புக்கொள்ளுகிறது. எனவே தமிழர்களுடைய மொழியின் பழமையையும், நாகரிகச் சிறப்பையும் இனி, உலகம் குறைத்துக் கூறவோ அன்றி மறைக்கவோ முடியாது. Sir John Marshall என்பவருக்குப்பிறகு உண்மையை எடுத்துக்கூற மற்றவர்களுக்கு இவ்வளவு காலம் ஆகியிருக்கிறது. சிந்துவெளி நாகரிகம் தமிழர்களுடைய நாகரிகமே ஆகும். இந்த உண்மையைத்தான் காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியர் Dr. M. ஆரோக்கியசாமி அவர்கள்,—

"சிந்துவெளி நாகரிகம் தமிழக வரலாற்றின் முதற்பாகம். சிந்துவெளி யில் வாழ்ந்தவர் திராவிடர். திராவிடரும், தமிழர்களும் ஒரே மரபினரே. திராவிடர் என்போர் பழங்காலந்தொட்டு இந்தியாவில் வாழ்கின்றார்கள் என்பது இப்போது ஒப்புக்கொள்ளப்படுகிறது." ('சிந்துவெளி நாகரிகம்'; கட்டுரை; உலகத்தமிழ் மாநாடு—விழாமலர்; 1968) எனக் குறிப்பிட்டுச் சென்றார். சிந்துவெளி நாகரிகம் தமிழர்களுடையதே அன்றி வேறு எவருடையதும் அன்று. இந்தக் கருத்தைத்தான் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் Dr. Asko Parpola என்பவர்,—

"It also proved for certain that the bearers of the Indus culture were Dravidians" ('Indus valley Inscriptions Deciphered'; 'The Hindu'—26—2—69) எனக் கூறி உலக மக்களையே வியப்பில் ஆழ்த்திவிட்டார். இன்றுள்ள தமிழர்கள் தங்களைத் திராவிடர்கள் என (ஆரியர்கள் குறிப்பிட்ட பெயரையே) கூறிக் கொள்ளுவதற்கு வெட்கப்படவேண்டியதில்லை.

காலஞ்சென்ற பண்பாட்டாளர் அறிஞர் அண்ணா அவர்கள் தம்மை ஒரு திராவிடர் என்றும்; தமிழுக்குத் தாழ்வு வரும்படி தான் நடந்துகொள்ள மாட்டார் என்றும்; நாடாளுமன்றத்திலே கூறிய கருத்துக்களை இன்று—இங்கு நினைவு கூர்வது பொருத்தமுடையதாகும். கருத்துக்கள் வருமாறு:

1. "I belong to Dravidian Stock. I am proud to call myself a Dravidian" (Arignar ANNA—extract from Anna's speeches in the Rajya Sabha)

2. கடலெனப் பரந்துள்ள தமிழ்மொழி தாழ்வுறுவதா?

"உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழி என்னுடைய தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கிருக்கிறது. நீண்ட வரலாற்றையும் புகழ்மிக்க பொற் காலங்களையும் உடைய மொழி—கவிஞர் யாத்தமொழி—கவிதைகள் கொஞ்சும் மொழி—கருத்தாலும் கவினுறு வளத்தாலும் கடலெனப் பரந்துகிடக்கும் மொழி—எங்கள் உயிருடன், வாழ்வுடன் கலந்தமொழி—அந்தத் தமிழ்மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் ஆட்சி மொழி என்ற தகுதி தரப்படும் வரை, நான் அமைதி பெறமாட்டேன்—திருப்தி அடையமாட்டேன்." ('ஆட்சிமொழிப் பிரச்சனை' ப-26; மாநிலங்கள் அவையில்—அறிஞர் அண்ணா பேருரை.)

இதயங்களை வென்ற இணையற்ற பேச்சாளர்

பேராசிரியர் மா. குமாரசாமி, எம்.ஏ.,
(பொருளியல் துறைத் தலைவர்.)

செந்தமிழ் நாட்டின் சிந்தனைச் சிற்பியாகவும், வாலிபர் உலகத்தின் வசீகரத் தென்றலாகவும், ஒப்பற்ற எண்ணங்கள் மலர்ந்து மணம் வீசும் சோலையாகவும், ஆயிரமாயிரம் இதயங்களின் இலட்சிய கீதமாகவும் ஒளி வீசித் திகழ்ந்த அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், எண்ணற்ற திறமைகளின் இருப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் விளங்கினார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. ஆனால் அத் திறமைகள் அத்தனையிலும் தலைசிறந்த திறமையாக ஓங்கி உயர்ந்து ஒப்பிலாத பொலிவுடன் பிறங்கியது அவருடைய பேச்சாற்றலே ஆகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று எம். ஏ. பட்டம் பெற்றுப் பொதுவாழ்வில் அடியெடுத்துவைத்த 1935ஆம் ஆண்டுமுதல், கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை முடிவில்லாப் பெருந் துயரத்தில் ஆழ்த்திவிட்டு காலத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்ட 1969-ஆம் ஆண்டு வரை—ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள், தமிழ்நாட்டுப் பேச்சு மேடை, அறிஞர் அண்ணா அவர்களின் மேடையாகவே விளங்கிவந்திருக்கிறது. தமிழ்நாட்டுப் பேச்சாளர்களில் இரண்டொருவர் தவிர ஏனையோர் அனைவரும், இந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக, அவருடைய சொற்பொழிவுப் பாணியையே பின்பற்றி வந்திருக்கிறார்கள். கல்லூரி அரங்கங்கள், இலக்கிய மன்றங்கள், அரசியல் மேடைகள், அரசாங்க விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள், எங்கும், எங்கெங்கும், அவருடைய பேச்சு நடையே வீரநடை போட்டுக்கொண்டிருந்தது. ஈடு இணையற்ற அப்பெருந் தலைவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்த இயக்கத்தின் நேர் எதிரிகளாகத் திகழ்ந்தவர்கள்கூட அவருடைய பேச்சு முறையையே கையாண்டு வந்தார்கள். அப்பெருமகனாரின் கொள்கைகளையும் திட்டங்களையும் எதிர்த்து வீரமுழக்கமிட்ட பலர், அம் முழக்கத்தை அண்ணாவின் பாணியிலேயே எழுப்பிவந்த காட்சியை எண்ணற்ற முறை கண்டு களித்திருக்கிறது தமிழகம்.

எத்தனை நூறாயிரம்பேர் கடலெனத் திரண்டு குழுமியிருக்கும் கூட்டமாக இருந்தாலும், அறிஞர் அண்ணா அவர்கள், ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்று தன் வெண்கலநாத சங்கீதக் குரலால், 'அன்புள்ள தோழர்களே!' என விளித்து உரையாற்றத் தொடங்கிவிட்டால், முழு அமைதி அங்கே குடிகொள்ளும். எவ்வளவு நேரம் அச்சொல்லின் செல்வர் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்தாலும் அவ்வளவு நேரமும் அத்தனை ஆயிரம் மக்களின் உள்ளங்களும் அச் சொற்பொழிவின் பின்னாலேதான் சென்றுகொண்டிருக்கும். அவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது, ஒன்றன்பின் ஒன்றாக, அணி அணியாக, அழகழகாகச் சொற்கள் வந்து விழுந்துகொண்டேயிருக்கும். மலையிலிருந்து விழுகிற அருவிபோல, யாழிலிருந்து எழுகிற நாதம்போல, விண்ணிலிருந்து கொட்டுகிற மழைபோல அவருடைய உள்ளத்திலிருந்து புறப்படும் வார்த்தைகள் வீர உலா வந்துகொண்டேயிருக்கும். எழில் குன்றாமல்—சுவை குறையாமல் — இடையீடு இல்லாமல் தொடர்ந்துகொண்டேயிருக்கிற அச்சொற்களில், உயர்ந்த கருத்துக்கள் ஒளியைப் பாய்ச்சும்; அடுக்குத் தொடர்கள் ஆநந்த நடனமாடும்; புதிய புதிய உவமைகள்

பூத்துக் குலுங்கும்; சீரிளமைத் திறம் மிகுந்த செந்தமிழ் சிரித்து விளையாடும். எவ்வளவு நேரத்திற்குப் பிறகு அந்த அறிவுலகமேதை தன் சொற்பொழிவை, முடித்தாலும் கூடியுள்ள மக்கள் வெள்ளம், இவ்வளவு விரைவில் இந்த இன்னிசைக் கீதம் முடிந்துவிட்டதே—இன்னும் சற்று நேரம் இது தொடரக்கூடாதா—இன்னும் சற்று இன்பம் நம் உள்ளங்களில் பாயக்கூடாதா என்றுதான் எண்ணி எண்ணி ஏங்கும்.

"குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்" என்பது தமிழ்நாட்டு முதுமொழி. அறிஞர் அண்ணு அவர்களுடைய சொற்பொழிவுகளுக்கு இப் பொன்மொழி முற்றிலும் பொருந்தும். தாக்கப்பட்டாலும் அறிஞர் அண்ணு அவர்கள் சொற்பொழிவுகளால் தாக்கப்பட வேண்டும் என்பது அன்னரின் அரசியல் எதிரிகள் பலருடைய அந்தரங்க ஆசை என்பது நாடறிந்த இரகசியம். தன்னேரிலாத அத் தென்னகத் தலைவரையோ அல்லது அவருடைய கட்சியையோ கொள்கைகளையோ மாற்றுக்கருத்தினர் எவ்வளவுதான் கடுஞ்சொற்களால் தாக்கிப்பேசினுலும், தப்பித் தவறிக்கூட அதே வகையான சொற்களால் அவர் விடை அளித்ததில்லை. மிகக் கடுமையாகத் தாக்கியவர்களுக்கும் மிக இனிமையான சொற்களின் வாயிலாக மிகப் பெருந்தன்மையான முறையில் விடையிறுப்பதே அந்த மிகப் பெரிய தலைவரின் மிகச் சிறந்த இயல்பாக அமைந்திருந்தது. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்புடையவராகத் திகழ்ந்த அத் திருமகனுர், இன்னு சொன்னூர்க்கும் இனியவே சொல்லும் இயல்புடையராக விளங்கியதில் வியப்பென்ன இருக்க இயலும்?

அறிஞர் அண்ணு அவர்கள் கல்லூரி மாணவராக இருந்த காலத்தில், தம் ஓய்வு நேரத்தில் பெரும் பகுதியைச் சென்னை கன்னிமரா பொது நூல் நிலையத்திலேயே — அங்குள்ள பல சிறந்த நூல்களைப் படித்து மகிழ்வதிலேயே செலவழித்தார்கள். பொதுவாழ்வு எனும் போர்க்களத்தில் புகழ் செறிந்த தளபதியாகப் பணியாற்றிய பிற்காலத்திலும் ஓய்வு கிடைத்தபோதெல்லாம் பல திற நூல்களைத் தவருமல் பயில்வதைத் தம் தலையாய கடமைகளில் ஒன்ருக அவர் கொண்டிருந்தார்கள். விரிந்து பரந்த இந் நூற்பயிற்சியின் பயனுகவும், இயல்பாகவே தமக்கு அமைந்திருந்த நுண்மாண் நுழை புலத்தின் விளைவாகவும், வியந்து போற்றத்தக்க சீரிய நினைவாற்றலைப் பெற்றிருந்த காரணத்தாலும், எந்த நேரத்திலும், எந்தப் பொருளைப் பற்றியும், எத்தகைய முன் அறிவிப்பும் இன்றி, செம்மை சான்ற முறையில் பேசவல்ல திறன் அவருக்கு அமைந்திருந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள். சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம். தேனடையை மொய்க்கும் ஈக்களென மாணவர் வெள்ளம் அலைமோதிக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணு அவர்கள் பேசத் தொடங்கினுர்கள். "இன்று இங்கு நான் எப்பொருள் குறித்துப் பேச வேண்டும் என்பதை எனக்குமுன் பேசிய மாணவர் தலைவர் சுட்டிக்காட்டவில்லை. இடையருத வேலைகள் பல எனக்கு இருந்த காரணத்தால் நானும் எப்பொருள் பற்றிப் பேசுவது என்பதை முன்கூட்டியே சிந்தித்து முடிவு செய்ய முடியவில்லை" என்று கூறிவிட்டு, ஒருகணம் தன் பேச்சை நிறுத்தினுர்கள். அடுத்த கணம், "பொருளைத்தானே தேடிக்கொண்டிருக்கிறேம் இப்போது! பொருள் என்பதும் ஒரு பொருள்தானே! அந்தப் பொருள்பற்றியே பேசினுல் என்ன?" என்று தொடங்கினுர்கள். மாணவர்களின் கைதட்டல் மண்டபத்தை அதிரவைத்தது. ஒரு மணி நேரத்திற்குமேல் ஓடிய அச்சொற்பொழிவு, அள்ளும் சுவை நிறைந்த தெள்ளுதமிழ் இலக்கியமாக அமைந்தது. மேடையில் ஏறிய பிறகு — சொற்பொழிவைத் தொடங்கிய பிறகு—திடீரென்று எடுத்துக்கொண்ட தலைப்புதான். ஆனுல் அந்தக் காரணத்தால் சொல்லின் சுவையோ பயனே எழிலோ ஏற்றமோ துளியளவும் மாற்றுக் குறைந்ததாக அமையவில்லை.

அண்ணா அவர்களுடைய சொல்லோவியங்கள், பட்டங்கள் பல பெற்ற அறிஞர் பெருமக்களையும் கவர்ந்து இழுத்தன — படிப்பறிவே இல்லாத பாமர மக்களையும் கொள்ளைகொண்டன; துடிக்கும் குருதியும் துள்ளும் இதயமும் படைத்த கட்டிளங் காளைகளுக்கும் தெவிட்டாத தேனாகத் தித்தித்தன—அமைதி யான போக்கும் அடங்கிய நிலையும் படைத்த முதிய வயதினர்க்கும் மூவாத இன்பத்தை அளித்தன; பெரு விரைவும் விறுவிறுப்பும் மிகுந்த அரசியல் மேடைகளுக்கும் சுவையூட்டின—எந்தச் சிக்கலையும் ஆரத்தீர இருந்து அலசி ஆராயத்தக்க இயல்புடைய சட்டமன்றப் பாராளுமன்றங்களுக்கும் உயிரோட்டம் அளித்தன.

தலைவர்கள் பலரை உருவாக்கிய பெருந்தலைவராக அண்ணா அவர்கள் விளங்கியதைப்போலவே பேச்சாளர்கள் பலரைப் படைத்தளித்த பெரும் பேச்சாளராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். அப்பேரறிவுப் பெருந்தகையின் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டு, அப்படிக் கேட்டுப் பெற்ற ஞானத்தின் விளைவாகச் சிறப்பார்ந்த சொற்பொழிவாளர்களாக உயர்ந்து விளங்கும் திறன் பெற்றோர் எண்ணற்றோராக இன்று தமிழகத்தில் பவனி வருகின்றனர். தமிழ்த்திரு நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்திலும்—சமுதாய இயக்கங்கள் எல்லாவற்றிலும்—உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் பலவற்றிலும் அத்தகையோரை நாம் பெருமகிழ்ச்சியோடு காணமுடிகிறது.

செந்தமிழ் மொழியில் எவ்வாறு சிந்தையை அள்ளும் வகையில் பேசவல்ல பேராற்றல் அண்ணா அவர்களிடம் பொதிந்து கிடந்ததோ, அதே அளவிலும் வகையிலும் ஆங்கில மொழியிலும் அற்புதமாக உரையாற்றவல்ல அரிய திறன் அந்த அன்பு உருவத்திடம் தஞ்சம் அடைந்திருந்தது. இந்தியப் பாராளுமன்றத்தில் அரிய ஆங்கில நடையில் அவர் ஆற்றிய பேருரைகள், அம்மாமன்றத்தின் பெருமையையே பல மடங்காக உயர்த்திவிட்டன. இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்று அப் பெருமன்ற உறுப்பினர்கள் இன்றும் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றனர்.

ரோமாபுரிக்கு ஒரு சிசரோ; கிரேக்க நாட்டுக்கு ஒரு டெமாஸ்தனிஸ்; சோவியத் பூமிக்கு ஒரு ட்ராட்ஸ்கி; அமெரிக்காவுக்கு ஓர் இங்கர்சால்; இங்கிலாந்துக்கு ஒரு வின்ஸ்டன் சர்ச்சில், ஆம்! அந்த நாடுகள் பெற்ற பெறற்கரிய அச் சொல்லின் வேந்தர்களைப்போலத் தமிழ்த் திருநாடு பெற்ற தன்னிகரற்ற சொல்லின் செல்வர் அறிஞர் அண்ணா அவர்கள்.

சென்ற முப்பந்தைந்து ஆண்டுகளாக நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி, எண்ணற்ற முறை விரிவுரைகளாற்றி, தமிழ் மக்களையெல்லாம் வீரத்தின் திரு உருவங்களாக மாற்றி அமைத்த மாவீரர் அண்ணா அவர்கள், இன்று நடமாடாத பல்கலைக் கழகமாக அமைந்து, சென்னைமா நகரில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அமைதியான முறையில் அதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். சென்று செவிமடுப்போமா?

★ "அத்திப் பூ" ★

குமர. கருப்பையா, இளங்கலை இரண்டாமாண்டு *(வரலாறு)*

பூமாலை வைத்தாலும் வாடும் என்று
புகழ்மாலை தமிழாலே செய்து இந்தப்
பாமாலை யாகத்தான் அண்ணா உங்கள்
பாதத்தில் நான்வைத்து வணங்குகின்றேன்.

அன்னைமொழி தமிழுக்கு அகரம் மூத்தோன்
அன்னைக்கும் முதலாக அவனே நின்றான்
அன்புக்கும், அறிவுக்கும் அரணாய் நின்ற
அண்ணாநீ எங்கட்கு அகரம் ஆனாய். 1

உயிரோடு மெய்சேர்த்து உயிர்மெய் யாக்கி
பெயரோடு கொண்டோனே! பொறுமைக்குன்றே
அயராது உழைத்தோனே அத்திப்பூவே
துயரென்னும் கடலில் ஏன் ஆழ்த்திச் சென்றாய்? 2

பண்டிதர்கள் உள்ளத்தே பதுக்கிவைத்த
வண்டமிழை வாரித்தான் வழங்கி, ஞாலம்
கண்டுமகிழ் வண்ணம்மா நாடு கூட்டி
பண்டுநிலை உலகத்தே பரப்பி நின்றாய். 3

பேரீந்தாய் தமிழுக்கு; பிணைந்து வாழும்
பேறீந்தாய் எங்கட்குப் புலமை தந்தாய்
பாரீந்த தகையோனே பசித்தோர்உண்ண
சோறீந்து தொழிலாளர்த் தோழன் ஆனாய். 4

தமிழுக்கு வரலாறு சொன்ன வேந்தன்
தமிழுக்குள் வரலாறாய்ச் சேர்ந்தேவிட்டான்
தமிழுக்கே உயிரீந்த தியாகப் பூவே
தமிழர்க்குப் புகழீந்து தமிழாய் ஆனாய். 5

வினையாற்ற வந்தோனே வீழ்ந்த வாழ்வைச்
சுனை யாக்கித் தந்தோனே; சொல்லின் செல்வ!
புனை வாற்றல் வல்லோன் நீ; பேறு மன்னன்
நினை வாற்றல் உளமட்டும் வாழ்வாய் நெஞ்சில். 6

மேடையிலே நீநிற்பின் தமிழுன் முன்னால்
ஓடையென பாய்ந்துவர உண்டு நாங்கள்
கோடையிலே இளைப்பாறும் குளிர்மை பெற்றோம்
தேடறியாக் கற்பகம்நீ தீபம் ஆனாய். 7

சமுதாயச் சீர்கெட்ட சகதி தன்னில்
குமுதப்பூம் பொழிலென்று குளித்த மக்கள்
அமுதொக்கும் அறிவான ஆற்றில் நீந்த
இமயத்தைப் போல்சீறி எழுந்தாய் அண்ணா. 8

கண்மூடிப் பழக்கங்கள் காட்டுச்செய்கை
மண்மூடிப் போகென்று முழங்கும் நீதான்
கண்மூடிக் கொண்டாயோ? காலம் உன்னை
மண்மூடித் தழுவத்தான் மறைந்தா போனாய்? 9

சாதியினைச் சழக்கதனைச் சடங்கைச் சாடி
மேதினியில் பகுத்தறிவைத் தூவி, வெம்பாம்
வேதியனின் வேடத்தைக் கலைத்து நாளும்
ஓதினை நீ தமிழர்க்கு உயர்வாம் பாடம். 10

எனக்கென்று ஓர் அண்ணன் இல்லை என்று
நினைக்கின்ற குறைநீக்கி நின்றாய் அண்ணா!
குணக்குன்றே நீவாழும் காலந் தன்னில்
உனைக்கண்டு உயிர்வாழும் பேறு பெற்றேன். 11

ஏழைக்குப் பங்காளன்; இனிய நெஞ்சன்,
வாழைக்குப் பொருளாகி வாழ்வை ஈந்தோன்
ஈழத்தில் மலாயாவில் இருக்கும் நெஞ்சப்
பேழைக்குள் உறைகின்ற பெரியார் நீயே! 12

மெழுகைப்போல் பிறர்வாழ உருகி நாட்டின்
செழுமைக்குத் தாளாற்றித் தமிழர் தம்மின்
தொழுகைக்கே உரியோனாய்த் திகழ்ந்து 'தம்பி'
அழுகைக்குள் ளாகத்தான் அணைந்துபோனாய்! 13

கற்பனையில் மேவுகவி கம்பன் பண்பை
விற்பனைதான் செய்தாலும் வாயைப் பொத்திச்
சிற்பமென இருந்தார்கள்; சீற்றங்கொண்டு
வெற்பனைய அடிகொடுத்த வேந்தன் நீதான். 14

சீர்பரவும் கம்பரசம் சந்திர மோகன்
ஓர்இரவு வேமண்ணா வேலைக் காரி
பாரறிய இப்புதையல் படைத்த கோவை
ஓர்இரவே தன்னுள்ளே ஒளித்த தேனோ? 15

வெண்பட்டுத் துணிபோலும் வெள்ளை உள்ளம்
புண்பட்டுப் போகத்தான் பேசும் புல்லர்
விண்எட்டும் அன்புள்ள விழியின் நோக்கில்
தன்கெட்ட செயலுக்குத் தனையே நோவர். 16

கார்கால காளான்போல் கானல்நீர்போல்
நீர்மேலே குமிழ்போலும் நிலையேஇன்றி
பார்மீது பலர்வந்து போவார் ஆனல்
யார்இங்கே அண்ணுபோல் ஏற்றம் பெற்ருர்? 17

கரிபால்டி காரல் மார்க்சு கார்க்கி மார்சல்
அரிச்டாட்டில் பெர்னுட்சா அண்ணல் காந்தி
வெறியூட்டும் எழுத்தாளர் வால்டேர்ரூசோ
நெறிகாட்ட மாவீரன் நபிகள் இயேசு 18

சித்தரெலாம் சன்யாட்சென் சிசரோலீவி
புத்தபிரான் சாக்கரடிசு பிளாட்டோகால்வின்
இத்தரையில் இவரெல்லாம் இணைந்து இங்கே
மொத்தஉரு அண்ணுவாய் மலர்ந்தா ரென்பேன். 19

வாதுக்கு அவரோடு வந்த ரா. பி
சேதுத்தான் பிள்ளையரும் சோம சுந்தர
தீதற்ற நாவலனும் தோற்க, வென்றும்
சூதற்று வாழ்ந்ததரு சாய்ந்ததின்று. 20

மாற்ருனின் தோட்டத்து மல்லி கைக்கும்
மாற்றில்லா மணமுண்டு மதிப்பும் உண்டு
கூற்றுவனே யாலுைம் கூற்றின் உண்மை
ஏற்றுவழி நடப்பவனே மனிதன் என்ருய். 21

எண்ணம்சொல் செயல்மூன்றில் இனிமைதேவை
கண்ணியமும் செய்பணியில் கட்டுப் பாடும்
கண்ணிமைபோல் கடமையினைச் கட்டிக் காப்பின்
திண்ணமது நல்வாழ்வு என்று சொன்னுய். 22

எதையுந்தான் தாங்கிடவும் இதயம்பெற்ருேம்
சிதையுந்தன் உயிரொன்றே தியாகஞ்செய்து
பதைக்கத்தான் எமைவிட்டுப் பறந்த தேனே?
விதைத்திட்ட கருத்துவழி நடப்போம் நாளும். 23

ஈடில்லா அவன்மாண்பு இயம்ப இங்கே
ஏடில்லை; எழுதத்தான் காலம் இல்லை,
நாடில்லா இடந்தேடி நடந்தே சென்ருன்
கேடில்லா உலகத்தே குடியும்கொண்டான் 24

அன்னந்தான் உலகத்தில் அழிய மேரு
சின்னந்தான் இல்லை தமிழ்ச் சங்கம்இல்லை
முன்னஞ்சீர் பஃறுளியும் முனையும்இல்லை
அண்ணன்சேர்ந் தவையோடு அமைதியானன் 25

குலம்வாழ வைத்தோனே! குறிஞ்சிப்பூவே!
கலம்வாழும் கடல்வாழ காற்றும்வாழ
நலம்ஆழும் கதிர்வாழ நிலவும் வாழ
நிலம்வாழ நின்புகழும் நிலவும் 'அண்ணு'! 26

"ஒன்றுக்குள் ஒன்ருனர்"

எம். மாசிலாமணி, எம்.ஏ , எம்.ஓ.எல்.
(தமிழ் விரிவுரையாளர்)

தாஜ்மஹால்—இந்திய நாட்டின் பளிங்கு மண்டபம். ஏற்றமிகு எழிற் கருத்தை அள்ளித் தெளிக்கும் உணர்ச்சிப் பெட்டகம். இலக்கிய வாழ்க்கைக்குக் கலைஞன் தந்த கலை வடிவம். இல்லாரும் இருப்பாரும் உளமாறக் கண்டுகளிக்கும் கலைக்கோவில். மரபுச் சின்னம். மங்காத பெருமையைக் கடல்கடந்து அறிவிக்கும் முரசம். இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது இன்றைய தாஜ்மஹாலை நாம் காணுகிறபொழுது.

இந்தியக் குடிமகனுகட்டும், மேலைநாட்டுப் பேரறிஞர்களாகட்டும் தாஜ் மஹாலைக் காணுகிறபொழுது கலைஞனின் கைவண்ணத்தின் எழில் மாட்சியை மட்டும்தானு காண்கின்ருர்கள். தாஜ்மஹால்—பலர் காணவேண்டும் என்பதற் காக எழுப்பப்பட்ட வெறும் காட்சிப் பொருளா? இல்லவே இல்லை.

கரிப்பொருளில் (Carbon) கண்ணைப் பறிக்கும் ஒளி மறைந்திருப்பதுபோல்—கழிவுப் பொருளில் புதிய உயிர்ப் பெருக்கத்துக்கான கரு மறைந்திருப்பதுபோல்—மூத்தவர்களது ஓய்விலே எதிர்கால இளைஞர்களது வாழ்க்கை மறைந்திருப்பது போல் தாஜ்மஹாலின் ஏற்றமிகு எழிலில் மாற்றமிலா மரணகீதம் மறைந் திருக்கிறது,

புகழத்துடிக்கும் நாவன்மையில் ஓங்காரநாதத்தின் எதிரொலி அடங்கி இருக்கின்றது. கண்ணுக்கு விருந்தாகிக் கலைப் பொருளாக மிளிரும் காட்சியில் புரையோடிய புண்ணின் வேதனைக் குரல் பொதிந்திருக்கின்றது. ஆம் நண்பர்களே. ஷாஜஹான், மும்தாஜ்மீது கொண்ட உண்மை அன்பின் ஆழத்தை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுகிறது. ஷாஜஹானின் அன்புத் திருவுருவமே அழியாத தாஜ்மஹால்.

மும்தாஜ்மீது ஷாஜஹான் வைத்த அன்பு வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட உணர்ச்சிக் குவியல் அல்ல. வெறும் ஆரவாரத் தன்மை கொண்டதுமல்ல. மும்தாஜை, ஷாஜஹான் விரும்பினுன்; ஆனுல் அவளது உடலை அவன் விரும்பவில்லை.

அவன் இதயக் கோவிலிலே அதுவரையும் குடிகொண்டிருந்த கோமகளின் நினைவலைகளே ஷாஜஹானின் பளிங்கு மண்டபமாக—கண்கவர் கலைப் பொருளாக—கல்லறையாக உருப்பெற்றது.

ஷாஜஹான் உடலைமட்டும் காதலித்திருந்தால் மும்தாஜை ஓர் அன்புச் சுரங்கமாகவும், உயிர்த் தோழியாகவும், அந்தரங்க மந்திரியாகவும், அடிமைப் பணியாளாகவும், ஆட்டிவைக்கும் வீட்டரசியாகவும் அவனுல் கண்டிருக்கமுடியாது. ஷாஜஹான் மும்தாஜுக்குப் பளிங்கு மண்டபம் மட்டும் அல்ல, ஒரு மண்குடிசைகூட எடுத்திருக்கமாட்டான்.

கண்கவரும் தாஜ்மஹாலின் எழில்மிகு தோற்றப் பொலிவில் காவியப் பண்பு பயக்கும் அவலச் சுவையின் எதிரொலியைக் கேட்பதுபோல்—பார்புகழும் பல்கலைக்கழக மண்டபத்துக்கு எதிரிலே தன்னுடைய இறுதிப் பயணத்தை முடித்துக்கொண்ட தமிழர்களது ஒப்பற்றத் தானைத் தலைவரான பேரறிஞர் அண்ணு அவர்களது நினைவு மண்டபத்தைக் காணுகின்றபோது கத்தும் அலையோசையோடு அவலக்குரலின் ஓங்கார கீதமும் கேட்கின்றது.

ஷாஜஹானின் அன்பு நெஞ்சை—அன்புத் திருவுருவை, தாஜ்மஹால் பறைசாற்றுவதுபோல்—அண்ணுவின் அன்பு நெஞ்சை, அற உணர்வை—அறிவின் திருவுருவை—அவரது நினைவு மண்டபம் நமக்கு நினைவுபடுத்துகிறது. அண்ணு அங்கே உறங்கிவிட்டார், ஆம் இனி அவரது குடியிருப்பு அங்கேதான்.

உலக வாழ்க்கையின் முதல் குடியிருப்பான தாயின் வயிற்றிலிருந்து பெற முடியாத அமைதியை—குழப்பத்திலும், மயக்கத்திலும் உருவான உலகின் மேற் பரப்பிலிருந்து பெறமுடியாத அமைதியை இன்று அவர் கல்லறையில் பெற்று விட்டார்.

முதற்குடியிருப்பில் அவருக்கு உயிரோட்டம் இருந்தது. இரண்டாவது குடியிருப்பில் அவருக்கு நாடக வாழ்க்கையைப் போன்ற உணர்ச்சி இருந்தது. மூன்ருவது குடியிருப்பில் உயிரோட்டம் இல்லை. என்ருலும் அவர் விரும்பிய அமைதியை அங்கு காண்கிருர்.

வரப்போகின்றேன்-வரப்போகின்றேன் என்று அறிவித்தது முதற்குடியிருப்பு. வந்துவிட்டேன், வந்துவிட்டேன் என்று குதித்தது இரண்டாவது குடியிருப்பு வாழ்க்கையின் சக்திகளை அழித்துவிட்டுச் சிந்தனையைத் தூண்டிவிட்டது மூன்ருவது குடியிருப்பு. இங்கே அவர் சுவை மிகுந்த இனிய பாடல்களைக் கேட்கின்ருர். ஆடி முடிந்து விட்ட நாடக நடிகர்களைப் பார்க்கின்ருர். பூமி விளைத்த இலைத் தழை களைத் தின்று மடிந்த மனிதர்களைச் சந்திக்கின்ருர். அவர்கள் தின்றது அவர்களைத் தின்றது. அவர்கள் வளர்த்தது அவர்களைத் தின்றது. இந்தக் காட்சியை வேறெங்கே காணமுடியும்.

சுருக்கமாகச் சொன்ஞல் வாழ்க்கையென்பது இதுதான்.

1. ஒன்றிலிருந்து ஒன்று
2. ஒன்றுக்காக ஒன்று
3. ஒன்றஞேடு ஒன்று
4. ஒன்றைத் தின்று ஒன்று
5. ஒன்றின் மேல் ஒன்று
6. ஒன்றுக்குள் ஒன்று

தாய் குழந்தையைப் பெறுகிருள். இது ஒன்றிலிருந்து ஒன்று. பெற்ற குழந்தைக்காகத் தாய் வாழ்கின்ருள். இது ஒன்றுக்காக ஒன்று. பிள்ளைப்பருவம் வந்ததும் மணம் முடிகிறது. இது ஒன்றஞேடு ஒன்று. உயிர் உணவுப் பொருள் களை நம்பி வாழ்கிறது-வளர்கிறது. இது ஒன்றைத் தின்று ஒன்று. உயிர்கள் பிறந்து விட்ட மண்ணின்மேல் நடமாடுகின்றது. இது ஒன்றின்மேல் ஒன்று. மடிந்தவன் மண்ணுக்குள் புதைக்கப்படுகிருன். இது ஒன்றுக்குள் ஒன்று.

ஆம் அண்ணு அவர்கள் இன்று ஒன்றுக்குள் ஒன்ருகி விட்டார். தமிழோடு தமிழானுர். தமிழரோடு தமிழராகிவிட்டார் தமிழ் நாட்டோடு பிரிக்க முடியாவராகிவிட்டார். தமிழ் நெஞ்சத்தில்—தமிழர் வாழ்வில் தமிழ் நாட்டு வளத்தில் இணைந்து விட்டார் அண்ணு-மறைந்தவருக்கு அவர் தெரிந்தவர். இருப்பவருக்கு அவர் புரிந்தவர் வருபவர்க்கு அவர் தெரிவிப்பவர் இப்படி ஒன்றுக்குள் ஒன்ருகிவிட்ட அண்ணு அவர்களை நினைப்போம். அவர்தம் கொள்கை வழி நடப்போம். கண்ணியத்தைக் காப்போம்.

★

என்னை யேன் விட்டனை?

உ. சி. மணி நடராசன், பேரவை மாணவர் தலைவர்.

செங்கதிர் ஒளியுமெங்கே? சிறுகுயில் இசையுமெங்கே?
தண்ணொளி நிலவுமெங்கே? தாவுநீர் ஒலியுமெங்கே?
தாங்கொணாத் துயரமிழ்ந்த தமிழ்த்திரு தாயுமெங்கே?
சென்றஎம் தலைவனோடு சென்றதோ சீர்களெல்லாம்?
எங்குநான் நோக்கினாலும் ஏக்கமே காண்கிறேனே
சென்றனை சென்றபோது சிறியனை விட்டுச்சென்றாய்
என்னநான் தவறிழைத்தேன்? என்னையேன் இங்குவிட்டாய்?
மன்னனைக் கண்டபோது மாலினைக் கண்ட நாட்டில்
அண்ணனைக் கண்டபோது அரியரன் கண்டவாறாய்
செய்வதுன் ஆணைஎன்று சேனையில் ஒருவனாக
உய்ந்திருந் தென்னைவிட்டு உலகையும் இங்குவிட்டுச்
சென்றஉன் நினைவினாலே சிதறிடும் நெஞ்சினிற்கு
அண்ணலே ஆறுஇல்லை ஆறுதல் ஏதுமில்லை
எண்ணுதும் உனையடைய இங்குள நாட்களையே.

வேறு

அன்பறிவு அடக்கத்தில் ஆற்றல் மிக்க
அறிவுலக மேதைஎம தறிஞர் அண்ணா!
நண்பரிவர் பகைவரென மாற்ற மின்றி
நாமெல்லாம் ஒருகுடும்ப மென்றார் அண்ணா!
என்பினையும் உடலினையும் இந்நல் நாட்டு
ஏற்றத்திற் குரித்தாக்கிச் சென்றார் அண்ணா!
தன்மானம் கொண்டிங்கு தமிழன் வாழ்ந்து
தலைதூக்கி நின்றிடவும் உழைத்தார் அண்ணா!

கந்தைஉடுத் திருக்கின்ற ஏழை மக்கள்
கைகூப்பித் தொழுகின்ற தகையோன் அண்ணா!
தந்தைபெரி யார்வழியே வளர்ந்து தன்னை
தரணிபுகழ் அளவிற்கு உயர்த்திக் கொண்டோன்!
எந்தமிழர் நலமொன்றே கருத்தாய்க் கொண்டு
எத்திசையும் தமிழின்மணம் கமழ வைத்தோன்
இந்தச்சிறு தம்பிக்கு அண்ணா வேந்தாய்
என்றன் திருநெஞ்சத்தே நிலைத்து விட்டாய்!

அண்ணு-புத்துலகப் பூங்கா

சி. பரமசிவம், இளங்கலை, இரண்டாமாண்டு

"In life we find some are great;
Few are good and very few are both
Great and good" —Colton.

ஆம், வாழ்க்கையிலே பல நல்ல மனிதர்களைச் சந்திக்கிறோம்; சில உயர்ந்த மனிதர்களைச் சந்திக்கிறோம். ஆனால் மிகச் சிலரே நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்குகின்றனர். அத்தகைய வரிசையிலே வைத்து எண்ணத்தக்க பெற்றியும் பெருமையும் பெற்றவர் அறிஞர் திலகம் அண்ணு அவர்கள். "வாழ்க்கையிலே நாம் ஒரு முறைதான் இந்தவழியாகச் செல்லுகின்றோம்; வந்த பாதையிலே திரும்பி நாம் செல்வதில்லை. ஆகவே என்னுலான பணிகளை என்னுடைய நாட்டிற்குச் செய்வேன்" என்ற ஓர் ஆங்கில அறிஞன் கூற்றுக்கு அரணுக நின்றவர் அறிஞர் அவர்கள். "ஏதிலியின் வாய்க்குச் சோறு ஊட்டாத ஒரு ஆண்டவனை அல்லது சமயத்தை, கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைக்காத ஒரு கடவுளை அல்லது சமயத்தை நான் நம்பமுடியாது" என்று விவேகாநந்தர் விளம்பியதைப் பேச்சாலும் எழுத்தாலும் இந்தப்பைந்தமிழ் மக்களுக்கு ஊட்டினர்.

தமிழரைப் பொறுத்தமட்டில் அறிஞர் அண்ணு அவர்கள் செய்த அரும் பெருஞ்செயல் ஒன்று உண்டு. அதுதான், முன் எக்காலத்திலும் காண முடியாத—எவராலும் செய்ய இயலாத-இதுவரைத் தமிழர்க்குள் இருந்திராத பெரியதொரு கூட்டுணர்ச்சியை, ஓர் இனப்பற்றைத் தமிழர்க்கிடையில் உண்டாக்கிக் காட்டியதாகும். இவ்வரும்பெரும் விழிப்புணர்ச்சியே ஓரினம் தன்னைக் காத்துக்கொள்ள முதற்கண் எழுப்பிக்கொள்ள வேண்டியதொரு வல்லாற்றலாகும். தன்னினத்தை நிலைப்படுத்திக் கொள்ள அமைத்துக் கொள்ள வேண்டியதோர் அடிப்படையுமாகும். இவ்வரிய இன்புணர்வை அறிஞர் அண்ணுவால்தான் ஆக்கிக் காட்ட முடிந்தது என்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

நெருப்பை நிலவென்றும், தேள்கடியைத் தென்றலென்றும், பாம்பைப் பரமனென்றும் நம்பினோர் எவ்வித ஏமாற்றத்தை அடைவரோ அவ்வாறு சீனரைச் சிறந்தவர்களென்றும், பாகிஸ்தானியர்களைப் பண்புள்ளவர்களென்றும் நம்பி கெட்ட நமதுபாரதத் தாய்க்கு நெருக்கடி உற்றபோழ்து, "நீதிக்காக,நேர்மைக்காக, உரிமையைக் காத்திட அநீதியை அழித்திடக் கிளம்பும்"படை வீர தீரத்துடனும், தியாக உணர்வுடனும், தாளின் கீழ்வீழ்ந்து தாசராவதைக்காட்டிலும் மண்ணிலே மாற்றான் வாளால் வெட்டுண்டு நம் தலை உருளட்டும்; கழுகு உடலைக்கொத்தித் தின்னட்டும்; செத்துத் தொலைந்தான் சீறிப்போரிட்டவன் என்று கூறிக் கேலி பேசட்டும்; 'தாக்கமுனைந்தோம் தாள் தொழுதான்-உயிர்ப்பிச்சை தாரும்; உமக்கு

நான் எதனையும் உடமையாக்குகிறேன்' என்று கெஞ்சினுன் என்று எதிரி பேசும் பேச்சைவிட சாவு கொடுமை உள்ளது அல்ல என்ற உணர்ச்சியுடன் போரிடும் படை மண்ணுக்காக அல்ல, மானத்திற்காக'' என்று மேடைகளிலே முழங்கி வீறு கொண்டெழச் செய்தார் அண்ணு. 'அரசியல் ஒரு சாக்கடை' என்ற மேலே நாட்டு மேதைகளின் கருத்தையெல்லாம் மாற்றும் பொருட்டு, 'அரசியலிலே நாணயமும் மாற்ருரைப் போற்றும் பண்பும் இருந்தால் அரசியல் ஒரு பூக்கடையாகவும் திகழும்' என்று முழங்கி, அவ்வண்ணமே பூக்கடையாக மாற்றுவதிலே ஓரளவு வெற்றியும் கண்டவர் 'புத்துலகப் பூங்கா' அண்ணு அவர்கள்.

> "மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்றும்
> வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க் கில்லை;
> பொய்க்கூற்றே சாதிஎனல்; ஆரி யச்சொல்:
> புது நஞ்சு! பொன் விலங்கு! பகையின் ஈட்டி!"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்துக்களைப் பாமரமக்களின் உள்ளங் களிலே வித்திட்டவர் அறிஞர் அண்ணு. "மனிதனை, வரலாறு அறிவுடையோனுக்கு கின்றது; பாவலர்கள் பண்பாளர்களாக்குகின்ருர்கள். ஆனுல் அரசியல்வாதி கள் மனிதனை அறிவிலியாக்குகின்ருர்கள்'' என்ற ஆங்கில மெய்யறிவாளனின் கூற்றைப் பொய்ப்பித்துக்காட்டி, அரசியல்வாதியாலும் மக்களை அறிவாளிகளாகவும் தெளிந்த அரசியல் அறிவு பெற்றவர்களாகவும் மாற்ற முடியும் என்று நிரூபித்துக் காட்டினுர். 'மனிதனைத் தெய்வமாக்குவது இருக்கட்டும்; மனிதனை மனிதனுக்குங் கள்,' என்று பிரெஞ்சுப் புரட்சி எழுத்தாளன் ரூசோ கூறிய மொழியின் வழியே நின்று, தாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தன்மானமுள்ளவர்களாக மாற்றிய பெருமை புரட்சிவீரர் அண்ணுவையே சாரும், குற்றமே புரியாமல் மற்றவரும் போற்றும் வண்ணம் நற்றமிழுக்குத் தொண்டாற்றிய சீற்றமில்லா ஆற்றல்மிகு கொற்றவன் நமது அறிஞன்,

குளத்துத் தாமரைக்கு ஒருபுறம் தண்ணீரின் தட்பமும் மறுபுறம் கதிரவனின் வெப்பமும் படுவதுபோல, இப்படிப்பட்ட பெருந்தகை தோன்றி தமிழினத்தைத் தலைநிமிரச் செய்தார் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியும், நம்மையெல்லாம் துன்பக்கடலிலே தள்ளிவிட்டு 'எதையும் தாங்கும் இதயத்'தோடு கடற்கரையில் உறங்குவதை நினைக்கும்போது ஆற்ருெணுத் துயரமும் அடைகிருேம்.

> "மன்னன் அவன் திரும்பி மீண்டுமிங்கே வாரானே?
> இன்பக் கவிமலர்கள் இத்தரையில் பூக்காவோ?

என்று கவிஞர் வல்லம் வேங்கடபதியவர்கள் எழுதியிருப்பதில் பாரதிதாசனின் மறை விஞல் ஏற்படும் ஏக்கம் கலந்த உருக்கம் வெளிப்படுகின்றது,'' என்று கூறிய தமிழ்த்தாயின் முதல் மகன் அண்ணு அவர்களின் மறைவுக்கும் நமது கவிஞரின் மேற்கூறிய கவிதையடிகள் பொருந்துவதோடு, நம்மையெல்லாம் ஏக்கம் கொள்ளவும் செய்கின்றது. முத்தமிழ் வாழும் அளவுக்கு மூன்றெழுத்து வேந்தன் 'அண்ணு' அவர்களின் புகழ் வாழ வேண்டும்!

★

"உண்டால் அம்ம இவ்வுலகம்"

க. நடவரசன், இளமறிவியல், இறுதியாண்டு.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவனின் இலக்கணத்திற்கு இலக்கியமாய் வாழ்ந்தவர்கள் காந்தி, புத்தர், இயேசு, அண்ணா ஆகியோர். இவர்கள் அன்பு, பண்பு, அடக்கம், எளிமை தூய்மை இன்னபிற பண்புகளால் உயர்ந்து நிற்பதை நாம் காணலாம்.

"ஒரு தலைவர் அறிவாளியாக இருக்கலாம்; ஆனால் மற்றவர்களையும் அறிவாளியாக்குபவர்தான் மிகச் சிறந்த தலைவர்." காந்தியடிகள் தன்னைச் சுற்றி இருந்தவர்களை, நேரு, படேல் போன்றவர்களை எப்படிச் சிறந்த தலைவர்களாக உருவாக்கினாரோ அவ்வாறே பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர், நாவலர், மற்றும் எண்ணற்ற தம்பிகளையும் சிறந்த தலைவர்களாக உருவாக்கினார்.

இன்றைக்குக் காந்தியடிகளின் நேர்வாரிசுகளான பேராயக் கட்சியினர் ஆட்சி செலுத்துகின்ற மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கை எடுத்து விட்டபோது, தென்னகத்துக் கோமான், "மதுப்பழக்கம் மனிதப் பழக்க முறைகளைமட்டு மல்ல, வாழ்க்கை நெறிகளையும் கெடுக்கிறது" என்று கூறி மதுவிலக்கை நடை முறைக்குக் கொண்டு வந்தவரைத் தென்னாட்டுக் காந்தி என்று கூறுவது தவறாகாதல்லவா? அமெரிக்கக் காந்தியென்று மார்ட்டின் லூதர்கிங்கையும், ஈழத்துக் காந்தியென்று செல்வநாயகத்தையும் எந்தெந்த கரணியங்களுக்காக அழைக்கின்றார்களோ, அதே கரணியங்களுக்காக அண்ணா அவர்களையும் தென்னாட்டுக் காந்தி எனலாம்.

"அரசியலில் வன்முறையை விலக்கி அன்பு முறையை மேற்கொள்வதுதான் உண்மையான காந்தீயம்" என்று உன்னதமான கொள்கையைக் கடைப்பிடித்த தால்தான் அண்ணா அவர்களைக் காந்தியார் என்றனர்.

சென்ற ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் புகை வண்டிகள் கொளுத்தப்படுவதைக் கண்டு அண்ணா மனம் கலங்கக் கூறினார், "இரயில் பெட்டிக்கு வைக்கும் தீ என் நெஞ்சுக்கு வைக்கும் தீ." இத்தகைய காந்தீயப்பண்பு அண்ணன் உள்ளத்தில் சுடர்விட்டதால்தான் செயப்பிரகாசரும் குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரியும், ஆந்திரத்து முதல்வர் பிரும்மானந் தரும், காந்தீய நூற்றாண்டு விழாக் குழுவினரும், அண்ணா அவர்களை, "உண்மை யான காந்தீயவாதி" என்றனர்.

காந்தியடிகள் தன்னைத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்று கூறிக் கொள்வார். தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக கடைசிவரை பாடுபட்டார். பேரறிஞர் அண்ணா அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக, முன்னேற்றத்திற்காக மிகவும் பாடுபட்டார். அண்ணா அவர்கள், "சமுதாயம் என்பது மனிதனின் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவனுக்குச் சரியான பாதையைக் காட்ட வேண்டும். மக்களின் ஒரு பகுதியினரைத் தீண்டத்தகாதவர்களாய்க் கருதி சமூக ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கும் ஒரு மதத்தை யாரும் ஏற்க முடியாது. மென்மையாகவும், அழகாகவும் துவக்கத்தில் இருக்கும் மெத்தைத் தலையணைகள்தான் நாளடைவில் மென்மை குறைய அவற்றின் இடுக்குகளில் தேள் குஞ்சுகளும் இருக்கும். அப்போது படுக்கையை உதறிப் போடுவதுபோல் நாம் மதத்தில் படிந்துவிட்ட மாசுகளைப் போக்க வேண்டும். மதத்தில் உள்ள அழுக்குகளை அகற்றும் பணிகளுக்கு என்னை நான் ஒப்படைத்து வருகின்றேன்" என்று 9—9—67ல் நடைபெற்ற காரைக்குடி விழாவில் கூறியுள்ளார்.

"மகாத்மா காந்தியடிகள் சமத்துவத்திற்காகப் பெரும் வேலை செய்தார்கள். அண்ணா அவர்கள் தம் இயக்கத்தால் சமுதாயத்தில் கீழ்த்தளத்தில் உள்ள பலரும் ஒரு விழிப்பு பெற்று உயர்ந்த எண்ணத்தைப் பெறச் செய்துள்ளார்" என்று கற்றுணர்ந்த அறிஞர்கள் போற்றும்படி வாழ்ந்தவர் அண்ணா அவர்கள்.

அடிக்கடி காந்தியடிகள் "பசிமிகுந்த ஏழைக்குக்கடவுள் ரொட்டி உருவத்தில் காட்சியளிக்கின்றார்" என்று கூறுவார்கள். அதனால்தானோ என்னவோ தென்னாட்டுக் காந்தி ஆட்சிக்கு வந்த உடனேயே பசி மிகுந்த ஏழைக்குக் கனத்த இயந்திரங்கள் மூலம் கடவுளைக் காட்டவில்லை. படியரிசிமூலம் கடவுளைக்காட்டினார்.

1958ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாநகராட்சிக்கு வந்தபோது அண்ணாவுக்குச் சிலையெடுக்க அவரிடம் அனுமதி கேட்டனர். அப்போது அண்ணா அவர்கள் "எனக்கு அரசினர் செலவில் சிலை தேவையில்லை. இத் தமிழகத்தை ஆட்சி செய்கின்ற காமராசருக்குச் சிலையெடுங்கள்" என்று கூறி மறுத்துவிட்டார். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று மாற்றாரையும் மதிக்கும் பண்பு அந்தத் தென்னாட்டுக் காந்திக்குத் தவிர யாருக்கு வரும்?

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்ற வள்ளுவனின் வாய் மொழிபோல் காந்தியடிகளும் அண்ணா அவர்களும் மாற்றாரையும் கவரக்கூடிய வகையில் நாவன்மை கொண்டிருந்தார்கள். ஆங்கிலேயர் காந்தியடிகளுக்கு எவ்வாறு மதிப்புக்கொடுத்துப் போற்றினரோ அவ்வாறே அண்ணா அவர்களையும் மாற்றுக் கட்சியினர் மதித்துப் போற்றினர்.

வால்டேரின் எழுத்து வன்மை, சிசரோவின் பேச்சாற்றல், கரிபால்டியின் அரசியல் தந்திரம், காரல் மார்க்கசின் தத்துவம், சீசரின் வீரம், சர்ச்சிலின் தைரியம் இவையனைத்தும் ஒருங்கே பெற்றிருந்த அண்ணா, புத்தரின் கருணையையும் இயேசுவின் அருள் புரியும் தன்மையையும் காந்தியின் கொள்கையையும் தன்னகத்தே கொண்டிருந்தார்.

"இன்னு செய்தாரை பொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்"

என்ற பண்பில் அசையா நம்பிக்கைக் கொண்டிருந்தார். எத்தனையோபேர் எப்படியெப்படி யெல்லாமோ பேசினாலும் "பொறுமை கடலினும் பெரிது" என்றிருப்பார். இதற்கெல்லாம் அவர் கூறுகின்ற ஒரே கரணியம், "தம்பி! முன்னேறுபவனைக் கண்டால் பின் தங்குபவன் ஏசத்தான் செய்வான். இதில்தான் நம் முன்னேற்றம் தெரிகின்றது" என்பதுதான்.

"PAT THE POOR AND TAP THE RICH" என்று வீரமுழக்கம் செய்து, பெரும் பெரும் பணக்காரர்களை மேலும் மேலும் வளர விடாமல் கட்டுப்படுத்தி, ஏழைகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

"மார்விம்மப் பெருமிதத்தில் மகிழ்ச்சி கொண்டு
மாத்தமிழே! மணிவிளக்கே! மலர்ந்த கண்ணே!
ஊர்தோறும் உன்குரலே ஒலிக்கக் கேட்டேன்
உலகமெலாம் உன்புகழே ஒலிக்கக் கேட்பேன்
குமுறுகின்ற நெஞ்சத்தின் குரலை இன்று
கொடுக்கின்றேன் கேட்பாய் நீ"

என்று வல்லம் தந்த வெல்லக் கவிஞர் கேட்பதுபோல் நாம் கேட்டால்,

"தமிழ் மண்ணில் பிறப்பதுவே இன்பம் மேலும்
தமிழ் மொழியைக் கற்பதுவோ பெரும் பேரின்பம்
அமிழ்திருக்கும் பொற்கிண்ணம் வேண்டாம்! என்றன்
அருந்தமிழின் அள்ளுசுவை ஒன்றே போதும்"

என்று ஊருக்கெல்லாம், உலகத்துக்கெல்லாம் எடுத்துக் கூறிவந்த அண்ணா அதே கவிஞர் வாயிலாக,

"நான் சாகமாட்டேன், சாகமாட்டேன்
நடை தளர்ந்து விழமாட்டேன்; ஓடிய மாட்டேன்.
வீண் கவலை படமாட்டேன்; கலங்க மாட்டேன்!
வண் தமிழால் உயிர்பெற்றேன்; நிலைத்து விட்டேன்"

என்று கூறுகின்றாரோ?

இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனக்கருதி தமியர் உண்டலும் இல்லாத, முனிவில்லாத, துஞ்சலும் இல்லாத, பிறர் அஞ்சுவது அஞ்சிப்புகழ் எனின் உயிருங்கொடுக்கும், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளாத, அயர்வு இல்லாத, அன்னமாட்சி அனையராகித், தமக்கென முயலாமல், பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்பு உடையவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்ததால்தான்—அவரைப் போன்றோர் வாழ்வதால்தான்—உண்டால் அம்ம இவ்வுலகம்.

காலத்தை வென்றவர்

கோ. தமிழ்வாணன், இளமறிவியல் இறுதியாண்டு, பேரவைச் செயலாளர்.

கவியானாய் வரலாற்றில் காப்பியத்தில்
கருப்பொருளாய் நீயானாய் தமிழகத்தில்
கவிகின்ற இருள்நீக்கும் கதிரோன் ஆகி
களைந்தாயே அறியாமை என்னும் நோயை.

வழிகாட்டி வந்தோனே வறுமை நீக்கும்
வகை காட்டிச் சென்றோனே; ஒளிரும் உந்தன்
விழிகாட்டிச் செல்கின்ற பாதை தன்னில்
விரைவோடு செல்வோ மென்றுரைவோம் அண்ணா.

பாமரனும் படித்தோனும் போற்றுகின்ற
பாங்கான தலைவன் நீ பறந்து சென்றாய்
நாமெல்லாம் ஒரு குடும்ப மக்கள் என்று
நாவாரக் கூறிய ஓர் தலைவன் நீதான்!

காசினியில் தேடிடினும் கட்டெடுத்துக்
காலத்தின் வரலாற்றைப் புரட்டும் போதும்
மாசின்றி வாழ்ந்த ஒருமனிதன் உன்போல்
மாமணியே இல்லையென ஏடே சொல்லும்.

கோபந்தான் எங்கள் மேல் கொண்டாயோதான்
கோமானே கூறுதற்கு நீயிங்கில்லை
தீபந்தான் நீயானாய் தமிழர் தம்மின்
தீதகற்ற வந்தோனே! தேம்பு கின்றோம்.

திக்கற்று நிற்க எமை வைத்து உந்தன்
திங்கள் முகம் மறைத்தெங்கே சென்றாய் அண்ணா
செக்கினிலே வைத்த பொருள் போன்று நெஞ்சம்
சுக்கல் நூறாகாமலிருப்ப தேனோ?

எத்தனையோ கோடியுயிர் உன்னைக் காக்க
இன்னுயிரை ஈந்திடவும் துடித்தோம் ஆனால்
அத்தனையும் வீணான தண்ணா எங்கள்
அனைவரையும் நட்டாற்றில் நீந்த விட்டாய்!

நீபோன பின்பிந்த அவனி தன்னில்
நிகழ்கின்ற தெல்லாமே காண இன்னும்
தீதான உயிர்வைத்து வாழ நீயும்
தியாகத்தின் திருவாக ஆனாய் அண்ணா

ஏனின்னும் நீயின்றி வாழுகின்றோம்
இதயத்தின் இருப்பிடமே சென்ற பின்பு?
தேனென்று உயிரைத்தான் நினைத்தா விட்டோம்
தினையேனும் பயனில்லா வாழ்வும் ஏனோ?

உலகத்தை நீவிட்டுச் சென்றாயென்று
உத்தமனே நான்கேட்டு உயிரை இன்னும்
உலவத்தான் விட்டிங்கு வாழ்தல் உந்தன்
ஒப்பற்ற பாதையிலே செல்லவன்றோ.

கண்ணற்ற உயிராகக் கவலுகின்றோம்
கரவற்ற நெஞ்சோனே! உன்னையின்றி
எண்ணற்றோர ழுகின்றோம்; என்றும் எங்கள்
எண்ணத்தில் இல்வாழும் அறிஞர் கோவே.

முக்கனிபோல் கொத்தாக கொள்கை தந்த
முத்தமிழ்த் தாய் மூத்தவனே முடிதரிக்கத்
தக்கவனே தகையோனே தமிழினத்தைத்
துக்கமெனும் கடலினிலேன் மூழ்க வைத்தாய்?

ஓடி விளையாடுகின்ற குழந்தை கட்கும்
ஓய்ந்த வாழ் வெய்துகின்ற முதியோர் கட்கும்
கோடித்தமிழ் மக்களுக்கும் நீயே அண்ணன்
கொடுமையினால் நீ எம்மை விட்டகன்றாய்.

காந்திக்கும் நேருக்கும் இல்லா மக்கள்
கடல் போலும் உன் கடைசிப் பயணம் காண
சேர்ந்தாரே என்றாலுன் புகழைச் சொல்ல
சிந்தைக்கும் ஏட்டிற்கும் பஞ்சம் அண்ணா!

உள்ளது ஓர் உயிர்தானே தம்பி! அந்த
ஒன்றும்தான் பொன்றும், ஓர் காலந்தானே
நல்வழி இதனைநீ நல்கு என்ற
நற்கோவே அதைச்செய்து விட்டாய் நீயே.

★

பெரியாரைப்பற்றி அறிஞர் அண்ணா

இரா. சனார்த்தனன், (மக்கட்செல்வன்) இளங்கலை, இரண்டாமாண்டு

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது வள்ளுவர் வாக்கு. நீராருங்கடலுடுத்த இந்நிலமடந்தை பற்பல தவப்புதல்வர்களை ஈன்றிருக்கின்றாள். அவ்வரிசையில் தலை சிறந்த தலைமகன் அறிஞர் அண்ணா அவர்களே என்றால் மிகையாகாது. இத்துணைச் சிறப்பிற்கும், புகழுக்கும் உரிய, தமிழர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களை உருவாக்கிய பெருமை முற்றிலும் தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களையே சாரும். இருவருக்குமிடையே இடையில் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பினும், 'தமிழர் நலனை'ப் பேணிக்காத்தலையே மாபெருங்குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இன்றும் தந்தை பெரியார் அவர்கள் தம்முடைய தொண்ணூறாவது வயதிலுங்கூட தமிழர்நலனைப்பேணிக்காப்பதில் கண்ணுங் கருத்துமாக பணியாற்றி வருகின்றார்கள். அறிஞர் அண்ணா அவர்கள், உலகுடன் ஒப்பிட்டுத் தந்தை பெரியாரைப்பற்றிக் கூறிய கூற்றைக் கீழே தருவதில் பெருமையடைகின்றேன்.

"விசித்திர வைதிகர்களை வீதி சிரிக்கச் செய்தவர் சாக்ரடீசு! உலக முணராதவர்களுக்கு அது உருண்டை என்றுரைத்து, உதைபட்டார் கலிலியோ! வைதீகத்தின் மடமையை வாட்டினார் வால்டேர்! மக்கள் மன்றத்திற்கு மதிப்புத்தர வேண்டுமென்றார் ரூசோ! வேதப் புத்தகத்தை விற்று, விபசார விடுதிகட்குப் பணம் தருவதைக் கண்டித்தனர் விக்ளிப் சுவிங்கிலி, மார்ட்டின் லூதர் போன்றோர். அடிமைகளை விடுவித்தார் ஆபிரகாம் இலிங்கன்! முதலாளிகளின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல் மார்க்சு! அவர்களுக்காகப் போராடினார் இலெனின். சீனர்களின் சிறுமதியைப் போக்கினார் சன்-யாட்-சென். துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால்! இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் இங்கர்சால்! பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்சா. வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வறுமையின் கொடுமை; வஞ்சகத்தின் ஆட்சி-இவைகள் இருப்பதைப் படம் பிடித்துக்காட்டினர், கோர்க்கிடர்கினவ், டாசுடாவசுகி, சிங்களோர் போன்ற எண்ணற்றவர்கள். இவர்களும், இன்னமும் எண்ணற்றவர் களும் தோன்றித் தொல்லைப்பட்டுத் தூற்றப்பட்டு, கொடுமைக்கு ஆளாகி

மனித சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகக் கொள்கைகளை, புதுக் கோட்பாடுகளை, எவர்க்கும் எதற்கும் அஞ்சாது கூறி, பாமரனுக்காகப் போராடியதால் இன்று பல்வேறு நாடுகளிலே மக்களின் மனம் விடுதலை பெற்றது அடிமை மனப்பான்மை அகன்றது. அதனால், அங்கு ஒரு நாட்டை இன்னொர் நாடு, அடக்க முடியவில்லை! அடக்கினால் எரிமலை கக்குகிறது. மக்கள் மனம் என்னும் கடல் பொங்கி வழிகிறது. புரட்சிப்புயல் வீசுகிறது! அதன் முன்பு எக் கொடியவனாலும் நிற்க முடியவில்லை. இங்கே நடக்கும் கொடுமைகளைக் கண்டித்து, எடுத்துக் கூறி எதித்தவர் தந்தை பெரியார் ஒருவர்தானே!

"உலகிலே பற்பல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசும் நாவலரை நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்கும், தந்தை பெரியாருக்குமுள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை உணர வேண்டுகிறேன். அவர்கள் படித்த பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர்; அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே கல் வீச்சு, மண் வீச்சுகட்கிடையே என்பதை அறிய வேண்டும்."

அண்ணா!

மாநிலத்தின் ஓர் அண்ணன்
மாந்தமிழின் சீர்வண்ணன்
நாநிலத்தின் குறை தவிர்த்த
நாவல்லான்; நற்றமிழன்!

பாரதத்தின் மா மணியாம்
பண்பாளர் காந்தியாரின்
வாரிசென்று தென்னகத்தில்
வந்துதித்த எம் கோமான்!

சாதியெனும் நோய் நீங்க
சரித்திரத்தின் நாயகனாய்
மேதினில் ஓர் கதிராய்
மேவியரெம் அண்ணாவே!

ந. அன்பழகன்,
இளங்கலை, இரண்டாமாண்டு, வரலாறு

அண்ணனுக்கு

அண்ணா. முருகன், இளமறிவியல் இறுதியாண்டு.

ஏடு எடுத்தேன்—எழுதுகோலைக் கையில் பிடித்து எழுத முயன்றேன் முடியவில்லை. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வடலூர் வள்ளலாரின் பாமாலை மொழி நின்று வாடிய மக்களைக் கண்ட போதெல்லாம் வாடுகின்றேன் என்ற ஒப்பற்ற திருமேனி மண்ணில் மறைந்ததே என்று மனம் குமுறுகிறது. தமிழ் மக்கள் நெஞ்சத்தில் தஞ்சம் புகுந்ததை எண்ணி இவர்களைக் (தமிழ் மக்களை) காப்பாற்று என்று தமிழ்த் தாயிடம் கூறி அவளிடமே தஞ்சம் புகுந்தாயோ அண்ணா! உன்னை அண்ணா! எனும்போது உடன் பிறந்த அண்ணனிடமே இல்லாத பாசம் எழுகிறதே. உம்மைப் பார்க்க இயலாத நாங்கள் எவற்றைப் பார்த்துத் தேறுவது—நீ செய்த சாதனையை நினைவதா—ஆற்றிய உரையினை நினைவிற் கொள்வதா, எழுதிய கதையை—கட்டுரையை, மடலைப் படிப்பதா? இவற்றையெல்லாம் நினைத்தாலும் பார்த்தாலும் போற்றினாலும் உன் உருவத்தை, உயிரோட்டமான உன்னுடைய காந்த முகத்தைப் பார்க்கவே உள்ளம் துடிக்கிறது. அண்ணா!

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றாய். அந்தத் தேவன் நீயன்றி யாருமில்லை. வணங்கும் முறைகளை எதிர்த்தாய்—ஆனால் உனை வணங்கும் முறைகளை எதிர்க்கவல்லார் யாருமில்லை. வல்லான் நீ ஒருவன்தானே; தீந்தமிழ்ச் சொல்லானும் நீயேதான். தெய்வத்தின் தெய்வமாகிவிட்டாய். இந்த மண்ணில் நீ அடைந்த புகழ் போதும் என்று விண்ணிலும் அதைப் பெறவே சென்று விட்டாயோ?

உன்னாலே தமிழகம் உருப்பெற்றது என்பேன்—உன் ஆட்சிக் காலத்தில் தானே தமிழ் நாடு என்று பெயர் வைத்தாய்—இல்லை இல்லை மீண்டும் பண்டிருந்த பெயரினையேதான் வைத்தாய் என்றாலும் மற்றவர் செய்திலர்—நீ செய்து விட்டாய். தமிழ் கூறும் நல்லுலகம் என்றே இலக்கியத்தில் படித்தேன். ஆனால் நீயோ தமிழ் நாடு என வைத்து எல்லோரையும் அழைக்கச் செய்தாய். பெயர் மட்டுமா வைத்தாய்—எங்கும், எதிலும்—தமிழ் என்றாக்கிவிட்டாய்.

தமிழில் தன்னைப் புலவன் இல்லை எனக் கூறிக் கொள்வாய். ஆனால் உன்னைவிடப் புலவன் இல்லை என்பேன். எப்படியென்பாய் நீயும் மற்றவருடன் சேர்ந்துகொண்டு. நாவலர் சோமசுந்தர பாரதியாரையும் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளையையும் இலக்கிய வாதிலே வென்றாயே அதை விடவா சான்று வேறு தேவை என்பேன். சங்கம் வைத்தே தமிழ் வளர்த்தார் பழங்காலத்துப் புலவர். அவர் தமிழோ, அரசனும் அவையோரும் நுகரும் வண்ணமே இருந்தது. ஆனால் நீயோ பாமரரும் போற்றும் வண்ணம் படித்த மேதைகளும் வியக்கும் வண்ணம் மாற்றாரும் அழுக்காறு அடையும் வகையில் மேடை போட்டுத் தீந்தமிழ்

வளர்த்தாய். ஏட்டினிலும் வளர்த்தாய்—பட்டி தொட்டிகளிலும் தமிழ் வளர்த்தாய்—சேமமுற வேண்டுமெனில்தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்றான் புதுமைக் கவிஞன் பாரதி. ஆனால் செழிக்கச் செய்தது மட்டு மல்ல கொழிக்கவும் செய்து விட்டாய்.

"குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்,"

என்றார் வள்ளுவனார்—ஆனால் அவரே இன்று இருந்திருந்தால் உன் சொற்கேளாதவரே மழலைச்சொல் இனிது என்பர் எனக் கூறுவார். நீயே தான் வள்ளுவன் என்பேன். அதனால்தான் உன்னை நீயே உயர்த்திக்கொள்ளவில்லை. அதை அறிந்தேன்—உன்னையே போற்றுகிறேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு — வேண்டும் என்றாய். பிரஞ்சு எழுத் தாளர்களான வால்டேர், ரூசோ போன்றார் சுதந்திரம் — சமத்துவம் — சகோதரத்துவம் — ஆகியவை நாட்டிற்குத் தேவையென்றனர். காந்தியாரோ வாய்மை — அன்பு — இன்னா செய்யாமை மனிதர்களுக்கு மிகவும் தேவையென வலியுறுத்தினார். இவர்கள் வரிசையில் நின்றேதான் நீயும் செப்பிவிட்டாய்—கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வேண்டுமென்று. எந்த நாடும் முன்னேற வேண்டுமென்றால் அடிப்படைத் தத்துவங்களான இவை மூன்றும் தேவை என்பதை யாவரும் உணர்ந்தாக வேண்டும்

தமிழின் தொன்மையை உணர்ந்தவன் நீ. அதனாலன்றோ இந்தி நுழைந் ததைத் தடுக்கவே பாடுபட்டுப் பல துயருற்று எதையும் தாங்கும் இதயம் கொண்டு அரசியலில் வளர்ந்து ஆட்சியைப் பிடித்து இந்தியினை விரட்டிவிட்டாய். எவரும் செய்யாத செயலினைத் துணிந்தே செய்துவிட்டாய். உன் ஆட்சியில் எங்கும் குறள் மணம் பரப்பிவிட்டாய். வள்ளுவன் படத்தினை வைக்கச் செய்தாய். உலகத் தமிழ் மகா நாட்டினைச் சிறப்புறவே இந்நாட்டவருமின்றி எந்நாட்டவரும் போற்றவே நடத்திவிட்டாய்.

பெர்னாட்சா ஒரு நாடக ஆசிரியர்; நீயும் ஒரு நாடக ஆசிரியன். இங்கர்சால்—பகுத்தறிவுவாதி; நீயும் ஒரு பகுத்தறிவுவாதி. வால்டேர், ரூசோ—புரட்சி எழுத்தாளர்கள். நீயும் ஒரு புரட்சி எழுத்தாளன். பொதுப் பணத்தை விரயமாக்கக் கூடாது என்ற காந்தியின் வழியிலே நின்று அரசோச்சி ஓய்ந்து விட்டாய். நடிப்பிலும் சிறந்தவன் நீ. பண்பில் உயர்ந்தவன் நீ. அதனாலன்றோ இத்தமிழ்த் தரணியால் மட்டும் போற்றப்பட்டு வந்த நீ பாரோரும் போற்றும் மகாத்மாவாகி விட்டாய். இந்நாட்டுப் பெருந்தலைவர்கள் இறப்பாராயின் இராணுவ மரியாதைசெய்வது வழக்கம்—ஆனால் தென்னாட்டில் பிறந்த தலைவனுக்கு இராணுவ மரியாதை செய்வது இதுவே முதல் முறை. ஆகவே நீயும் இந்நாட்டுத் தலைவனாகி விட்டாய்.

நீதிக் கட்சியிலே பேச்சாளராக இருந்தாய்—பெரியாரின் திராவிடக் கழகத்தின் தளபதியாக இருந்தாய். கொள்கைக்காக தலைவனையும் விட்டுவிட்டுத் தனிக் கட்சியை ஆரம்பித்தாய். பிரிவினைக் கொள்கையை விட்டாய். பின்பு பாரதம் போற்றும்படி வாழ்ந்து விட்டாய். உன்னைப்போல் வளர்ந்தவருமில்லை. உன் கட்சிபோல் ஆட்சியை அறவழியில் விரைவில் பிடித்த கட்சியுமில்லை.

"உழைப்பு உயர்வு தரும்" என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திவிட்டாய். அனைத்துக் கட்சிகளையும் அன்பாலே அணைத்துச் சென்றாய். பெரியாரின் வழியிலே வந்த நீ இராசாசி அவர்களையும் அணைத்துச் சென்றாய். பேராயக் கட்சியினரும் போற்றவே சென்றுவிட்டாய். புகழ் பெற்றுவிட்டாய்,

வள்ளல்கள் எண்ணிலர் இந்த நாட்டில் பிறந்தார். உன்னைப்போல் யாரும் பிறந்ததில்லை. எப்படி என்பாய் வியப்போடு. நீ காஞ்சியில் தோன்றிய கற்பகத் தரு. எழுத்துச் செல்வத்தைப் பலருக்கு வழங்கிய வள்ளல் நீ. பேச்சுக்கலையை வளர்த்து, அச்செல்வத்தைப்பலருக்குப் பிச்சைகொடுத்து நல்லோர் மெச்ச வாழ்ந்து விட்டாய். நாடகத்தின் வாயிலாக சமுதாயப் பூசல்களை, சாதி வேற்றுமைகளைக் களைந்துவிட்டாய். அதே பாணியைப் பின்பற்றினர் மற்றவரும்—மாட்சி பெற்றார். நடித்துக்காண்பித்தாய்—மற்றவரையும் உன்போல் நடிக்கச்செய்தாய்; அதனால் சிறந்த நடிகர் ஆனார் பலர். கலைஉலகிலும் புரட்சி ஏற்படுத்தி விட்டாய். அதனாலே உன் வழியிலே கலைஞர் ஆனார் பலர். நீ அறிஞன் ஆகிவிட்டாய். இவரெல்லாம் நீயளித்த செல்வங்களைக்கொண்டு பொருட் செல்வம் பெற்று விட்டார் நிரம்ப. இவருக்கெல்லாம் அருட் செல்வம் வழங்கும்படி வள்ளலே உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

'உடலும் உள்ளமும் நலந்தானா" என்று பேத்தி கேட்டது, நாட்டோர் கேட்பதாக எழுதியிருந்தாய். உள்ளத்தினை தமிழரிடத்தில் விட்டுவிட்டய். உடலோடு மண்ணில் மறைந்துவிட்டாய். அந்த உடல் நலந்தானா? என்றே கேட்கின்றேன். ஆனால் நீயோ தமிழர் அனைவரும் நலந்தானா? நலந்தானா? என்றே கேட்கின்றாய்.

'நீ இல்லாத உலகத்திலே நிம்மதி இல்லைதலைவா'! தமிழர் வாழ்வும் வளமும் நீ வாழ்த்துவதிலேதான் இருக்கிறதென்பேன். தலைவா! உன் தாள் பணிந்து கேட்கிறேன் வாழ்த்து உன் வழியினரை. விட்டுச் சென்ற பணியைத் தொடருக! என்று ஆணையிடு. உன் ஆணையை மறுப்பாரும் உண்டா — உன்னை ஒளிவிளக்கு என்பேன்—அணையா விளக்கென்பேன்—ஆனந்த சோதி என்பேன். உன் புகழ் பாடுவதற்கு நேரம் போதுமோ—பாட்டெழுதத் தெரியாது எனக்கு. எனவே. இதையே பாட்டாக — பாமாலையாக — பூமாலையாக — புகழ்மாலையாக ஏற்றுக் கொள்வாய் எனப் போற்றி, என் கண்ணீரால் உன் அடியிணை மலர்களைக் கழுவி, வணங்கி விடைபெறுகிறேன்.

உன் பணியை என்றும் தொடரும்

தம்பி,

அண்ணா. முருகன்.

Democracy

Democracy is not a form of Government alone — it is an invitation to a new life—an experiment in the art of sharing responsibilities and benefits—an attempt to generate and co-ordinate the inherent energy in each individual for the common task..

—ANNA.

மீண்டு வா

வ. சுதர்சன், புகுமுக வகுப்பு, 'இ' பிரிவு.

1. முத்தமிழின் மணம்தானும் முடிசூடு மன்ன நின்ருல்
எத்திசையும் பரவவிட்டே ஏற்றமொடு வாழ்ந்திடுமால்,
உத்தமமாய் இவ்வுலகில் உயர்ந்திருந்த அண்ணுநீ
நித்தியமாய் இவ்விடமே நிலைத்திருக்க வேண்டுகிறேன்.

2. தேமதுரத் தமிழோசை திசையெங்கும் ஒலித்திடவே
பாமன்ன நின்னைப்போல் பார்மீதில் உழைத்தவரார்?
பாமரராய் வாழ்ந்திட்ட பலரிடையே நீமட்டும்
மாமலராய் மணத்தோடு வாழ்ந்திட்ட சிறப்புடையோய்!

3. கடமையும் கண்ணியமும் கட்டுப்பாட் டுடன்கூட
உடமையாய் ஒருவரிடம் உண்டாக வேண்டுமென
மடமைகொள் மாந்தரிடம் வந்துரைத்த அண்ணுநீ
திடத்தோடே இவ்வுலகு திரும்பிடவே வேண்டுகிறேன்.

4. சென்றிட்டான் தலைவனென்னத் தெரிந்திட்ட மாந்தர்கள்
இன்னலெனும் கடலதனில் இழிந்திட்டே வீழ்ந்தார்கள்;
அன்னவரைத் தேற்றிடவே அவனிதன்னில் அண்ணுநீ
நன்னயமாய்த் தமிழ்நாடு நகர்ந்திடவே வேண்டுகிறேன்.

5. இடியெனவே நீசென்ற இயற்செய்தி கேட்டதுமே
கடிதெனவே எண்ணியெண்ணிக் கருவிழிகள் மழைபொழியத்
தடுத்திட்ட துகில்தன்னைத் தாண்டியோடிக் காஞ்சிநகர்
மடித்திட்ட தெனவுரைக்கும் வெள்ளமாக மாறிற்றே.

6. கண்ணீராம் வெள்ளமதில் கரைகாணு இன்னலெனும்
பண்பாடி மிதக்கின்ற பட்டினமே காஞ்சியாகி,
எண்ணவொண்ணுத் துன்பத்தை ஏற்றிட்ட இந்நகர்க்கே
அண்ண நீயும் திரும்பிடவே ஆர்வமொடு வேண்டுகிறேன்.

7. வாழ்கின்ற மக்களுக்கு வயிற்றிற்குச் சோறிடுவாய்;
பாழ்பட்ட வழக்கமதைப் பகலவன்முன் பனியென்ன
வீழ்படுத்தி வைத்திடுவாய் வெற்றிகொள்ளும் சொல்லதனுல்
சூழ்பட்ட இன்னலதைத் துரத்திட்டே ஓட்டிடுவாய்.

8. இத்தனையும் செய்வதற்கு ஈங்குள்ள யாராலும்
சத்தியமாய் முடியாது; சாதலினால் பிரித்திட்டுக்
குத்துயிராய் இங்குளோரைக் கொலைசெய்து விட்டகால!
சத்தமது செய்யாமல் திருப்பிடுவாய் அண்ணாவை.

9. தமிழனென்று சொல்லியேநாம் தலைநிமிர்ந்து நின்றிடுவோம்;
அமிழ்தமென்று தோன்றவைக்கும் அழகுடனே நாடமைப்போம்;
தமிழ்நாடு தானீன்ற தவப்புதல்வன் அண்ணாவே
தமிழ்நாட்டை வாழவைப்பான் தரணிதன்னில் எனநினைத்தோம்.

10. எண்ணிட்டோம் கோடிகோடி எண்ணங்கள்; அவற்றின்மேல்
மண்தூவி விட்டுநீயும் மறைவதென்ன நியாயமாகும்?
உண்டாக்க வேண்டுமாயின் மகிழ்ச்சிதன்னைச் சொல்வல்ல
அண்ணாநீ விருப்புடனே அவனிதன்னில் மீண்டிடுவாய்.

11. கலையிழந்த மதியென்னக் களையிழந்தார் தம்பியர்கள்
மலையன்ன மாண்புமிகு மன்னவன் நீ மறைந்ததனால்
நிலைகுலைந்தார் கடலடுத்த நிலஉலகம் இருப்போர்கள்
விலைமதிக்க இயலாத வெற்றிவேந்தே! மீண்டுவா நீ!

12. எரிமலைகள் ஏதுமில்லை எனினும்தீப் பொங்கியதே
பரிகரிகள் அனைத்தையும் பார்க்குள்ளே தள்ளுகின்ற
அரித்திடுமோர் பூகம்பம் அரியகாலன் ஆயிற்று
சிரித்திட்டே இறந்திட்ட சீர்மையாள! திரும்பிடுவாய்

13. உலகுய்ய உதித்தவனே! உத்தமனாய் வாழ்ந்தவனே!
அலகில்லாச் சொல்லாற்றல் அவனிமீது பெற்றிருந்தோய்!
பலநன்மை நாட்டிற்குப் பகர்ந்திட்டோய்! எழுத்தாள!
நிலத்திற்கே நீவேண்டும்; நேர்பெறவே மீண்டிடுவாய்.

14. மீண்டுநீயும் தோன்றிட்டு விதியனைத்தும் வென்றிட்டு
ஆண்டிடுவாய் தமிழுலகை அருமையொடு; தமிழர்கள்
நீண்டபுகழ் தாம்பெற்று நிறைந்துவாழச் செய்திடுவாய்
அண்ணாநீ இவைகளினால் அவனிக்கே திரும்பிடுவாய்.

‘பிரிவாற்றுமை’

சுப்பு. வடிவேல், இளங்கலை, இரண்டாமாண்டு.

வளர்ந்தோடும் நதியும் வற்றிவிடலாம். உயர்ந்து நிற்கும் மலையும் சரிந்து விடலாம். ஏற்றிவைத்த ஒளியும் அணைந்துவிடலாம். எழுதிவைத்த சித்திரமும் கலைந்துவிடலாம்.

ஆனால்,

நமது அண்ணன், இதய ரோசா, மாந்தருள் மாணிக்கம், கவிஞர்க்குக் கவிஞர், அறிஞர்க்கெல்லாம் அறிஞர், புலவர்களைப் போற்றிய புரவலர், இந்திக்குத் தடைபோட்ட இந்நாட்டின் இங்கர்சால், தமிழுக்குத் தலைமை அளித்த தகைசால் தானைத் தலைவர், நாடும் ஏடும் போற்றும்வண்ணம் நாவன்மை வாய்ந்த நல்லறிஞர், அறிஞர் அண்ணு அவர்களின் புகழ் என்றும் அழியாது நின்றொளிரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அண்ணன் அருமைத் தம்பிகளுக்குக் காட்டிய வழிகள் ஏராளம்! ஏராளம்!! சமுதாயத்தைத் தாங்கப் போகும் எதிர்காலத் தூண்களே! இருட்டில் இருந்தது போதும் இனி வெளிச்சத்திற்கு வாருங்கள் என அன்போடு அழைத்து, அறிவு புகட்டி, அறிவகத்திற்கு வழிகாட்டிய அறிஞர். அறிஞருடைய அன்பில் இளைஞர் சமுதாயமே சிறப்பாக மாணவர் சமுதாயமே கட்டுண்டுவிட்டது. அறிஞர், மாணவர் சமுதாயத்தைப் பார்த்து 'நீங்கள் இரத்தத்தின் இரத்தம், சதையின் சதை' என்று கூறிய அன்பு மொழிகள் இன்றும் அவர்களது நெஞ்சத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்துள்ளன, இதற்கெல்லாம் அவருடைய குற்றமில்லா நெஞ்சமும், குழந்தை உள்ளமுமே காரணம். அண்ணுவின் கட்டளையை மீறிய தம்பிகள் இன்றுவரை தோன்றவில்லை; இனி தோன்றப் போவதும் இல்லை. இத்தகைய சிறப்பு வாய்ந்த அண்ணு இன்று நம்மிடையே இல்லை.

தமிழனைத் தட்டி எழுப்பிய தன்மான வீரர் இன்று மறைந்துவிட்டார்! தமிழகமே, ஏன் தாய்நாடே இன்று கண்ணீரால் கலங்குகிறது. தமிழினமே அழுகிறது. இதற்கெல்லாம் நாம் மாற்றுக் காணப்போவது எக்காலம்! மன நிறைவு அடையப்போவது எக்காலம்!! தமிழன் உயர்வு அடையப்போவது எக்காலம்!!!

அண்ணன் காட்டிய வழியில், அறிஞர் காட்டிய பாதையில் செல்வதுதான் தமிழர்களாகிய நமது தலையாய கடமை. அவருடைய தாரகமந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை நினைவில் நிறுத்தி நாளும் உழைத்துச் சமுதாயத்திற்கு உயர்வு சுட்டுவோமாக!

தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் உருவாக்கப்பட்ட அண்ணு பெரியாரைவிட உயர்ந்தவராக தமிழ்த்தாயின் மூத்த குடிமகனுக விளங்கினுர். எனவே, திருவள்ளுவரின் கூற்றுன,

'பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்'

என்னும் சிறந்த கருத்திற்கு இலக்காஞர். அண்ணு ஆற்றிய அரும்பணிகள், செய்து வித்த செயற்கரிய செயல்கள், இந்தப் பார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், தமிழனுடைய பெயர் உள்ளளவும் நின்று நிலவும். செந்நாப்போதார் போன்று, கடமைக்கும், காதலுக்கும், அன்பிற்கும், அறத்திற்கும் இலக்கணம் வகுத்து நமக்குத் தந்துவிட்டதின் வாயிலாக அண்ணு, திருவள்ளுவராகவே என்றும் நம் உள்ளத்தே நீங்காத நினைவைப் பெற்றுவிட்டார்.

அரசியலில் தனித் திறமை பெற்றிருந்ததால்,

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்'

என்னும் பொய்யில் புலவர் கருத்திற்கு ஏற்றவராக, இலக்கணமாக நடந்து, இன்று கோடிக்கணக்கான தூய உள்ளங்களிலெல்லாம் குடிகொண்டிருக்கிருர்,

அறிஞரின் உள்ளம் ஒரு தூய உள்ளம்; அந்தத்தூய உள்ளத்தே அலைபுரளும் கடலுண்டு; அந்தியின் அழகுண்டு, காலைநேரத்தின் கவர்ச்சியுண்டு, நள்ளிரவின் குளிர்மயக்கமுண்டு, நண்பகலின் கொதிப்புண்டு, வெயில்பரப்பும் கதிரவன்உண்டு, வெண்ணிலாப் பொழியும் திங்களுண்டு. இத்தகைய சிறந்த உள்ளத்தைப் பெற்றிருந்த நமது அண்ணு, மாற்றுன் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் கொடுத்த, மாசற்ற மனமுடைய நமது அண்ணு, நமக்கெல்லாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று கூறி இதையும் தாங்கிக் கொள்ளுங்கள் என்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

உயிரோடு மெய்யாகிப் பின்னர் உயிர்மெய்யாகித் தமிழோடு கலந்துவிட்ட நமது அண்ணனை, இனி எப்பொழுது காணப்போகிருேம். தமிழகத்தின் அறிவுச் சுடர் இனி எப்பொழுது ஒளிவிடப்போகிறது. குணமென்னுங் குன்றேறி நின்ற அண்ணு இனி எப்பொழுது நம்மை எல்லாம் பார்க்கப் போகிருர்!

அரசியலில் மேதையாக, இலக்கியத்தில் புலவராக, சமுதாயத்தில் உண்மைத் தொண்டராக விளங்கிய அண்ணனைக் கண்ணில்லா காலன் நம்மை விட்டுப் பிரித்து விட்டான். கெடுக அவனது ஆயுள்!

வான நிலவுங் கதிரும், வயங்குகின்ற எண்ணற்ற விண்மீன்களும், ஆடிவரும் மயிலும், பாடிவிழும் அருவியும், எவ்வாறு ஒரு காலத்தோடு பாடிநிறுத்தப்பட்ட பொருள்கள் அல்லவோ, அதே போன்று, நமது அண்ணுவின் புகழை, அறிஞரின் புகழைத் தமிழ்த்தாய் என்றும் பாடிக் கொண்டே இருப்பாள்!

உலகம் உய்யட்டும்! உத்தமர்கள் நீடு வாழட்டும்!!
நல்லவை மலரட்டும்!!! நாடு செழிக்கட்டும்!!!!

A PRECIOUS JEWEL

A. P. Damodaran, M. A., Lecturer in English

In the death of Thiru. C. N. Annadurai, former Chief Minister of Tamil Nadu, Tamil Nadu had lost one of its precious jewels. The jewel that adorned the Tamil Nadu was snatched off by the cruel hands of Time. But his thirty years of public life had left a deep imprint on the Sands of Time.

He was not born with a silver spoon; but was born with a silver tongue. By his eloquence he was able to attract millions of people. They were spell bound with their mouths wide open. His speeches in the legislatures could be compared with The Philippics of Demosthenes and that of Burke and Macaulay in the parliament. It was said when he was on his legs in The Rajya Sabha the house heard his speeches with rapt attention. When he was lashing the social evils of the day the Flames of Fury were emitted so forcibly that they produced a strong effect on the minds of the listeners.

He was equally powerful as a forcible writer. He wrote thousands of words which attracted millions of youths to rally under his banner. His style was his own creation; simple, clear and convincing. Many were thirsting to know how he got that style and many tried to imitate it. "The pen is mightier than the sword" runs a proverb. He is an apt illustration for that proverb.

He was a rationalist After finishing his education he boldly took that hard path of social reform. The Self Respect Movement started by Periar Ramaswami attracted him much. He threw his heart and soul in propagating and spreading the ideals of that movement. He used all his natural gifts to foster that movement. He travelled throughout the length and breadth of Tamil Nadu to preach to the ordinary masses the lofty ideals of that movement in the teeth of severe opposition He wrote innumerable articles, stories and dramas to popularise that movement. He adopted all media of propaganda to spread the ideals of that movement of reformation. It was a rationalist movement and that movement became a mass movement in Tamil Nadu, one of the wonders of the world!

Even though he was vehement in criticising and attacking the social evils of the day he would listen with great respet the views of those who opposed him. "I disapprove of what you say, but I will defend to the death your right to say it". He followed this saying of Voltaire in the true spirit.

He was a rare combination of all these glorious aspects. No wonder people of all shades of opinion gathered in millions to mourn so deeply at his sad demise. His loss is an irreparable one. Thousands flock together to pay homage to his tomb daily. That place would attract millions of those who follow the principles for which he stood and served, for days to come. For the rationalists the place of his internment is a Mecca to get inspiration.

நீடு வாழ்க நின் புகழ்!

வெ. செயராமன், இளமறிவியல் இரண்டாமாண்டு, தமிழ் மன்றச் செயலாளர்.

1. மூன்றெழுத்தைப் பெயராக் கொண்டு
மூன்றெழுத்தின் தலைவ னாகி
மூன்றெழுத்தின் தன்மை யாலே
மூவரின் நாட்டை ஆண்டு
மூன்றெழுத்தை வாழ வைத்த
முடிமன்னன் ''அண்ணா'' வுக்கு
மூன்றெழுத்துக் கவிதை யாலே
முடிவணங்கிப் பாடு கின்றேன்!

2. மண்ணினில் சிக்கி விட்ட
மரக்கல மக்கள் போல
அண்ணனின் துயரில் வீழ்ந்த
அனைவரின் துயரைக் கண்ணால்
கண்டவர் கதறு வார்கள்
கடலலை ஓயும் வண்ணம்!
அண்ணனின் இழப்பை இந்த
அவனிதான் தாங்கு மோகொல்....!

3. அறிஞரின் கொள்கைப் பற்றும்
அவரது நாட்டுப் பற்றும்
செறிவுறு சிங்க நோக்கும்
செந்தமிழ் அருவிப் பேச்சும்
அறிந்தவர் திகைக்க, இந்த
அவனியைத் திரள வைத்து
அறிவுறும் ஆட்சி செய்தார்
அரியணை யமர்ந்த போது!

4. காலத்தால் உயர்ந்தோ ருண்டு;
கருத்தினால் உயர்ந்தோ ருண்டு;
காலத்தைக் கருத்தைத் தாண்டி
கறையிலா புகழ டைந்தோர்
ஞாலத்தில் உண்டோ என்றால்
நம்தலைவன் ஈதோ: அண்ணா!
சீலத்தால் மக்கள் நெஞ்சில்
சிறப்பிடம் பெற்றார் என்பேன்!

5. காந்தியை வணங்கும் கைகள்!
காந்தமாய் அமையும் சொற்கள்!
காந்தியால் அணைக்கப் பெற்றுக்
கனிந்தநம் நேரு தன்னை
காந்தமாய் ஈர்த்துக் கொண்டோன்
கலைக்கடல் அவன்தான் அண்ணன்!
காந்தியின் புகழைப் பாடி
காந்தியாய் வணங்கப் பெற்றோன்!

6. எளியனாய்ப் பிறந்து மண்ணில்
ஈடில்லா உழைப்பின் பேற்றால்
எளியோரின் மன்னனானான்
எம்தலைவன் அவன்தான் அண்ணன்!
எளிமையாம் வாழ்வு கொண்டு
இப்புவி ஆண்ட மன்னன்
எளியோரை ஏங்கவிட்டான்
எம்அண்ணன் நீடு வாழ்க!

7. அறிவுல கறிஞன் அண்ணன்
ஆன்மீக வழியில் வந்த
அறநெறி கண்ட அண்ணன்
ஆயகலை ஆய்ந்த மன்னன்
மறநெறி தாங்குகின்ற
மாமனம் பெற்ற அண்ணன்
அறிஞருள் அறிஞன்! இந்த
அவனியில் நிலைத்து வாழ்க!

What is Rationalism

Pursuing vocations for your and your family's well-being, you have to perform your duty towards society. You are to become torch-bearers of Rationalism—and rationalism does not mean repudiaticn of basic and fundamental truths and maxims, but the aunihilation of dubious modes of thought and action. You have to wo k hard and with daring and dash, for we have to clear cob-webs which are centuries old and let reason reign supreme.

—ANNA

அண்ணா ஆற்றிய அரும்பணிகள்

ஏ. குப்பன், இளங்கலை, இறுதியாண்டு.

கன்னித்தமிழே! கட்டழகு குலையாது, அகம், புறம் என அணிகலன்கள் பூட்டி, பாண்டியர்கள் தங்கள் சங்கப் பலகையிலே உனையிட்டுத் தாலாட்ட தளிர் நடைபோட்டாய்; வள்ளுவன் மறை செய்ய இளங்கோ சிலம்பு எனும் பாமாலை சூட்ட, கம்பன் கவிநயம் சொரிய வளர்ந்தாய். உன் புகழ் உலகமெல்லாம் பரவியது; ஆனால் கன்னித்தமிழே நீ காலமெனும் கையிலே கட்டுண்டு கதிகலங்கி நிலை குலைந்து இருந்த காலத்து, உனைக் காக்கப் புறப்பட்டான் அண்ணன்.

வலியவர் எளியவரை வதைத்த காலத்து, உழைப்பவர்க்கு ஊறுகள் நேர்ந்த காலத்து, தமிழுக்குத் தமிழன் தனியிடம் கொடாத காலத்து, தண்டமிழே உன் புகழைத் தரணிக்கெல்லாம் பரவவைத்தார் அறிஞர் அண்ணா. அவர் தமிழின் நிலைபற்றிக் குறிப்பிடுகையில்,

" நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலு பக்கமும் வேலிகள் அமைத்து அங்கு எட்டாத உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக் கொண்டு, "உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி", என்பது போலத் தொல்காப்பியத்தைப் பாரீர்! அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை நாட்டிலே நடமாடவிடவேண்டும் நடன சுந்தரிகளாக சிறு சிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான் ஒவ்வொரு இல்லமும் இலக்கியப் பூங்காவாக மலரும்" என்று கூறினர்.

தமிழுக்குத் தலைகொடுத்தான் குமணன்; முல்லைக்குத் தேர் தந்தான் பாரி; கோல மயிலுக்குக் குளிர்போக்கப் போர்வை தந்தான் பேகன். ஆனால் தமிழர்கள் அன்னிய மொழி தம் மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தும்போது ஆதரவு தந்தனர். நேசக்கரம் நீட்டி பாசத்தின் பெருக்கால் கன்னித்தமிழ் வளர்க்காது, கனியிருக்கக் காய் கவர்ந்தார்கள்.

ஆரியம் இல்லையெனில் அன்னைத் தமிழுக்கு அழகு நடை இல்லையென்றார் சிலர். ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர் புலிவேடம் போட்டுவிட்டார்கள். கண்ணிரண்டும் விற்றுக் கைச் சித்திரம் வாங்க நினைத்தனர் மந்தமதி கொண்டவர்கள். சேமமுற வேண்டுமெனில் உலகமெலாம் தமிழ் மொழியைப் பரவும் வகை செய்தல் வேண்டும் என்னும் உயர் குறிக்கோளைக் காற்றிலே பறக்க விட்டார்கள். இந்த இழிநிலையைக் கண்டார் அண்ணன். இக் கொடுமை நீங்கவும் எப்பகையும் தாங்கவும் எழிலொடு ஏற்றார் பொறுப்பை. ஏற்றிரண்டு ஆண்டுகள் முடியவில்லை; எண்ணிலா பணிகள் செய்தார். ஏற்றமிகு நடையால் ஆற்றல் தரும் பேச்சால் அக்கிரமக்காரர்களை எதிர்த்தார். "ஏடா தம்பி, எடுடா பேனா" என எழுத்தாற்றல் கொண்டு ஏற்றமிகு பணி புரிந்தார்.

தமிழுக்குப் பகையானோர் தலை குனிய தண்டமிழின் இனிய புகழ் தரணிக்கெல்லாம் பரப்ப உலகத் தமிழ் மாநாடு நடாத்தி தமிழுக்கு உயர்வு செய்தார். இந்தியெனும் மந்தி இத் தமிழகத்தில் தங்கி தமிழுக்கு இழிவு செய்யாதிருக்க இயற்றினர் சட்ட மன்றத்திலே சட்டம். செந்தமிழ் நாடு என்ற பொழுதே காதில் தேன் வந்து பாயுது, என்றார் பாரதி. ஆனால் அவர் கண்ட கனவு நனவாகத் தமிழ் நாடு எனும் பெயர் மாற்றச் சட்டம் கொண்டுவந்து தமிழரைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

சாதிகள் இல்லையடா, சாத்திரங்கள் தொல்லையடா, என முழங்கி ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் உண்மையை உணர்த்தி நின்றார் அண்ணன். விமானம் கண்டான் ஒருவன் எனவும் படகினைப் படைத்தான் ஒருவன் எனவும் அடிமைத் தலை அறுத்தான் அப்ரகாம்லிங்கன் எனவும் மேல் நாட்டார் அவர்களைப் பற்றிப் பேசுவதிலே படிப்பதிலே பயனடைந்தார்கள். ஆனால் இங்கிருக்கும் புலவர் மணிகளோ பக்தர்களைப்பற்றிப் பேசி பரமாத்மாவைப் போற்றித் தமிழரைப் படு பாதாளத்தில் தள்ளினர். நால் வருணம் நலியவும் உழைப்பவன் ஒருவன் ஊதியம் பெறுபவன் இன்னொருவன் என்னும் நிலை போக்கவும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் வேறுபாட்டை நீக்கவும் அல்லும் பகலும் அயராது உழைத்தார். எளிய பண்பும், அதற்கேற்ற உருவமும் கொண்டு ஏழைகளுக்காகத் தம் அன்பால் என்னையும் தந்தார்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று திரும்பத் திரும்பக் கூறினரே ஒழிய அதைக் கொள்கையிலே ஏற்க மறுத்தனர் மக்கள். ஆனால் அண்ணாவோ தெளிவு கொண்டு, கனிவோடு துணிவு கொண்டு சாதிமத பேதமற்ற சுய மரியாதைத் திருமணத்தைச் சட்டமாகக் கொண்டு வந்தது தமிழர் வரலாற்றிலே பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியது. அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள சாதிகளும் மதங்களும் அதன்கண் தோன்றிய சமயப் பூசல்களும் நாட்டின் வளத்தையே பாதித்து விட்டன என்பதனை உணர்ந்த அவர் சமதர்ம நிலையை நிறுவ முயன்று வெற்றியையும் கண்டார்.

என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதேபோல், ஏற்றம் கொண்டு எண்ணிலா பணிகள் செய்தார். ''தமிழ் நாடு பெயர் சூட்டு விழாவில் நான் கலந்து கொள்ளாமல் இவ்வுயிர் இருந்தென்ன போயென்ன'' என்றார். எவர்க்கு வரும் இந்த ஏற்றமிகு நற்பண்பு. பொருட்பாலை அறத்துடன் இணைத்து அரசாள முடியுமென்று எடுத்துக் காட்டியவர் அரசியலோடு கலை வளர்த்த அரும்பெரும் குணக்குன்று, பண்போடு பாசத்தையும் அன்போடு அடக்கத்தையும் கொண்டு அகிலத்தை ஆண்டுவந்தார். அவர் ஆட்சி கண்டு அகமகிழ்வு கொண்டனர் தமிழர்.

★

ANNA-THE WALKING ENCYCLOPAEDIA

B. Appuraj, B.A., B.Lib.Sc., Librarian.

In the past few years nobody in India has captured the public's imagination and caused by his death so much public sorrow as Dr Annadurai. Dr. C. N. Annadurai was an eloquent orator, an erudite scholar, a prolific writer, a brilliant statesman, a talented actor, a far sighted diplomat, an ardent social reformer, a walking encyclopaedia and a bedrock of common sense.

Anna's oratory and eloquence awakend the masses of India from lethargy and to see literature as a vital record of the past events. "He had inaugurated an era of 'Tamil Eloqunce',even as poet Bharathi had inaugurated a new era of 'Tamil Poesy. What Jawaharlal Nehru wrote about Gandhi holds good to Anna also — "He influenced millions of people in India in varying degress; some changed the whole texture of their lives, others were only partly affected. Different people reacted differently and each will give his own answer to this question. Some might well say almost in the words of.Alcibiades, "Besides, when we listen to anyone else talking, however eloquent he is, we don't really care a damn what he says; but when we listen to you or to someone else repeating what you have said, even if he puts it ever so badly, and never mind whether the person who is listening is man, woman or child, we are obsolutely staggered and bewitched".

To hear him speak in Tamil is an essential part of education of anyone who is interested in understanding something about modern Tamil. But at the same time one should not forget the fact that he was a stalwart in English and had an extraordinary mastery over English too.

A journalist, playwright and author of several works in English and Tamil like Annadurai, should have made but good note of very many books. He had to his credit not less then two score of books and innumerable stories and articles, and the enumeration of each and everyone here is neither possible nor advisable. Thiru. S. M. Balasubrahmanyam writes, "Even as early as 1943 Anna has questioned the value of 'Ramayana' and 'Puranam', as proud additions to Tamil Literature. He argued with scholars like Dr. R. P. Sethupillai and S. Somasundara Bharatiyar and wanted to keep such works off the peoples track lest the people should forget their splendour".

We have instances in which a politician could also be a good writer and an orator. For instance, we have men like Gandhi, Nehru and Churchill, likewise writers getting into politics as in the case of Bharatiyar, Milton,

Shaw etc. These capabilities may atleast sometimes go well with each other. But an orator to be a playwright, a writer to be a statesman, an actor to be a politician, a social reformer to be a pacifist and the harmonius blending of these and many others too which have not been discerned here is a very rare and queer phenomenon. Anna was a harmonious blending of these traits. Trust, history, has no instance to this kind of a towering personality.

Well! who questions these calibres and capabilities? None. Neverthe-less, we need the answer to the question how Anna has risen to this exalted position. Is it all merely because of God's gift? Was there no sustained and strenuous effort on Annadurai's part, which made him come to limelight in a short span of two decades?

The open secret of his success can be traced in his encyclopaedic knowledge and rich and strong memory power. One can say with safety that it was all because of his voracious reading of books for hours and hours together. Most of his lifetime had been spent in reading and writing books, stories and essays. When many fail even to recognise the idea of maintaining, developing and fostering libraries, he was having his own personal library, since he knew the worth of it. There were days when he used to sit in the libraries to muster and master, to cull and collate knowledge from morn till eve.

He was a regular purchaser of books and also used to purchase the backnumbers of the periodicals in large numbers and go through them leisurely, digest and assimilate them When he aquired books he aquired knowledge also along with it unlike many who acquire the former and leave the latter. He studied more of history and books of general knowledge. Yet no book was insignificant in his eyes, whether it be 'Lady Chatterley's Lover', by D. H. Lawrence or the 'History of the Decline and Fall of the Roman Empire', by Edward Gibbon. The last book which he studied was, 'Master Christian', written by Marie Corelli. To quote his words from the excerpts of his speech in Pachaiyappa's College, Madras, would reveal how much importance he had attached to reading books—"இந்த நாட்டிலே நம்மவர் வீடு கட்டுவர், அதிலே பலப் பல அறைகளும் அமைப்பர். மாட்டுக்கொட்டகை ஒருபால், பொக்கிஷ அறை ஒருபால், சமையலறை மற்றொருபால் ......மற்றெதை மறக்கினும் ஆண்டவனுக்குப் பூசை செய்ய அறை அமைக்கமட்டும் மறவார்; ஆனால் அறிவூட்டும் ஏடுகள் நிறைந்த படிப்பறையைப்பற்றிப் பகற்கனவும் காணார். படிப்பறை மிகவும் முக்கியமானது, அவசியமானது, அலட்சியப்படுத்தக்கூடியதன்று. ஆயினும் அது அவர்தம் சிந்தனையில் தோன்றாது".

Can anyone walk off as cool as cucumber saying that it was all because of God's gift? If a person has to talk on various subjects all of a sudden over a platform and at the same time keep the audience spell-bound and get the title

'Arignar', does it not require knowledge? Is knowledge a mere gift? Well, the tone of a person or for that matter, the strong memory power may be a gift. But how about the subject matter? It will be crystal clear that mastery over various subject matters is due to one's encyclopaedic range of knowledge, which Anna acquired, since he dwelled deeply into the demesne of books day in and day out, and is hence hailed by many as Arignar Anna.

Very many try to excuse their dullness and oblivion by saying that it was all because of 'Fate', and 'fate is all powerful', —'*ஊழிற் பெருவலி யாவுள?*" But have they tried in anyway to rise up to anybody's, if not to their own expectations? Nay, because they find it easy to say that God is omnipotent, omnipresent and omniscient and saunt of without exerting to any target.

If C. N. A. became the pride ot the South, it is because, he had done justice to his own conscience and never had deviated from his principles even in the face of oppositions and took everything with religious fervour. Though on the ordinary parlance, and to the layman he seemed to be an antagonist of religion, he understood and propogated that, 'service to humanity is service to God', and hence after his demise he has become for many, a God in himself who lived in their own life time.

Friends, let not your flying days go in vain since no gold can get them back again. Make haste to plunge deeply into books and try to disseminate knowledge in every direction. Hence it is books, books and nothing but books· that can put you in goodstead. Acquaint yourself with the storehouse of knowledge ie library. Silent revolutionists and reformers are there waiting for you in the form of books In fact Anna himself used to advise his followers to read more and more so that they can equip themselves.

The very purpose of my writing this article is to drivehome into the hearts of my readers that books are the faithful repositories and one should not neglect them which impart wit and wisdom. Anna understood it and put it into practise in his own life time, and hence became an eloquent orator, a prolific writer, a bedrock of common sense and above all a walking encyclopaedia.

★

பூமியின் ஈர்ப்பு விசையினின்று விடுபட்டுச் செல்லும் விண்வெளிக் கலத்தின் வேகம் எவ்வளவு?

விண் வெளிக் கலம் பூமியிலிருந்து முழுமையாக விடுபட்டுச் செல்வதற்கு வேண்டிய வேகம் மணிக்கு ஏறக்குறைய 25,000 மைல் ஆகும். இதற்கு 'விடுபடுவேகம்' என்று பெயர்.

தொகுப்பு : செவ்வேள்.

அண்ணலே! அறிஞரே! தானைத்தலைவரே!

கு. கணேசன், எம். எஸ்ஸி கணிதத்துறை.

வாய்மணக்க செந்தமிழும் பேசி விட்டே
தாய்மண்ணும் தமிழ்மண்ணும் தவித்தே ஏங்க
சேய்தனையே பிரிந்து விட்ட தாயே போலே
போய்விட்ட தேனேஎம் உயிரே! அண்ணா!

முடிப்பதற்குள் கலந்த வண்ண அழகே! அன்பே!
படிப்பதற்குள் பறிபோன பண்ணே! பாட்டே!
விடிவதற்குள் வீழ்ந்து விட்ட விழியே! பூவே!
பாடி வந்த தனித்தமிழே! தலைவா! அண்ணா

ஏடெல்லாம் போற்றி வந்த எழிலே! வாழ்வே!
நாடெல்லாம் காத்து வந்த தேவே! வேந்தே!
வீடெல்லாம் வீற்றிருந்த ஒளியே! தாயே!
காடெல்லாம் கழனி செய்த கண்ணா! அண்ணா!

ஆடிக்காற் றில் விளக்கே அணைந்தே விட்டாய்
ஓடிவந்த சாவிடிக்கு மலையே சாய்ந்தாய்!
மூடிவந்த இருட்கூட்டில் கதிரே வீழ்ந்தாய்!
தேடிவந்த புற்றிற்கே பலியோ அண்ணா!

பூ அழவே பொழுதழவே புவியும் தானே
மதி அழவே மான் அழவே மயிலும் தானே
விதி அழவே வான் அழவே கானும் தானே
நா அழவே நாடழவே செய்தாய் அண்ணா!

The U. N. O.

The United Nations Organisation is the forum to-day — not of course fully adequate but the only available forum for settling disputes without war—through discussion, enunciation, and action......

Lack of sincerity, influence of powerful blocks delay and lack of determination, often times mar this process and ignite war, but this will be minimised to the utmost degree, if and when the U. N, is strengthened, if people all over the world stand by its principles, and make their States to champion the cause of peace.

—ANNA.

அண்ணன் காட்டிய வழி

திருவருணை வை. சோமசுந்தரம்,
அறிவியல் இளநிலை இறுதியாண்டு.
(தமிழ் மன்றத் தலைவர்)

அறிஞனே அறிவு மன்னா!
அடங்காத இடர்வந் தாலும்
நெறியினிற் பிறழா அண்ணா!
நேர்மையை மறவா கண்ணா!

தமிழ் நாடாம் பெயரைச் சூட்டித்
தன்மானம் காத்த வேந்தே!
உலகத்தின் ஒளிவி ளக்கே!
உயிர்வெள்ள இன்பப் பாட்டே!

தமிழ் அன்னை வாழ வாழத்
தன்குரல் சிலம்பம் பாட
தமிழ் மக்கள் உள்ள மெல்லாம்
தனியரசு ஓச்சி னாயே!

மாற்றார்தம் பேச்சை ஏச்சை
மன்னன்நீ! அருள் உள் ளத்தால்
ஏற்றாயே! மன்னித் தாயே!
எல்லோரும் போற்றும் தேவே!

கண்ணீரின் வெள்ளம் ஓட
கலைஞரோ உள்ளம் வாட
கண்ணீரைத் துடைத்து வந்த
காவல இனிக்காண் போமோ?

அரிச்சுவட்டில் அண்ணா

க. இரா. இராமலிங்கம்,
இளங்கலை முதலாண்டு (பொருளாதாரம்)

அண்ணலெனத் தென்னாட்டில்
மின்னலெனத் திகழ்ந்தவரே!

ஆறறிவில் பகுத்தறிவால்
ஆட்சியினைப் பிடித்தவரே!

இன் தமிழை மாநாட்டால்
இவ்வுலகில் பரப்புவித்தீர்!

ஈத்துவக்கும் தமிழருமை
காத்து வந்த என் தலைவ!

உளம் குளிர வளம் பெருகத்
தமிழ் நாடாய்ப் பெயர் மாற்றம்

ஊழலினை மதுவதனை
வேரோடு அழித்திட்டீர்.

என்றென்றும் தமிழதனை
ஏற்றி வைத்தீர் கோபுரத்தில்!

ஏழையவன் ஏக்கத்தைப்
படி அரிசி நோக்கத்தால்,

ஐயமிதில் ஏது மின்றி
அளித்திட்டீர் ஊக்கத்தை!

ஒன்று பட்டால் நம்மவர்க்கும்
உண்டு வாழ்க்கை என்றிட்டீர்!

ஓங்கி வரும் நும் புகழும்
உயரட்டும் வானுயரம்!

ஔவைக்குச் சிலையெடுத்த
அண்ணா உன் நெறி வாழ்க!

அஃகாத இதயத்தால்
ஆண்டிட்ட கோவாழ்க!

சமுதாயச் சிற்பி அண்ணா

" மணிமொழியன் " (ச. சுப்பிரமணியன்)
இளங்கலை முதலாண்டு (வரலாறு)

தன்னிகர் இல்லோன் மாய்ந்தான்
தமிழரின் தலைவன் மாய்ந்தான்
பொன்னினு மேலோன் மாய்ந்தான்
புகழுடை அறிஞன் மாய்ந்தான்
கன்னலுங் கைக்குஞ் சொல்லின்
கவினுறு செல்வன் மாய்ந்தான்
என்னவித் தமிழர் கூட்டம்
இரங்கியே தவித்த தம்மா.

பகுத்தறி வில்லா மாந்தர்
பாழ்படு சமயப் போரில்
உகுத்தன ராவி யந்தோ
உண்மையின் நெறிவி ளக்கிப்
பகுத்தறி வுடைய வீரர்
பாசறைத் தலைவ னான்
உகுத்தனன் ஆவி யின்றே
யுலகமே விம்மு தம்மா

கடவுளின் பெயரைச் சொல்லிக்
காணிக்கைக் குவியல் பெற்றுச்
சடங்குகள் செய்தாற் போதுஞ்
சரிந்திடும் பாவ மென்றே
மடயர்கள் கூட்ட மீங்கே
வம்புகள் செய்யும் வேளை
கடல்வெள்ளம் போல வந்தான்
கண்களின் பயன்தா னீதே.

சமயத்தின் பெயரால் மிக்க
சாகசம் செய்உ லுத்தர்
தமதுடல் கொழுக்க வுண்பர்
தமையடுத் தோர்கள் வாழ

இமைப்போது மெண்ணா ரிந்த
ஈசனி னடியார்க் கூட்டம்
சமயத்தின் குழுவா? அல்ல!
தருக்கரின் கூட்டந் தானே.

எங்கணும் சமயப் போர்கள்
எங்கணும் சாதிப் போர்கள்
கங்குலின் தோற்ற மொத்தக்
கடவுளின் அடியார்க் கூட்டம்
பொங்கியே யெழுந்தா னண்ணன்
புனிதத்தை நிலைநாட் டிட்டான்
எங்கேயப் பெருவீ ரன்று
னில்லையே யென்செய் வோம்யாம்.

ஒருவனே தேவன் தம்பீ
ஒரேகுல மறிவா யீங்குத்
தருக்கிடும் போலி பக்தர்
சாகசம் தனையு டைப்பாய்
உருவங்கள் எத்தனை கோடி
யொன்றிலு மிறைவ னில்லை
யருவமா யுன்னி லுள்ளான்
அறிந்தாலே விளங்கு முண்மை

பொன்னினை யொத்தத் தன்னின்
புகழ்கருத் துக்கள் தம்மை
அண்ணனும் தந்தா னின்றிங்
கருவமாய் நம்மி லுள்ளான்
பொன்மொழி நெஞ்சில் வைப்போம்
பொய்யான சமயப் பூசல்
தன்னையே யொழிப்போ மஃதே
தம்பியர் கடமை யாமே.

தமிழினத் தலைவன் எங்கே?

மு. பி. பாலசுப்பிரமணியம், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்

வெடிக்கட்டும் பூமிப் பந்து
வீழட்டும் விண்மீன் கூட்டம்
துடிக்கட்டும் நெஞ்சம்; கெட்டுத்
தொலையட்டும் கவலை இல்லை!
பிடிக்கட்டும் காலன் எம்மைப்
பிணைக்கட்டும் அண்ணா வோடு;
முடிக்கட்டும் எமது வாழ்வை
முழங்கட்டும் அண்ணா நாதம்!

பொங்கட்டும் கடல்கள் எல்லாம்
பொசுக்கட்டும் நெருப்புக் கோளம்
மங்கட்டும் வானத் தோணி
மறையட்டும் கவலை இல்லை!
தங்கட்டும் அண்ணா வோடு
தழுவட்டும் எமது மூச்சு
விங்கட்டும் அண்ணா நாதம்
வேகட்டும் காலன் நெஞ்சம்!

நோகட்டும் என்றே காலன்
நுழையட்டும் கவலை இல்லை;
போகட்டும் அண்ணா வோடு
புதையட்டும் எம்மு டல்தான்;
சாகட்டும் உயிர்க் கூட்டம்தான்
சளைக்கட்டும் காலன் கைதான்
பாகொட்டும் பேச்சால் அன்புப்
பண்கொட்டும் அண்ணா எங்கே?

அண்ணா போற்றி

டி. வி. நரசிம்மன்,
இளங்கலை இறுதியாண்டு

தண்மைக்குத் தளிர்ப்பு நீவீர்;
இன்மைக்கு ஏற்ப நீவீர்;
தொன்மைக்குத் தொடக்கம் நீவீர்;
எம்மைக்கும் இருப்போர் நீவிர்;
பாட்டிற்குப் பதங்கள் நீவிர்;
நாட்டிற்கு நலன்கள் நீவிர்;
வீட்டிற்கு வாயில் நீவிர்;
வினையிற்கு விளக்கம் நீவிர்;

[வேறு]

பரிவுநீ பாசம்நீ;
உறவுநீ ஊன்றுநீ;
அளவுநீ அடைவுநீ;
உளம்நீ ஊக்கம்நீ;
வாக்குநீ வடிவுநீ;
தாக்குநீ தாங்குநீ;
உடல்நீ உயிர்நீ;
உழைப்புநீ உயர்வுநீ;
ஏற்றம்நீ எதுவும்நீ;
கொற்றம்நீ கோட்டம்நீ;
தமிழ்நீ தன்மைநீ;
முனைவுநீ முடிவுநீ;
நினைவுநீ நிழலும்நீ.

"அண்ணா வளர்த்த அருந்தமிழ்"

இரா. கணேஷ்,
இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு (பௌதிகம்)

அண்ணா! இம்மூன்றெழுத்துக்குத்தான் எத்தனை அரும் பெரும் சக்தி!!

அண்ணா புரிந்திட்ட சாதனைகள் ஆயிரமாயிரம். அவர் அரசியல் வித்தகர்; செந்நாப் புலவர்; பல்கலை பயின்ற பாவலர்; கவிஞர்; ஓவியர்; கருத்துச் செறிவு கொண்ட சளையா உழைப்பாளி; "கண்ணீர்த் துளி"களைக் கொண்டே கழகம் தாபித்த கண்ணியர்.

அண்ணா ஓர் 'அகத்தியர்' தமிழ்த்தாயை உருவாக்கினார் அக்கால அகத்தியர். தமிழ்த் தாயின் துயர் களைந்தார் தற்கால அகத்தியர் அண்ணா அகத்தியரினும் உயர்ந்தவர் ஒருவிதத்தில். ஏன்? "படைத்தலினும் காத்தல் நன்றன்றோ!"

அண்ணா ஓர் 'வள்ளுவர்'. குறள் படைத்தார் வள்ளுவர். அக்குறள் நெறி நடக்க மாந்தர்க்கு அருள் படைத்தார் அண்ணா. அவர் எப்படிப்பட்டவர்? "தமிழ்க் குரல் உலகிலொலிக்கச் செய்திட்ட குறள் வடிவினர்".

நாட்டைக் கெடுத்தான் அன்னியன். வீட்டைக் கெடுத்தான் நம்மவன். வெள்ளையனாவது நாட்டைத்தான் பாழாக்கினான். தாய் மொழியையே, தமிழ்த் திருமொழியையே பாழ்படுத்தியது புலவர் கூட்டமொன்று. எதுமோனை எது எதுகை எனத் தெரியாதவாறு 'செந்தமிழ்' என்ற பெயரால் 'கொடுந்தமிழ்' எழுதி நானிலத்துக்கே பொதுவான தமிழை நாலைந்து பேருக்கு மட்டும் சொந்தமாக்கினர். வடமொழி கலந்து எழுதினால்தான் தமிழ் மொழி வளப்படும் என எண்ணினர் அவ்வந்தகர்கள். மக்களுக்குப் புரியாத மொழியிலே, மக்களுக்குப் புரியாத துறையிலே, மக்களுக்குப் புரியாத நடையிலே "ஆங்கிலோடமில்" எழுதினர் சில அறிஞர்கள். அறிஞர்களோ அவர்கள்? அன்று அற்பர்கள்; இதைக்கண்டுதானோ பாடினார் பாரதியார் "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்று? இந்நிலையில்தான் தமிழ்த் தென்றலாக, இலக்கிய வானிலே ஓர் இளஞ்சூரியனாகப் புறப்பட்டார் அண்ணா.

கன்னித் தமிழ் திருத்தவந்த காஞ்சித் தலைவர்:

"நம் மொழி தமிழ் மொழி; நம் இனம் தமிழ் இனம்; அந்நியர் வந்து இதில் புகுவது ஒல்லுமோ; என நானிலம் நடுங்க கேட்டார் அண்ணா.

சொல்லுக்குச் சொல் கேட்போரைச் சொக்க வைத்த அவர் நடை ஒரு தனி நடை. இந்த நடையைப் பற்றித் திரு. வி. க. 1948-ஆம் ஆண்டில் ஈரோட்டிலே பாராட்டிப் பேசினார்.

"தற்பொழுது திரு, வி. க. எழுத்து. திரு. வி. க. பாணி, திரு. வி. க. நடை என இருப்பதுபோல பின்னால் அண்ணா எழுத்து, அண்ணா பாணி, அண்ணா நடை என்றுதான் வரப்போகிறது. எனக்குப் பின் தமிழ் அழியுமோவென அஞ்சினேன். இனி அவ்வச்சத்திற்குப் பொருளில்லை. இதோ இருக்கிறார் தமிழ்த் தளபதி அண்ணா!"

அண்ணாவின் வருகை இலக்கிய உலகை மலரச் செய்தது. மறுமலர்ச்சி கொணர்ந்தது. அவருடைய எழுதுகோலால் ஜலம் 'நீர்' ஆயிற்று. 'புஷ்பம்' மலராயிற்று. ஜனாதிபதி 'குடியரசுத் தலைவர்' ஆனார். 'ஸ்ரீ' திருவாயிற்று, வட மொழி தூய தென்மொழியாயிற்று.

அண்ணாவின் எழுதுகோல் தொடாத துறையில்லை. அவராக்கிய சிறு கதைகள் ஆயிரமாயிரம். ஆக்கிய கட்டுரைகள் ஏராளம். வடித்த நாடகங்கள் வரையற்றவை. இனி இரு முக்கிய துறைகளில் அவர் ஆற்றிய அரும்பணியை எடுத்து ஆய்வோம்.

நாடகத் தமிழ் வளர்த்த நாவலர்:

முத்தமிழுள் ஒன்றான நாடகத் தமிழை முதன் முதல் உருவாக்கித் தந்தவர் சுந்தரம் பிள்ளையாயிருந்தாலும், அந்நாடகத் தமிழுக்கு ஓர் ஆக்கம் கொடுத்தவர் அறிஞர் அண்ணாதான். "செல்லப் பிள்ளை" என்ற நாடகத்திலே முன்னுரையாக அவர் மொழிகிறார்: "நான் நாடகம் எழுதுகிறேன், சமூகத்தைச் சீர்திருத்த; மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக்கொணர. அதைத் தற்கால நாடக மேடைகள் செய்யவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். நான் என்ன செய்வது? தற்கால நாடக மேடைகள் தாம் இன்னமும் கைலாய, வைகுந்த காட்சிகளை மட்டுமே காட்டிக் கொண்டிருக்கின்றனவே." நகைச்சுவையூடே அவர் மனவேதனையும் நமக்குப் புரிகிறது. மூடப்பழக்க வழக்கங்களை அழிக்க, கண்மூடிப் பழக்கங்கள் "மண் மூடிப்" போக முயற்சி பல செய்தார் அண்ணா. பெருநிலச்சுவான்தார்களின் நடத்தையை வெளிக்காட்டியது, அவர் எழுதிய "ரங்கோன் ராதா". இது பின்னர் திரைப்படமானது. விடுதலை நாட்டை முனைப்போடு காக்கவேண்டும் என்ற அவரது வேட்கையை வெளிப்படுத்தியது "காசூரார் கருணை". அறியாமையை ஆயுதமாய்க்கொண்டு மக்கள் மனத்தைப் பாழ்படுத்தும் எத்தர்களை வெளிப்படுத்தியது "சுமங்கலி பூஜை". அண்ணா எழுதினார், எழுதினார், ஓயாமல் எழுதினார். அவருடைய எழுத்துக்குச் சில சமயம் அரசாங்கம் தடை விதித்ததுமுண்டு. ஆயினும் அவர் அதைக்கண்டு கவலையுறவில்லை.

கதை இலக்கியம் வளர்த்த காவலர்:—

சோம்பிக் கிடந்த தமிழுலகை, குறிப்பாகக் கதையுலகை, தட்டி எழுப்பினார் அறிஞர் அண்ணா. "ஏடா தம்பி! எடடா பேனா" என்ற அவரது சொல் தமிழுலகுக்குத் தாரக மந்திரமாகியது. குறிப்பிட்ட ஒரு வருணத்தவரின் குறுகிய மனப்பாங்கைப் புலப்படுத்த எழுதினார் "ஆரிய மாயை". சீமான்களின் போக வாழ்வைச் சித்தரித்துக் காட்டினார் "வேலைக்காரி" யிலும் "ஓரிரவிலும்". இலக்கியத் துறையையும் அவர் விட்டுவைக்கவில்லை. கம்பனைப் பிழிந்து "கம்பரசம்" யாத்தார்.

அண்ணா நாடகம் எழுதிக் காட்டியவர் மட்டுமல்ல. அதில் நடித்துக் காட்டிய நடிகரும் கூட. "சந்திரமோகன்" நாடகத்தில் சமீன்தாராக அவர் ஏற்ற காட்சி பார்ப்போரைப் பரவசப்படுத்தியது. "நீதிதேவன் மயக்கத்தில்" இராவணனாக அவர் நின்றபோது, வாதம் புரிந்தபோது அறியாமை இருள் அழிந்தது. தமிழகத்தைப் புது ஒளி சூழ்ந்தது. "சிவாஜி கண்ட இந்துசாம்ராஜ்யத்தில்"

இராஜகுரு காகப்பட்டராக அவர் தோன்றியபோது அனைவரும் வியந்தனர். அண்ணா பேசுகிறாரா அன்னைத்தமிழ் பேசுகிறாளா என அதிசயித்தவர் ஆயிர மாயிரம். அண்ணா தமிழை மட்டும் வளர்க்கவில்லை. தமிழைத் திக்கெட்டும் பரப்ப தகுதியான பலரையும் வளர்த்தார். கார்மேகமெனக் கவிமழை பொழியும் கவிஞர்களை உருவாக்கினார். "கலையே என் மூச்சு" எனக் கருதிய கலைஞர்களை உருவாக்கினார். நாவன்மையில் சிறந்த பல நாவலர்களை உருவாக்கினார். "சொல்லின் செல்வர்"களை உருவாக்கினார். நடிகர் திலகங்களை உருவாக்கினார்.

உலகத் தமிழ்மாநாடு நடத்திய உத்தமர்:

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடச் செய்தல் வேண்டும்" என்று பாடினார் பாரதியார். ஆனால் அச்செயல் அவர்வாழ்வில் கைகூடவில்லை; அவர் பின்னால் நாடு பெற்ற அகவாழ்விலும் கூடவில்லை. அச்செயல் அண்ணாவின் ஆட்சி வாழ்வில் கைகூடியது. "உலகிற்கெல்லாம் பொது உடமை—தமிழ் பரப்பு வது நம் கடமை—இஃதறியார் இருப்பது மடமை" என்பதை ஆணித்தரமாய் வலியுறுத்தினார் அண்ணா. ஆம்! அண்ணாவின் ஆட்சியில் தமிழ் மொழியின் மாட்சியை நாடு கண்டது. நானிலம் கண்டது. 'தானும் தமிழனே' என்பதைச் சில தமிழ் மக்களும் உணர்ந்தார்கள்.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் புலவர்களை ஆதரித்துப் புரவலர்களாய் உய்ந்தனர். ஆனால் தற்காலத் தமிழ் மகனோ புலவர்கட்கெல்லாம் 'சிலை' வைத்தே புரவலனாய் மாறிவிட்டான். ஆம்! அண்ணா கம்பனுக்குச் சிலைவைத்தார்; கால்டு வெல்லுக்குச் சிலை வைத்தார் வள்ளுவனுக்குச் சிலை வைத்தார். வ. உ. சி.க்கு சிலை வைத்தார்; வரகவிக்குச் சிலை வைத்தார். தமிழ் மக்கள் நன்றி மறவாத வர்கள். சிலை வைத்த செம்மலுக்கும் சிலையெடுத்துவிட்டனர் சீர்பெறு காஞ்சியிலும், சிங்காரச் சென்னையிலும்.

அண்ணா மறைந்து விட்டார்! அன்று. அவர்தம் பூத உடல்தான் மறைந்து விட்டது. புற்று நோயால் கெட்ட புண்ணுடல்தான் மறைந்துவிட்டது. அறிவினால் சிறந்த அவர் புகழுடல் என்றும் மறையாது. அது நின்று நிலவும். பார் உள்ளள வும், தமிழ்த்தாய் உள்ளளவும் அண்ணா வாழ்வார்.

" அண்ணாவின் புகழுடல் என்றும் வாழ்க !
அவர் வளர்த்த அருந்தமிழ் நின்று வாழ்க!! "

"இளம் வயசுக்காரா போலிருக்குது. அப்படித்தான் சிரிச்சிப் பேசிக் கொண்டு சந்தோஷமா இருக்கணும். சதா சிடுசிடுன்னு இருந்தா, குடும்பம், அடுப்பிலே ஏத்தி வைத்த தோசைக்கல் மாதிரியாக அல்லவா இருக்கும்"

தொகுப்பு: கன்னி. திராவிட நாடு—பொங்கல் மலர் (1962)

அண்ணா.

அன்னை வரம்

"துரை"—தண்டபாணி

கதிரவனை
புதியவனே !
எழில்சொட்டும்
மொழிஉணர்வை
முறைவாழ்வை
நிறைவாழ்வைக்
புவிமக்கள்
தவிக்கின்ற
கரம்கூப்பிக்
வரமொன்று
கலைநிறைந்த
தலைநகராம்
அந்நகரில்
எந்நாளும்
தியாகத்தின்
சாயாத
பார்முழுதும்
கார்கால
பள்ளத்து
உள்ளத்தே
விடிகின்ற
கொடியாக
கலையுலகின்
நிலவுலகில்
தமிழதனின்
அமிழ்தென்று
பலகோடி
உலகத்தில்
ஓரணியை
நேரணியாய்த்
என் பகைவன்
உன் பகைவன்
தமிழுக்கே

வழிமறித்துக்
பார்மீது
என்னாட்டில்
ஏனின்று
ஏன்மாற்றிச்
குறைவாழ்வாய்
நோக்கந்தான்
தமிழ்மக்கள்
சிரம்தாழ்த்திக்
தரல் வேண்டும்
காஞ்சியிலே
காஞ்சியது
நீசென்று
ஏற்றமுடன்
திருவுருவாய்,
இந்திக்குச்
பலர்போற்றும்
முகிலைப்போல்
வெள்ளமெனப்
கொண்டிட்டு
வேளையிலே
என்னாட்டில்
நிலைசிறக்க
பலர்போற்ற
சாறெடுத்தே
பேர்கொடுத்தால்
அமிழ்தந்தான்;
கலகங்கள்
உருவாக்கித்
திகழுமதைச்
அகிலத்தில்
கன்னெஞ்சன்
உயிர்தந்து

கேட்கின்றாள்
பலர்புகழும்
ஏன் இல்லை
என்மக்கள்
சிறைவாழ்வு
ஏன்மாற்றிக்
புரியவில்லை;
தரையதனைத்
கேட்கின்றேன்
வரையாது
விலையுயர்ந்த
நிலையுயர்ந்த
அண்ணாவாய்ப்
என்தமிழைப்
தீந்தமிழின்
சாவோலை
பாவளமும்
கதையெழுதும்
பாய்ந்து வரும்
உள்ளுணர்வை
உதிக்கின்ற
நாட்டிவிடு
கதைகள் பல
நல்லாட்சி
அமைகின்ற
அந்நாட்டார்
சிலரோடி
ஒழிந்துவிடும்
தாரணியைத்
சீரணியாய்
இருப்பானேல்
ஒருநொடியி
தன்மானம்

எமதன்னை;
பகலவனே !
எழுச்சிமட்டும்;
ஒழித்திட்டார்;
வாழ்கின்றார்;
குறிக்கின்றார்;
என்றாலும்,
தொடல்வேண்டும்;
கதிரவனே !
தருபவனே !
பட்டுமுண்டு;
பல்லவர்க்கும்;
பிறந்திடுக,
போற்றிடுக.
மறுவுருவாய்,
தீட்டிவிடு,
நாவளமும்,
கற்பனையும்,
சொல்லடுக்கும்,
எழுப்பிவிடு,
பகலவனை,
முடிவாக
எழுதிவிடு,
நடத்திவிடு,
சுவையதனை,
அன்புள்ளம்,
மறைந்திட்டால்,
விரைவாக,
திருத்திவிடு,
ஆக்கிவிடு,
அழித்துவிடு,
லொழித்துவிடு,
காத்திடவே,

உமிழ்கின்ற
முந்தியொரு
இந்தியதன்
செந்தமிழர்
என்தமிழர்
செங்குருதி
என்குருதி
கட்டிளங்
பச்சிளம்
புறம்காட்டாத்
திறம்கண்டு
தித்திக்கும்
எத்திசையும்
என்னாடும்
கன்னலெனும்
தந்துவிடு
வந்துவிடு
ஆதவனும் உரை
சாதலுக்கும்
அண்ணனெனக்
எண்ணமதை

பேச்சாலுன்
வடநாட்டான்
ஆதிக்கம்
தோள்கொண்டு
என்றென்றும்
கொட்டட்டும்,
கொப்புளித்துக்
காளையர்கள்
பாலர்கள்
தமிழ்வீரம்
பகைப்படைகள்
இரத்தத்தைத்
முத்தமிழின்
பொன்னாடாய்த்
தமிழதனை
நல்வரத்தைத்
என்னெண்ணம்
கேட்டான்,
தலைவணங்காச்
காஞ்சியிலே
முடித்திட்டார்;

தம்பியரை
வாலாட்டிக்
இந்நாட்டில்
சேரனவன்
இன்தமிழைக்
பகைசெத்து
கொதிக்கட்டும்;
கணக்கின்றிச்
பதைபதைத்து
பார்மீது
புறங்காட்டி
தெவிட்டாது
சத்தத்தை
தென்னாட்டைப்
மின்னும் வகை
தயங்காது
வகையாக
அன்னவளின்
செழுந்தமிழர்
அன்றைக்கே
நம் மனதில்

எழுப்பிவிடு,
கல்சுமந்தான்,
பரவுகையில்,
வீரத்தால்
காக்கட்டும்,
மடியட்டும்,
விலங்கறுக்கக்
சாகட்டும்,
அழியட்டும்,
பரவட்டும்,
ஓடட்டும்,
குடிக்கட்டும்,
முழக்கட்டும்,
போற்றிடவே,
செய்திடுவாய்,
முடித்துவிடு,
முடித்தவுடன்
குறைகேட்டான்
மரபினிலே,
அவதரித்தார்,
நிலைத்திட்டார்.

Erosion of The Mind

Our literature, art and architecture are fine specimens of human intelligence—but they bear the revages of time and also the effect of currents and cross currents so that to-day we have to listen to the Foreign historian or scholar in order to realise the "Glory and Grandeur" of our own country.

Our problem is not want of a system — in any branch of knowledge. We have fine specimens in all spheres. We claim also—and that rightly—immortality for our systems, but we have not succeeded in keeping them fresh and young, effective and energetic, for we have allowed them to decay.

ANNA—

அண்ணாவின் வாழ்வில்...

ச. வெற்றிச்செல்வன், இளங்கலை இறுதியாண்டு.

தமிழக மக்கள் அண்ணாவின் பிரிவால் வேதனையுறும் இந்நேரம் அனைவரும் அவரது கருத்துக்களையும், அறிவுரைகளையும் விளக்கி அவற்றை வாழ்வில் மேற் கொள்ளும்படி நமக்கும், மற்றும் அரசியலைச் சார்ந்தோர்க்கும் எடுத்துச் சொல்லி வருகின்றனர். அவற்றில் அதிகமாய் உணர்த்தப்படுவது அவரது தாரக மந்திரமாய்த் திகழ்ந்த 'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' என்பதே. இதுபோது அண்ணா தம்முடைய வாழ்க்கையில் இவற்றையெல்லாம் வழுவாது முறை செய்து வந்தாரா எனும் கேள்வி நம்முள் எழும்.

அண்ணா அவர்கள் தான் வேறு, தனது சமுதாயம் வேறு என இன்றி சமுகத்தினோடு பெரும் உறவை ஏற்படுத்திக் கொண்டு இணைந்து வாழ்ந்த நாளில், அவர் சொன்ன மந்திரத்தை அவர் கடைப்பிடித்ததற்கான சான்றுகள் நிறைய இருக்கின்றன. அவற்றுள் அண்ணாவோடு நெருங்கிப் பழகிய நண்பரின் கூற்றி லிருந்து உதிர்ந்தவைகளில் இதோ சில.

கடமை:

15 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் அண்ணாவின் இல்லத்தில் காஞ்சீ புரத்தை அடுத்த திருப்பருத்திக்குன்றம் என்ற கிராமத்து மக்கள் சிலர் ஒரு கலப்புத் திருமணத்திற்கு அவரைத் தலைமையேற்க அழைத்தார்கள். அந்தக் கிழமையில் தனக்குச் சேலத்தில் ஒரு நிகழ்ச்சி உள்ளதென்றும் திரும்பிவர இரவு 10 மணிக்குமேல் ஆகும் என்றும் கூறினார். ஆனால் வந்தவர்களோ இத்திருமணம் அரிசன மணமகளுக்கும், நாயகர் வகுப்பு மணமகனுக்கும் நடைபெற வேண்டியது. இதை உங்களைத் தவிர நம் ஊரில் யாரும் நடத்த முன்வரமாட்டார்கள். இரவு எந்நேரமாயினும் பரவாயில்லை என்றனர். 'அப்படியா சரி' என்று முழுமனதாய் ஏற்றுக்கொண்டதற்கான தலையசைவோ, நாட்குறிப்பில் பதிவோ செய்து கொள்ளாதது வந்தவர்களைச் சற்றுக் குறை மனதாய் திரும்ப வேண்டியதாக்கியது.

இது நடந்து 20 தினங்களுக்குப்பின் உந்துவண்டியில் சேலத்திலிருந்து திரும்பும்போது, வேலூர் வந்ததும் உடனிருந்தோரிடம் 'காஞ்சிபுரம் வந்ததும் எனக்குச் சொல்லுங்கள் ஓர் நிகழ்ச்சியுள்ளது', என்றார். வந்தவர்கள் மறந்தும் காஞ்சி வந்ததும் பிள்ளையார்பாளையத்திற்கு வண்டியைச் செலுத்தும்படி சொன்னார். காஞ்சியில் எந்த நிகழ்ச்சியும் குறிப்பில் இல்லாதிருந்தும் நடு இரவு எங்கே போகிறார் என்பது வந்தவர்களுக்கு வியப்பாயிருந்தது. அப்பொழுது நேரம் விடியற்காலை 2 மணி. பிள்ளையார்பாளையத்திலிருந்து திருப்பருத்திக்குன்றத்துக்கு அக்காலத்தில் சரியான பாதையில்லாததால் 1½ மைல் நடந்தே சென்று அத்திருமண வீட்டார் குறிப்பிட்ட நாளில் சேர்ந்து தாமதமாய் வந்ததற்கு மன்னிப்புக் கோரி பின்னர் அவ்வேளையிலும் திருமணத்தைச் சிறப்புற நடத்தித்தந்தார்.

கலப்புத் திருமணம் என்பது அன்றைய சமுகத்தில் பெரும் பாவமாய் கருதப்பட்ட ஒன்று; கொண்ட கொள்கை வழுவாது ஏற்றுக்கொண்ட கடமைக் கென நேரம் பாராது துணிவுடன் சமுதாயத்தைச் சீர்திருத்தியது போற்றத் தக்கதே.

கண்ணியம்:

அண்ணு அவர்கள் தீட்டிய 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்ற நாடகம் செங்கற்பட்டில் நடந்து கொண்டிருந்த வேளை, அவரது நெருங்கிய நண்பரான ஆசிரியர் ஒருவர் நாடகத்தில் வேடமேற்றிருந்தார். அரசாங்கப்பணி யாளர்களாயிருந்து இயக்கத்தை வளர்க்கும் நாடகத்தில் நடிப்பது அரசுக்கு எதிராய் இயங்குவதாய் சட்டம் குற்றம் கற்பித்ததால், காவல் துறையினர் ஆசிரிய ரைக் கைது செய்வதற்காக அண்ணுவை அரங்கிற்குள் சந்தித்து, உங்கள் நாடகத் தில் ஆசிரியர் ஒருவர் நடிப்பதாக செய்தி வந்தது உண்மையா? அவரைத் தேட அனுமதி வேண்டும்' என்ருர். அதற்கு அண்ணு அவர்கள் 'ஆமாம், தேடிப் பிடித்துக் கொள்ளுங்கள்' எனச் சொன்ஞர்.

பின்னர் ஒரு நாள் அதே காவல் துறை அதிகாரி அண்ணுவைச் சந்தித்த போது 'உங்களுக்கு அந்த ஆசிரியரைத் தெரிந்தும் ஏன் காட்டவில்லை! என்ருர். அதற்கு 'நான் ஆசிரியர் யாரும் நடிக்கவில்லையென மறுக்கவில்லையே. நீங்களே அவரைத் தேடிக்கொள்ளட்டுமா என்றீர்கள், நானும் சரி என்று உங்கள் திறமைக்கு ஓர் சோதனை வைத்தேன்' என்ருராம்.

அதே ஆசிரிய நண்பர் தன்னை இந்த ஆசிரியப் பணிக்குக் காஞ்சி நகராட்சி ஆணையரிடம் சிபாரிசு செய்யும்படிக் கேட்டதற்கு 'நீயே உன் முயற்சியில் தேடிக் கொள்' என அண்ணு அவர்கள் மறுத்துவிட்டார், ஆசிரியரே நகராட்சிக்கு விண்ணப்பித்துக்கொண்டு நேர்முக சந்திப்பிற்கென ஆணையரின் அறைக்குச் சென்றபோது அண்ணு ஆணையரிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும், நண்பருக்கு உள்ளூற நம்மைச் சிபாரிசு செய்வார் என எண்ணி மகிழ்ந்து கொண் டார். ஆனல் அண்ணு அவர்கள் அந்த ஆசிரியர் அவர்களைத் தெரியாதவர்போலவே இருந்து விட்டார். முடிவில் ஆசிரியருக்கு நகராட்சியில் வாய்ப்புக் கிடைக்காது போய், தனியார் துறையில் வேலை தேடிக்கொண்டார்.

அண்ணு அவர்கள் தனக்கென வகுத்துக்கொண்ட கண்ணியத்தை எவர் பொருட்டும் இழக்காது, அதே நேரத்தில் தன்னை நம்பியோரைக் காட்டிக் கொடுக்காதது பாராட்டத் தக்க ஒன்றே.

கட்டுப்பாடு:

ஒரு சமயம் காஞ்சிபுரத்தில் ஆசிரியர்கள் மாநாடு நடத்த வேண்டி அண்ணு விடம் ஆசிரியர் சங்கச் செயலாளர் வந்து மாநாட்டில் பேச ஒப்புதல் பெற்று சென்றுவிட்டார். அவ்வேளையில் பெருவாரியான ஆசிரியர்கள் அண்ணுவின் கொள்கையிலும், இயக்கத்திலும் வெறுப்புள்ளவர்கள். எனவே இதற்குப் பெரும் எதிர்ப்புத் , தெரிவித்தனர் ஆனல் சங்கச் செயலாளரோ அண்ணுவைத் தவிர வேறு எவரையும் அழைக்கக்கூடாது எனச் சொல்லிவிட்டார்.

இவைகளை அறியாத அண்ணா அவர்கள், பின்னர் தெரிந்தவுடன் ஆசிரியர் சங்கச் செயலாளரை அழைத்து 'நீ செய்யும் இக்காரியத்தினால் உங்களுக்குள் உள்ள ஒற்றுமை பாழ்படும். ஆசிரிய சமுதாயத்தில் ஒற்றுமையின்மை எனின் இனி வளரும் பிஞ்சு நெஞ்சங்களிலிருந்து பிணைப்பும், கட்டுப்பாடும் அழிந்துவிடும். மேலும் உன் பதவியின் துணைகொண்டு பெரும்பான்மைக்கு மதிப்பளிக்காமலிருக்க பழகிக்கொள்ளவே கூடாது. எனவே நான் அம்மாநாட்டில் கலந்துகொண்டு உங்கள் கட்டுப்பாட்டைக் குறைக்க விரும்பவில்லை என அழுத்தமாய் மறுத்து விட்டார். வந்த செயலரும் வழியேதுமின்றித் திரும்பினார்.

அறிஞர் பெருந்தகை தனக்குள் கட்டுப்பாட்டை வளர்த்து, தன் சமூகத்தின் கட்டுப்பாட்டையும் உருவாக்க முயன்ற செயல் எவ்வகையிலும் மேம்பட்டதாகும்.

மனிதனும் மிருகமும்

கழுகுபோலக் கொத்துகிறான், பாம்பாகச் சீறுகிறான்.
தேளாகக் கொட்டுகிறான், ஆந்தைபோல அலறுகிறான்
குரங்குத்தனம் செய்கிறான், பூனைபோன்ற வஞ்சகன்
எருமைக்கடா போன்ற முரடன், தவளைபோலக் கத்துகிறான்.
வண்டுபோலக் குடைகிறான், கிடக்கிறான் கழுதை.
அடித்து விரட்டு நாயை, நரிக்குணம் அவனுக்கு
புலிபோலப் பாய்கிறான், ஒட்டகம் போல முதுகு
ஓநாய் போலச் சுபாவம், எலிபோலத் திருடுவான்
கரடியாய்க் கத்துவான், ஆமைபோல நகருவான்
உடும்புப்பிடி பிடிப்பான்—

என்றெல்லாம் பேசுகிறோம். என்ன பொருள் தெரிகிறது? மனிதனிடம் மிருக இயல்பு மறைந்திருக்கிறது, புற்றரவுபோல! எந்த நேரத்திலும் தலைதூக்க லாம்! எப்போதும் விழிப்பாக இருந்தாக வேண்டும்?!

மிருகம், கூண்டில் அடைக்கப்பட்டால், வெளியே வராது; பிறருக்கு ஆபத்து ஏற்படாது.

மனிதனிடம் உள்ள மிருக இயல்பு, கூட்டிலே அடைக்கப்பட்ட மிருகமல்லவே! தாளுமில்லை, கதவுமில்லை, மனமெனும் அறையில்! எனவே எந்த நேரத்திலும், மிருக இயல்பு வெளிக் கிளம்பி விடக்கூடும்.

அடித்துவிட்டான், வெட்டிவிட்டான், குத்திவிட்டான், பெயர்த்து விட்டான், பிளந்துவிட்டான், ஒடித்துவிட்டான், உதிர்த்துவிட்டான், கொன்று விட்டான், புதைத்துவிட்டான், கண்ணை அவித்தான், காதை அறுத்தான்—

என்றெல்லாம் கேள்விப்படுகிறோமே, என்ன தெரிகிறது அந்தப் பேச்சி லிருந்து! மனிதன் மிருகம் செய்வதையெல்லாம் செய்யக்கூடியவன்—செய்து கொண்டு இருந்தவன்—ஏமாந்தால் மீண்டும் செய்யக் கூடியவன், என்றல்லவா தெரிகிறது கூட்டில் அடைக்கப்படாத, கொல்லும் தொழிலை விட்டுவிடாத மிருகம், மனித உள்ளத்திலேயே பதுங்கிக் கொண்டிருக்கிறது ..... மனிதனிடம் மிருக இயல்பு எழவிடாதபடி சுற்றுச் சார்பு அவ்வப்போது திருத்தி அமைக்கப் படுவதில், அரசு பெரும் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும்; பொறுப்பேற்க வேண்டும்.

தொகுப்பு: கன்னி. திராவிட நாடு–பொங்கல் மலர் (1962)
அண்ணா.

UNFORGETTABLE ANNA

A. Udaiya Kumar Final B.A.

Dr. C. N. Annadurai has passed away.

On 2nd Feb. 1969 Dr. C. N. Annadurai passed away at mid-night. The whole India was stunned to hear the news of his death. When the people of Tamil Nadu heard the news, they rushed to Madras to have a last glimpse of their beloved 'Anna'.

Dr. C N. Annadurai is no more.

Dr. C. N. Annadurai was born on 15th September 1909. Kancheepuram is his native town. First he studied in Pachaiyappa's High School, Kancheepuram. He was then a graduate of Pachaiyappa's College, Madras. As a college student, he took an active part in seminars, debates, discussions and meetings that were held in the college. At the age of 21, he married Rani Ammal. He started his life as a teacher. But inspite of his deep attachment to Arts, he could no longer stick to the teaching profession. So he left the job and joined Bobbili's Justice Party. He left the party when his leaders refused to give up the British Titles. Then he joined E. V. R's self-respecting movement which developed into Dravida Kazhagam later. He became the editor of the party paper 'Viduthalai', a Tamil weekly. His writings were effective and at the sametime, they fascinated the masses.

But now that effective writer is no more.

When some Controversies arose with his political 'Guru' E. V. R, he bravely opposed his 'Guru'. He left the party and with some of his followers he organised Dravida Munnetra Kazhagan in 1949. First he started his party only to do social reforms. But later he developed his party and entered into politics, so that his party could do more reforms with the help of the power.

We have lost the brave founder of D. M. K Party!

As soon as he began his party, he stood as an example for politeness and humility: He moved with all people irrespective of status. He blossomed into a great speaker. He could deliver lectures both in Tamil as well as English. Millions of people were attracted to join D. M. K. party. Whenever he addressed even the opposition members listened calmly. For instance Mr. Chavan, Union Minister, who does not know Tamil at all, was very much impressed by the lecture of C. N. Annadurai.

That powerful orator is not with us now!

He tried very much to better the conditions of the people from ignorance of the so called religious conventions and superstitions which affected the growth of the cultured society. He edited his party papers 'Dravida Nadu' a Tamil weekly and 'Home land' an English weekly. Under his wise leadership, his party D. M. K gave up all its separatist ideas when Government of India enacted Anti-Cessation Act. He wrote many fictions essays, dramas and criticisms on literature. Thus he earned good name. He used to read all classics in both Tamil and English languages. As Chief Minisner of Tamil Nadu, he promoted Tamil by making it as the official language of the state and introducing Tamil in College Courses. He succeeded in his attempt to change the former name of the Madras state into Tamil Nadu. Thus he rendered all his services to promote Tamil language. He won a great reputation by writing dialogues for films.

Now we find that the classics lost one of their affectionate fan. 'Tamil Thai' is still regreting for his death. That social reformer, magnanimous leader passed away.

He was one of the best thinkers. That was the main reason why he secured a good name in the art of writing. He formulated three sound doctrines for human beings to progress in their life. His doctrines were 'Duty, Dignity and Discipline'. He not only formulated, but also set an example as a follower of these principles.

Now that inventor of doctrines is no more.

He was the architect of the D. M. K's smashing victory of 1967. Like a lamp in the darkness, under his head, his cabinet showed the real path to the prosperous life to the Tamil Nadu people. As the Chief Minister of Tamil Nadu, he behaved in such a way that even the members of opposition party praised him. He made a friendly visit to foreign nations. There, he explained and cleared everythihg and there by he gained good name for the whole Indian Democracy. He was honoured with a Doctorate Degree by the Anna malai University. As Chief Minister, he managed somehow to maintain good relationship with the Central Government. He kept a commandable and cordial relationship with the Centre eventhough he belonged to opposition party and though he had his own Controversies with the centre. At the sametime he never hesitated to express his objections on the language problem. Besides he wanted more powers for states.

We have lost our Chief Minister Dr. C. N. Annadurai now.

Above all, he became the elder brother ('Anna') to youngsters, younger brother to old, son to Tamilian Mothers and a great leader for millions of people.

Now that beloved 'Anna' has passed away

If we want to pay homage to our Anna really, we must not waste our precious time. Instead of wasting the time, we must follow his doctrines and advices. That is the only way to pay our homage to our 'Anna'

May His soul rest in peace.

"ANNA–MY SOUL"

KUMARA KARUPPAIAH, II B. A., History.

Able and astute earnest man,
Ever that glowed as peoples dawn;
Noble, naive and notable peer,
Never once again 'll come to this sphere!
Numerous tasks he rendered the nation,
Now he camly sleeps before the ocean;
Alas! my Anna where thee gone?
Orphan like I rambling alone.

Marvellous, splendid, amusing tales,
Morals and mottos thine are pearls;
Young or old even father and mother,
Everyone calls thee Anna hither!
Shrewd and sagacious sincere life,
Showed me path as becon to ship
Oh! that great and glorious pioneer,
Steered me over one decade more;
Under him much I derived in this terra,
Chance I got to live in 'Anna's Era.
Love and wisdom leader all.
'Anna' you are my heart and soul.

பகுத்தறிவுச் செஞ்ஞாயிறு

ப. இளம்வழுதி, இளமறிவியல், இரண்டாம் ஆண்டு

தமிழரின் சிந்தனை அறிவைத் தூண்டத் தோன்றிய ஒளிவிளக்காகத் திகழ்கின்றார் பகுத்தறிவுப் பேராசிரியர் பெரியார். இவ்வொளி விளக்கைத் தமிழகமெங்கும் தூக்கித் திரிந்து தொண்டாற்றிய தலைமகன், சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுச் செஞ்ஞாயிறு அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்"

பகுத்தறிவைப் பரப்பும் செயல்வன்மை அண்ணாவிற்கு இருப்பதையுணர்ந்து, பெரியார் அப்பொறுப்பை அண்ணாவிடம் விட்டதன் பயன் என்ன? பல நூற்றாண்டுகளாய்த் தமிழக அரியணையில் வீற்றிருந்த மடமையை, அடிமைச் சின்னத்தைத் தூக்கி எறிந்து, 'பகுத்தறிவை' அரியணை ஏற்றினார். இத்தமிழகத்திற்குச் செய்ய வேண்டிய நற்பணி இதனினும் ஒன்று உள்ளதா? 'நாநலம் என்னும் நலனுடைமை' உடைய நமதண்ணன், எப்பொருளை யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காணும் அறிவுடையவர். இவரது இலக்கியத் திறனாய்வு 'பகுத்தறிவு' வழிநின்று ஒளிர்விடுகின்றது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என குறள் காட்டும் அறிவு வழிநின்று இலக்கியக் கருத்துக்களை அள்ளி வைத்திருப்பவர் அண்ணா அவர்கள். "நாட்டின் நிலை நவிலா ஏடு மாளட்டும்; இலக்கியம் இறக்கட்டும்; கலை கலையட்டும்; நமக்கு வேண்டுவது ஏட்டைப் புரட்டினால் நாடு, நாட்டின் மக்கள், மக்கள் வாழ்க்கை, அவர்தம் வாழ்க்கைவளன், நாகரிகம், இன்னபிற யாவும் தெள்ளிதில் விளங்குதல் வேண்டும்; அது ஏட்டோடு நிற்றல் சாலாது; நடைமுறையில் நடப்பதையே நவிலும் நூலாதல் வேண்டும்" என்கிறார் அண்ணா.

"நமக்கு இன்றைக்கிருக்கின்ற இலக்கியங்கள், காட்டுமிராண்டி இலக்கியங்கள்; புராணங்கள், இதிகாசங்கள், தருமங்கள், மதம் எல்லாமே காட்டுமிராண்டித் தன்மையுடையதோடு நம்மை இழிமக்களாக ஆக்கிவைத்தவையுமாகும்"—என்கிறார் பெரியார். நமது இலக்கிய ஏடுகள் எல்லாம் மதம் என்னும் போர்வையால் மூடப்பப்பட்டுள்ளன. நமது அறிவை இழக்கச்செய்து நம்மை மடையர்களாக்கி விடுகின்றன. "நமது மக்கள் தம் அறிவு, ஆக்கம், சொல், செயல், சிந்தனை, ஊக்கம், உறுதி, உழைப்பு, கல்வி, கேள்வி முதலியவற்றால் முற்போக்கடைய முற்படாமல் அவைகளை வீணே ஆண்டவனின் அற்புத லீலா விநோதங்களைப் படிப்பதிலும், பாடுவதிலும், விழா கொண்டாடுவதிலும் செலவிடுகின்றனர்"— என நமது இன்றைய நிலையை உணர்த்துகின்றார் அண்ணா.

தமிழர்காள்! பகுத்தறிவுக் கண்ணொடு தமிழகக் கோயிலை அணுகுங்கள். அவற்றின் நிலை என்ன? இடைமறைக்க அரைமுழத்துண்டில்லாமல் உலவுகின்ற நூற்றுக் கணக்கான மக்கள்; அரைவயிற்றுக் கஞ்சிக்கு அலைகின்ற ஆயிரக் கணக்கான மக்கள் இங்கு மலிந்துகிடக்கின்றார்கள். இந்நிலையில் கோயிலுக்கோ பல இலச்கமதிப்புள்ள சொத்துகள்! சிந்தித்துப் பாருங்கள்; திருமூலர் பாடுகிறார்:

"படமாடுங் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா;
நடமாடுங் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடுங் கோயில் பகவற்கு அஃது ஆமே."

'நடமாடும் கோயில்களான இவ்வேழைகளுக்கொன்று கொடுத்தால் படம் ஆடுங் கோயிலில் எழுந்தருளியிருக்கிற இறைவனுக்குக் கொடுத்தது மாதிரி. அதை விடுத்துக் கோயிலிலுள்ள சிலைக்கு ஒன்று செலவிட்டால், அது இந்த ஏழை மக்களை ஏமாற்றிய மாதிரி'—என்கிறார். இதைத்தான் பகுத்தறிவாதிகள் கூறுகிறார்கள். இதைக் கூறினால் 'நாத்திகன்' என்கின்றனர்; 'நாத்திகன் என்றால் அறிவைக் கொண்டு ஆராய்பவன், அறிவைப் பயன் படுத்துகிறவன் என்றே பொருள். எதையும் தெளிவுபடுத்தி அறிவைப் பயன்படுத்துவதுதான் நாத்திகன் வேலை' என்கிறார் பெரியார்.

சமயச்சார்பற்ற திருக்குறளுக்கு மாசு கற்பிக்கக் கருதி அவரைப்பற்றிப் பலவாறாக எழுதிவருகிறார்கள். பகுத்தறிவுக்கண் கொண்டாய்ந்து பார்க்கின் அது தவறு என்பது புலனாகும். அவர் காட்டும் வழிபாடு, 'அறிவு வழிபாடு' ஒன்றுதான்.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

இக்குறளில் கற்றதின் பயன் 'வாலறிவனை,' 'அறிஞனை' தொழுதல் என்றே குறிப்பிடுகிறார். 'வாலறிவன்' என்பதற்குக் 'கடவுள்' எனப் பொருள் கற்பிக்கப்படுகிறது. 'கடவுள் எனும் சொல் நமதறிவு வளத்தைக் காட்டாது; அறிவின் வெற்றிடத்தையே குறிக்கும் [The word 'God' expresses not our ideas, but want of them] என சான் இசுடுவர்ட்டுமில் குறிப்பிடுகின்றார்.

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு"

இக்குறள் வழியில் நிற்றல் வேண்டும். மாந்தன் நிலா மண்டலத்தில் குடியேறும் அளவிற்கு அறிவியல் வளர்ந்து வரும் இந்நாளில், நிலாவைக் கேதுவும், இராகுவும் விழுங்குகின்றன எனக் கூறி, இங்குள்ள அறிவியல்மேதைகளும், அக்காட்சியைக் கண்டபின்னர் நீராடி தேவாரம் திருவாசகம் படிக்கிறார்கள் என்று கூறும் பொழுது உண்மையில் நாம் வெட்கப்பட வேண்டியவர்களே.

"எனது பணி அறிவாராய்ச்சி; அறிஞர்கள் என ஊரை ஏமாற்றிய உன்மத்தரின் உண்மை உருவம் எனது பகுத்தறிவுப் பணியினால் புரியலாயிற்று. உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் கோபப்படுவதில் பொருளிருக்கிறது. நாடு ஏன் என்மீது பழி சுமத்த வேண்டும்?... ஆற்றல் இருக்கும்வரை, கடைசி மூச்சு உள்ளவரை அறிவுப் பணியைத் தொடர்வேன்; ஓயமாட்டேன்" என முழங்கிய கிரேக்கப் பெரியார் சாக்ரடீசாக விளங்கியவர் அண்ணா. தமிழகத்தில் அறிவொளியைப் பரப்பும் பொருட்டுத் தன்னையே மாய்த்துக் கொண்ட அண்ணா புகழ் வாழி!

வளர்க தமிழ்! ஒளிர்க பகுத்தறிவு!!

—※—

அண்ணனும் அண்ணாவும்

இர. நடராசன், இளம் அறிவியல், முதலாண்டு

உலகில் தோன்றுபவர்கள் பலராக இருப்பினும் உலகம் சிலரைத்தான் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறது. கணங்கணந் தோன்றிக் கணம் கணம் மறையும் பிணம் பல. இவையெலாம் பிறந்தார் என்பவோ? உலகம் சிறக்க, உயர்ந்த செயல் புரிந்த பலரில் மிகச் சிறந்தவராக விளங்கியவர்கள் நம் அண்ணனும் அண்ணாவும் ஆவர். காந்தியப் பாதையில் கருத்தொருமித்து நடந்தவர் நம் அண்ணா.

அன்பும் பண்பும் பெற்று, பணிவோடு பிறர் துயரம் துடைத்த தூண்கள் இவ்விருவரும். தகைமைசால் தலைமக்கள். பெரியோரைக் கரும்பாகவும், சிறியோரைத் துரும்பாகவும் எண்ணாமல் அனைவரையும் சமநிலையோடு எண்ணி வாழ்ந்த சமத்தர்கள். "இன்னர் எமர்; இனையர் பிறர்" என்னும் வேறுபாடு கருதாது வாழ்ந்தவர்கள். எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி வாழ்ந்த உத்தமருக்கெல்லாம் உத்தமர்கள்;

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்னும் வள்ளுவரின் தெள்ளிய மொழிக்குத் துல்லிய இலக்கணமானவர்கள்.

காந்தியடிகள் அன்றைய சமுதாயத்திற்கு ஒரு புரட்சியாளராய் விளங்கினார்; அண்ணா இன்றைய சமுதாயத்திற்குப் புரட்சியாளராய்த் திகழ்ந்தார். காந்தி எவ்வாறு தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டாரோ அதே போலத்தான் அண்ணாவும் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். அண்ணாவின் வாழ்க்கை வழி-போதனைகள் யாவுமே இதனைப் பறைசாற்றுகின்றன.

"ஆயிரம் சாதிகள் ஒப்பி நரி
அன்னவர் காலிடை வீழும்"

தன்மையைக் கண்டித்தார் அவர். காந்தி உண்மைச் சமய வழி நின்று மக்களின் அறியாமை—மூடக் கொள்கைகள்—பிளவுபட்ட தன்மைகள் ஆகியவற்றைக் கண்டு உள்ளம் குமுறியது போலவே அண்ணாவும் குமுறினார்

நாய்களைப் போலச் சண்டை வளர்க்கும் மதங்களைக் கண்டித்து நல் வழி காட்டினார். நீயெனல் நானெனல் ஒன்றே என்னும் நெஞ்சில் விளைவதே வாழ்வு என விளக்கினார்,

" If I should reborn, I should wish to be born an untouchable so that I may share their sorrows and sufferings in order that I may endeavour to free myself and them from that miserable condition "

என்ற காந்தியின் கொள்கையையே அண்ணாவும் விரும்பினார். நாட்டின் பிஞ்சு மணங்கள் பல நஞ்சு மனங்களால் சாதிவெறி ஊட்டப்பெற்று அலைந்து திரியும் அவல வாழ்வை இருவருமே வெறுத்தனர். காந்தியின் விருப்பப்படி அண்ணா கலப்புத் திருமணத்தை ஆதரித்துத் தங்கப் பதக்கம் அளித்து உண்மை காந்தியவாதி ஆனார்.

தன்னுடைய எலும்பையும் பிறருக்களிக்கும் அன்பு கொண்ட காந்தியவாதி அண்ணா.

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”

என்னும் பொன்மொழியைத் தன் மொழியாகக் கொண்டு தரணியிலே சிறந்தவர்கள் இவர்கள்.

“அதிகாரம் துப்பாக்கிக் குழலில்தான் பிறக்கிறது” என்று கதைத்த கயவர்களைச் சாடி அன்பு வழி நிற்கச் செய்தவர்கள். “அன்பினால் ஆவதுண்டோ?” என்று கேட்டோரை “ஆகும்” என்று சொல்லாமல் செயலில் காட்டி சிறப்படைந்தனர் இருவரும்.

பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சம் படைத்து நல்லவர்களாய்த் திகழ்ந்தனர்.

ஆகவே நாமும் சாதி சமயப் பிரிவினைகள் போன்ற ஆபாசப் புண்களை, நாட்டிலிருந்து போக்கி வாழ்வோமாக. அதுவே அவ்விரு பெருந்தலைவர்களை நாம் பணியும் வழியாகும்.

சமயம் பற்றி அண்ணா

“மனிதன் மற்றெல்லா வற்றிற்கும் முதன்மையானவன் என்றும், கடவுளைத் தவிர வேறு எவர்க்கும் அடிமை யாகி விடத்தேவையில்லை என்றும், சமயம் கூறுமானால் நான் நூற்றுக்கு நூறு சமயவாதியே. இதை விட்டுத் தனி மனிதருக்குள் கீழ்சாதி மேற்சாதி என்று ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கக் கூடியதாய்ச் சமயம் இருக்குமானால் அது நடவாது.

(மனிதனைப் பாகுபாடு செய்திடுவதே கடவுள்நெறி என்று எவரேனும் சொல்வார்களானால் நான் நாத்திகனே என்றும்தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமயநெறி என்பது புனிதமானது, உண்மையானது, மனிதப்பற்றுள்ளது, அடக்க உணர்வைச் சோதிப்பது என்றால் என்னைச் சமயத்துக்கு அப்பாற்பட்டவன் என்று எவரும் சொல்லிவிட இயலாது. என்னை நாத்திகன் என்று கூறுவாருக்கு நான்சொல்ல விரும்புவது இதுதான்.)’

7—1—68 இல் சென்னையில் குரு கோவிந்த சிங் அவர்களின் 301 வது ஆடுவிழாவில்

தொகுப்பு: செவ்வேள்.

"துயில்கின்ற தலைவன்"

—தெ. கு. சுப்பிரமணியன், இளங்கலை முதலாண்டு.

புத்தர், இயேசுநாதர், காந்தியடிகள் என்னும் உலக உத்தமர் வரிசையிலே தனிச் சிறப்புப் பெற்று விட்டார் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா. குப்தர்கள் காலத்தில் ஆண்ட அரசர்கள் பலர் இருப்பினும் இரண்டாம் சந்திர்குப்தன் காலத்தைத்தான் குப்தர்களின் பொற்காலம் எனக் கூறுகின்றார்கள். அதேபோலத் தமிழகத்தில் பல முதல் அமைச்சர்கள் பதவி ஏற்றிருந்தாலும், அறிஞரின் காலத்தைத்தான் தமிழரின் பொற்காலமெனக் கூறுகின்றனர் கன்னித்தமிழுக்குக் காவலனாய், வளமிக்க தமிழுக்கு வாயிற்படியாய், ஏற்றமிகும் தமிழுக்கு ஏணியாய் விளங்கினார் நமது அண்ணா

கடமையின் காவலன், கண்ணியத்தின் பிறப்பிடம், கட்டுப்பாட்டின் மொத்த உருவம் நமது அண்ணா. காலன் தன் கரங்களை அண்ணாவிடம் நீட்டி அழைத்துச் சென்று விட்டான். விதி என்ற கொடியோன் சதி செய்து விட்டான். காலம் அண்ணாவை வென்று விட்டது. ஆனால் அவர் கருத்து வெல்லப்படாதது.

அண்ணா செல்லுமிடமெல்லாம் பாராட்டும், பட்டமும், குவிந்த வண்ணமிருக்கும். கல்கி திரு. கிருட்டினமூர்த்தி தந்த 'தென்னாட்டுப் பெர்னாட்சா' என்ற பட்டமும், கழகத்தம்பிகள் தந்த 'மாமேதை' பட்டமும், அமெரிக்காவில் கொடுத்த 'சப்பெலோசிப்' பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தந்த 'டாக்டர்' பட்டமும், காஞ்சி கரிபால்டி, வீர சூலியசீசர், தத்துவ ஞானி சாக்ரடீசு, நடிகர், கலைஞர் என்னும் பட்டங்களும் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

தம்பிகளுக்கு அண்ணனாய், தமிழுக்குத் தந்தையாய், உண்மைக்கு உறைவிடமாய், நீதிக்கு நிலவிடமாய், பொய்மையைப் புறக்கணித்து, ஏழ்மையை விரட்டி, வாழ்வை வளப்படுத்தி, நாட்டை நற்பாதையிலே நடத்தி, நற் பெயர் நாட்டினார்

அறிவுக் களஞ்சியமே நமது அண்ணன். சான்றுகயேல் பல்கலைக் கழகத்திலே அண்ணாவின் அறிவுத் திறமையை, அடுக்கு மொழித் திறமையை அறிய விரும்பிய ஒருவர் "What is your opinion about a union?—என்றார். உடனே அண்ணா அவர்கள் Union is nothing but an onion—என்றார் கேட்டவருக்குப் புரியவில்லை. விளக்கினார் அண்ணா. Union—என்பது வெங்காயத்திற்குச் சமம் என்றார். வெங்காயத்தை உரித்துக் கொண்டே போனால் கடைசியில் ஒன்றும் மிஞ்சாது. அதைப் போல் ஒற்றுமைக் கூட்டிலிருந்து ஒருவர்பின் ஒருவர் பிரிந்து சென்றால் ஒருவரும் அதிலிருக்கமாட்டாரென வேடிக்கையாகவும், விந்தையாகவும் எடுத்தியம்பினார். அமெரிக்கரும் அண்ணாவின் அறிவுத் திறமையைப் பாராட்டினர்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற அண்ணா அவர்கள் கம்பன் சிலைக்குப் பின்னால், கூக்குரலிடும் கடலலைகளுக்கு முன்னால், பல்கலைக் கழகத்திற்கு எதிரில் துயில் நீக்க முடியாத ஓயா உறக்கத்தில் உறங்கிக்கொண்டிருக்கிறார். நம் எல்லோரின் உள்ளத்திலும் பசுமையான நினைவாக அறிஞர் என்றுமிருப்பார் என்பதில் ஐயமில்லை.

பண்பாளர் அண்ணா

நா. ஆறுமுகம், எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்.

மனம் உள்ளவனே மனிதன். இரக்கம் என்னும் ஒரு பொருளைப் பெற்றிருப்பதே மனமுள்ளதற்கு அடையாளம். கழனியிலே அறுத்தெடுத்த காய் நெல், நீரில் நனைந்து வெயிலில் காய்ந்து அரிசியாகிறது; அது மீண்டும் நீரில் நனைந்து நனைந்து நெருப்பில் வெந்து பக்குவப்பட்ட பிறகே சோருகி உணவாகப் பயன் படுகிறது. மனமும் அன்பாகிய நீரில் நனைந்தும் தொண்டாகிய வெப்பத்தில் காய்ந்தும் பக்குவப்படுகிறது; ஒத்தது அறிந்து உயிர்வாழும் பெற்றியைப் பெறு-கிறது. இதை மக்கட் பண்பு என்று பெரியோர் குறிப்பிடுவர். இந்தப் பண்புள்ள வர்கள் வாழ்தலால்தான் உலகம் நின்று நிலைபெற்று வாழ்கிறது.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் —திருக்குறள்; 997

என்று, 'பாடு அறிந்து ஒழுகும் பண்பு' அற்றவர்களைத் திருவள்ளுவர் கடிகிருர். பண்புடைமைக்குக் கடல் போன்று வாழ்ந்தவர் அறிஞர் அண்ணு அவர்கள் ஆவர்.

தமிழ் நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணுதுரை அவர்களுக்கு இன்றைக்கு இருக்கும் புகழ் கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்தின் கலசம் போன்றது. இதைக்கண்டு மாணவர்கள் அச்சப்படுவதோ ஆயாசப்படுவதோ தேவையில்லை. ஆனுல் அந்தக் கோபுரக்கலசத்துக்கு அடிப்படையாய் அமைந்துள்ள கோபுரத்தின் வளர்ச்சியை எண்ணிப்பார்ப்பது பயனளிக்கும். அறிஞர் அண்ணுவின் இறவாத புகழ் வாழ்வைக் கொடுக்கக்கூடிய அரிய செயல்களுக்கு ஆதாரமாய் அமைவன அவருடைய பண்பு நலன்களே எனலாம். அவருக்கு உள்ள சிறப்பெல்லாம் அவருடைய குணத்தால் வந்த சிறப்பே. இங்கு சிலவற்றைக் காணுவோம்.

வெகுளாமை:

கோபம் மனிதனுடைய கொடிய பகைவன். அது ஒருவனுடைய சிரிப்பையும் மகிழ்ச்சியையும் அழிக்கும். பற்றினவரைக் கொல்லும் பெரு நெருப்பை ஒத்த தீமையை ஒருவன் செய்தாலும் அவனிடத்தில் கோபப்படாமல் இருப்பது பெரும் நன்மையைத் தரும். கோபத்தை வென்ற அரும்பெருந்திருவாய்த் திகழ்ந்தவர் அறிஞர் அண்ணு.

தம்மையும் தம்முடைய இயக்கத்தையும் எவ்வளவு கடுமையாக யார், எப்போது தாக்கினுலும், கோபம் கொள்ளாமல் ஆத்திரப்படாமல் அமைதியாய்ப் பதில் உரைத்தவர் அண்ணு. 1954ஆம் ஆண்டில் ஒரு நாள்! காஞ்சிபுரத்தில் கண்ணன் திரைப்பட அரங்குக்கு அருகிலுள்ள திடலில் தம்முடைய இயக்கத்தை மிகக் கேவலமாகத் திட்டியவர்களுக்குச் சொன்னுர்:

இரண்டாம் உலகப் பெரும் போரில் தன்னுடைய பழிவாங்கும் உணர்ச்சித் தினவைப் போக்கிக் கொள்வதற்காகச் செருமானிய சர்வாதிகாரி அடால்ப் இட்லர், இங்கிலாந்தின்மீது கொலை நடுக்கத்தை உண்டாக்கும் குண்டு மாரி பொழிந்தபோது, துணிவுக்கும் உறுதிக்கும் பெயர் பெற்ற வின்சட்டன் சர்ச்சில், 'செருமானியின் குண்டுகளை—தாக்குதலை—இங்கிலாந்து தாங்கிக் கொள்ளும்' [London can take that] என்றார். அதைப் போலவே நான் கூறுகிறேன்; 'உங்களுடைய திட்டுகளையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தாங்கிக் கொள்ளும்—[The D. M. K. can take that] தாங்கிக் கொண்டு வளரும்."

திட்டுகளைத் தாங்கி கொண்டு வளருவது ஒரு சமூகச் சீராக்க இயக்கத்துக்கு இயற்கை; அதுதான் சிறப்பு; அதில்தான் ஆற்றல் இருக்கிறது என்பதை இதன் மூலம் அண்ணா தெளிவாக்குவதைக் காணலாம்.

1956ஆம் ஆண்டு தம்மைப்பற்றித் தீவிரமாகத் திட்டும் பணியிலீடுபட்டவர்களைப் பார்த்து அறிஞர் அண்ணா கூறினார்.

"நீங்கள் எவ்வளவுதான் என்னைத் திட்டினாலும் எனக்குக் கோபம் வராது. அண்ணாதுரைக்குக் கோபம் வரும்படி செய்ய யாராலும் முடியாது நான் இப்படிச் சொல்வதனால் அண்ணாதுரை சொரணை கெட்டவன் என்றோ கோழை என்றோ எண்ண வேண்டாம்; நான்தான் பெரியாரின் அப்பழுக்கற்ற உண்மைத் தொண்டன்." அறிஞர் அண்ணா உள்ளத்தாலும் கோபத்தை நினையாமல் இருந்தார். ஆகவே நினைத்த செல்வங்களையெல்லாம் எளிதில் பெற்று உயர்ந்தார்.

பிறரைப் போற்றுதல்:

'பாம்பறியும் பாம்பின் கால்' என்னும் பழமொழிக்கிணங்க அறிஞர் அண்ணா அவர்கள் கற்றறிந்த சான்றோர்களைப் போற்றி வாழ்ந்தார்.

1956ஆம் ஆண்டில், செந்தமிழ்க் களஞ்சியம் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் மணிவிழா காஞ்சிபுரம், ஆந்திரசன் உயர்நிலைப் பள்ளியில் மிக்கச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. அன்று வேறு ஒரு பணி காரணமாக அண்ணா கோவை சென்றிருந்தார். ஆகவே மணி விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை. இரண்டு நாள்கள் கழித்துத் திரும்பிய அண்ணாவிடம் அவருடைய அருமைத் 'தொத்தா' அவர்கள் 'என்னப்பா, ஏதோ தமிழுக்குப் பாடு படுகிறேன் என்று கூறுகிறாய்; நம்மூரில் நடந்த மகாவித்துவானின் மணி விழாவில் கலந்துகொள்ளவில்லையே அது தவறல்லவா? உடனே சென்று மகாவித்து வானைப் பார்த்துவிட்டு வா' என்று கூறினார்கள். அண்ணாவும் தடை சொல்லாமல் அன்று மாலையே தம்முடைய நண்பர்களுடன் ஒரு கூடை நிறையப் பழங்களையும் ஒரு மலர் மாலையையும் வாங்கிக் கொண்டு திருப்புக்கூடல் வீதியிலிருந்த மகாவித்து வான் மே. வீ. வே. அவர்களின் வீட்டுக்குச் சென்றார். ஆனால் அவர் அப்போது வீட்டில் இல்லை; இராமகிருஷ்ணமடம் நூலகத்திற்குச் சென்றிருந்தார். அதற்கு முன் அங்கு சென்றிராத அண்ணா அவர்கள் அங்குத் தேடிச் சென்று மகாவித்து வானைப் பார்த்து, மாலையணிவித்து வணக்கம் செலுத்தினார். என்னே அண்ணா வினுடைய பெருந்தன்மை!

இருக்கும் இடம் தேடிக் கற்றோரைப் போற்றிய இவருடைய பண்பே, இலட்சக்கணக்கானோர் இன்று இவருடைய சமாதியை நோக்கி வந்து அஞ்சலி செலுத்துவதற்குக் காரணம் என்பதை உணருவோமாக.

எளிமை:

கற்றறிந்த சான்றோர்களைப்போற்றியதைப் போலவே எளிய மக்களையும் மாணவர்களையும் அன்போடு மதித்து வாழ்ந்தார்.

1954ஆம் ஆண்டு நான் நம்முடைய கல்லூரியில் (காஞ்சி, பச்சையப்பன் கல்லூரி) இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது கையெழுத்து மலர் வெளியீட்டுப் போட்டி நடைபெற்றது. மாணவர்களாகிய நாங்கள் பல குழுக்களாகப் பிரிந்து மலர் வெளியிடுவதில் ஈடுபட்டோம். என்னுடைய குழு "குவியல்" என்னும் தலைப்பில் வெளியிட்டிருந்த மலரை எடுத்துக்கொண்டு முன்னுரை பெறுவதற்காக அறிஞர் அண்ணா அவர்களிடம் கொடுத்தேன். அண்ணா அவர்கள் மலரைப் பெற்றுக்கொண்டு இரண்டு வாரத்தில் முன்னுரை அளிப்பதாகக் கூறினார்கள். பெருமகிழ்ச்சியோடு வீடு திரும்பினேன். இரண்டு வாரம் கழித்து இருமுறை சென்றும் நாளை, நாளை என்று அண்ணா அவர்கள் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தார். மூன்றாவது நாள் செல்லும்போதும் முன்னுரை கிடைக்கவில்லை. சற்றுக் கண்கலங்கிய நிலையில் அண்ணாவிடம் 'கல்லூரி முதல்வர் அவசரப்படுத்துகிறார்; இறுதி நாளான நாளைய நாளில் கொடுக்காவிட்டால் மலர் போட்டியில் இடம் பெறாது. ஆகவே எப்படியாவது.......... ..' என்று மெல்ல இழுத்தேன். அது கண்ட அண்ணா 'கட்டாயம் நாளை தருவேன் வா' என்றார்.

அடுத்த நாள் ஓர் ஏர் உழவனைப்போல, ஏக்கத்தோடு செல்லும் பக்தனைப் போலச் சென்றேன். அண்ணாவை வெளியே காண வில்லை. 'அண்ணா இல்லையா' என்று கேட்டேன், உள்ளேயிருந்த 'தொத்தா' அவர்கள் 'அண்ணா உறங்குகிறது, இப்போது பார்க்க முடியாது' என்றார்.

கலங்கிய நிலையில் ஒரு வினாடி அங்கிருந்தபோது "யாரது? முன்னுரைத் தம்பியா"? என்றது அண்ணாவின் குரல். ஏரி நிறைந்தன்ன இன்பம் அடைந்து, துணிவை வரவழைத்துக் கொண்டு சற்று உரத்த குரலில் "ஆம், அண்ணா!" என்றேன். என்ன வியப்பு! கையில்லாத பனியன் அணிந்த கோலத்தோடு மலரைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்து திண்ணையில் அமர்ந்தார். ஒரு முறை மலரைச் சிறிது நேரம் புரட்டிப் பார்த்துவிட்டு எழுதியதைக் கையில் கொடுத்துப் 'போதுமா தம்பி, பார்' என்றார்.

போதும், போதாது என்று சொல்ல எனக்கு என்ன தகுதி இருக்கிறது. அறுவடை முடித்த உழவன் மகிழ்ச்சியில் "மிக்க நன்றி, அண்ணா" என்று கூறிவிட்டு வந்தேன்.

எவ்வளவு எளியவர்களாக இருந்தாலும் கடமையைக் கண்ணியத்தோடு செய்து முடிக்கும் இந்த எளிமையே அவருடைய ஏற்றத்துக்குக் காரணம் எனலாம்.

நாகரிகம்:

முந்தை இருந்து நட்டோர் கொடுத்தால் நஞ்சும் உண்பர் நாகரிகர் என்று என்று நற்றிணை நாகரிகத்துக்கு இலக்கணம் வகுக்கிறது. நண்பர்களைப் போற்று வதும் அவர் செய்த நன்றியைப் பாராட்டுவதும் அறிஞர் அண்ணாவினிடத்தில் இயல்பாகவே அமைந்திருந்தன. தம்முடைய அரசியல் ஆசிரியராக ஏற்றுக் கொண்டிருந்த பெரியார் அவர்களிடமிருந்து சில கருத்து வேற்றுமைகள் காரண மாகப் பிரிந்து வந்தார் அண்ணா. பிரிந்து வந்த நாளிலிருந்து தம்முடைய வாழ் நாள் வரையிலும், பெரியாருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்தே வந்தார். அதைப்போலவே தம்மிடத்திலிருந்து பிரிந்து சென்ற திரு. ஈ. வி. கே. சம்பத் போன்றவர்களையும் அன்போடும் மரியாதையோடும் நடத்தினார். திரு. சம்பத் அவர்களைத் தம்மோடு இருந்த வரையில் 'அவன்' என்னும் ஒருமை விடுதியிலேயே அன்போடு அழைத்து மேடையிலும் பேசி வந்தார். ஆனால் பிரிந்து சென்று விட்ட பிறகு 'அவர்' என்றே எப்போதும் எங்கும் விளித்துப் பேசினார்.

நட்பாக இருக்கும்போது மரியாதையாய்ப் பேசுவதும் கருத்து வேறுபாடு வந்தவுடன் மரியாதைக் குறைவாகவும் இழிபெயர்கள் வைத்துப் பேசுவதும் இயல்பாக—உரிமையாக—இருக்கிற இன்றைய உலகத்தில் எல்லாரும் எண்ணிப் பார்க்க வேண்டிய பண்பாகும் இது. சிறப்பாக மாணவர்கள் இந்தப் பண்பைத் தலைமேற்கொண்டு பழகினால்—வாழ்ந்தால்—நிறைந்த பலன் ஏற்படும்.

நண்பர்கள், மிகுந்த அன்புடன் தமக்கு அழிவு தரக்கூடியவற்றைச் செய் தாலும் அவரிடத்தில் அன்பு நீங்கார் உயர்ந்தோர். நண்பர்கள் செய்த தவற்றைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலும் நம்பாத— ஏற்றுக் கொள் ளாத உரிமையுடையவர்களாக வாழ வேண்டும் என்று கூறுகிறது தமிழ்மறை.

அழிவந்த செய்யினும் அன்புஅறார்; அன்பின்
வழிவந்த கேண்மை யவர். —திருக்குறள்: 807

ஒருவனுடைய மனமே மொழிக்கும், மொழியே நடைக்கும் காரணம் என்று மொழிவர். அண்ணாவின் மனம் தூய்மையானது அண்ணாவின் மொழி உண்மை யானது. அண்ணாவின் நடை பண்பானது. தூய்மை தொட்டது துலங்கும்; வாய்மை பட்டது வெல்லும்; பண்பு கொண்டது பொலிவுறும் அண்ணாவின் வெற்றிக்குரிய மறைதிறவு இவையே, என்பதை உணர்ந்து அவர் வழிநடப்போமாக.

தம்பி! காரணமற்ற வேகம் வேண்டாம். அன்னையைக் கேள் பக்குவமாகப் பண்டம் வெந்துவிட்டது என்றால், கொதிக்கும் சத்தம் குறைந்துவிடும். அதுபோன்றே கொள்கைப் பிடிப்பும் நல்ல முறையிலே ஏற்பட்டுவிட்டால், வீணான வேகம் எழாது. சிறிதளவு அழுகிய பழத் தைக் கண்டிருக்கிறாயா? மேலே கசியும். சுவையில் புளிப்பேறி விட்டது, பக்குவம் கெட்டுவிட்டது என்பது பொருள். கரும்பு அப்படித் தெரிய வில்லை, பார்த்தனையா தம்பி! அடக்கமாக இருக்கிறது, எவ்வளவோ சுவையைத் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டு.

தொகுப்பு: கன்னி. திராவிட நாடு—பொங்கல் மலர். 1962.

அண்ணா.

அண்ணாவின் அறிவு

தி. மு. தங்கவேலு, இளம் அறிவியல், இறுதியாண்டு.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு என்று போற்றி, இரண்டாயிரத்தாண்டு கொண்டாடும் இந்நாளில், அவர் அருளிய தமிழ்மறைச் செல்வமாம் திருக்குறளின் வழிநின்று குன்றின்மீது இட்ட விளக்குப்போல் திகழ்பவர்களுள் முதன்மையானவர் மறைந்தபேரறிஞர் அண்ணாதுரை அவர்களேயாவர். தம் வாழ்க்கையின் தொடக்கம் முதல் இறுதிவரை குறள்நெறி தவறாமல் வாழ்ந்து காட்டினார். கற்கவேண்டியவற்றைக் கசடறக்கற்று, அதற்குத் தகுந்தாற்போல் தன் வாழ்க்கையை வகுத்துக்கொண்டார்

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்ற குறள்நெறிப்படி அண்ணா எதையும் ஆராய்ந்து அறிந்தே செயல் பட்டார். தந்தைஎன்றும், தலைவரென்றும், குருவென்றும் போற்றிமதிக் கப்பட்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 1947-ஆம் ஆண்டு விடுதலைத் திருநாளைத் ''துக்கநாள்'' என்று கொண்டாட வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டார். அவர் கருத்தொடு மாறுபட்ட அண்ணா அவர்கள், தலைவராலும் அவர் கூறியது தவறுதான் என்று எதிர்ப்புத் தெரிவித்தார். உண்மைப் பொருளை மக்கள் உணர்ந்து கொள்ளச்செய்தார். விடுதலை நாளை விழாவாகக் கொண்டாடும்படி மக்களிடம் எடுத்துரைத்தார். இச் செய்கையினை நோக்கும்பொழுது, அண்ணா அவர்கள் எப்பொருளையும் ஆராய்ந்துசெய்யும் திறம் படைத் தவர் என்பது நன்கு புலப்படும்.

தலைவரோடு கொண்ட கருத்து வேற்றுமையால் அண்ணா அவர்கள் அவரிடமிருந்து பிரிந்து தன் தம்பிகளுடன் சேர்ந்து புதிய தோர் அரசியல் கட்சியை உருவாக்கினார்.

''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

என்னும் இக் குறளின் கருத்து அண்ணா அவர்களின் வாழ்க்கையில் நன்கு பொருந்தி உள்ளது. அவர் தம்முடலையும், உயிரையும் மக்களுக் கெனவே உரிமையாக்கிவிட்டார். அன்பே உருவான அண்ணா தமக்கென ஏதும் தேடாமல் நாட்டு மக்களுக்காகவும், தாய்மொழிக் காகவும் போராடினார். விலைவாசிப் போராட்டம், சட்டஎரிப்பு, இந்தி எதிர்ப்பு முதலிய போராட்டங்களில் கலந்து தம் வாழ்க்கையை மக்களுக்கெனவே அளித்துவிட்டார்.

"என் இதயக் கோயில்"

எம். குமாரசாமி, இரங்கலை, இரண்டாம் ஆண்டு, பொருளாதாரம்.

அன்புத்தெய்வம் அண்ணு அவர்கள் இளமையிலிருந்தே நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவராய் அரசியலில் ஈடுபட்டார். அன்று முதல் அவர் கடைசி மூச்சு உள்ளவரையில் நாட்டின் நலத்துக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும்! தமிழின் மேன்மைக்காகவும் பாடுபட்டார். அவர் பாட்டாளியின் தோழன் என்றும், எல்லோருக்கும் அண்ணன் என்றும் போற்றப்பட்டார். 'அண்ணு' என்ற அந்த எளிய சொல்லுக்கு மந்திர சக்தி, கவர்ச்சி, தனி அழகு எல்லாம் ஏற்பட்டுவிட்டன, 'அண்ணு' உருவத்தில் தமிழர், உயர் குணத்தில் தமிழர், அன்பு என்னும் பண்பில் தமிழர், அடக்கத்தில் தமிழர், ஆண்மையில் தமிழர். அவர் உண்மையை ஒரு நாளும் மறைக்கமாட்டார். உழைப்பாளிகளிடம் அகலா அன்பு கொண்டார். அரசியல் விவகாரங்களின் ஆழத்தை நன்ருகக் கண்டறிந்தவர் அவர். நாட்டு முன்னேற்றமே அண்ணுவின் கொள்கையே தவிர சுயநலமோ, பதவிமோகமோ எள்ளளவும் அவரிடம் இல்லை. மாற்ருரை மதிக்கும் மனம் படைத்த அவர் எப்படித்தான் மக்களைப் பிரிந்து ஓயாத நித்திரை செய்கின்ருரோ?

சாந்தமே உருவெடுத்து ஏழையை வாழவைத்த தெய்வம், பல இன்னல்களை அனுபவித்த மாமேதை நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது என் இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. யாருடைய சிரிப்பிற்காக நாள் எல்லாம் காத்திருந்தோமோ அந்த உத்தமர், பார்புகழும் வித்தகர் நம்மை எல்லாம் அழுதிருக்க விட்டுவிட்டுப் போய்விட்டார் என்று கூறக்கேட்ட நான் உணர்வு இழந்தேன். அண்ணு போய்விட்டாரா! என்னைக் கேட்டிருந்தால் என்னுயிரைத் தந்திருப்பேனே என்னை அழைத்துக் கொண்டு அவரை அனுப்ப மாட்டாயா இறைவா என்று கெஞ்சினேன், கதறினேன். ஏனே என் வார்த்தையைக் கேட்க மனம் இல்லை இறைவனுக்கு.

அண்ணு கூறிய அறிவுரைகள் பற்பல. அவர் எப்பொழுதுமே மக்கள் விரும்புவதையே செய்தார். ஆனுல் தன் கடைசி காலத்தில் மட்டும் யாவரும் விரும்பத் தகாத செயலைச் செய்துவிட்டார். அதனுல் தமிழ்த் தாய்தன் மூத்த குடிமகனை இழந்து ஏங்குகின்ருள். அண்ணு தன்னைக் காத்துக்கொள்வதைவிட நாட்டின் நலத்திலேயே மிகவும் அக்கரை செலுத்தினுர். இதை நாம் அடிக்கடி அவர் கூறிவந்த "எனக்காக நான்

வாழவில்லை, நான் வாழ்வது நாட்டுக்காக'' என்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். ஒளி விளக்கு அணைந்து விட்டது என்று கேட்டதும் இந்தியாவில் மட்டுமின்றி உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து குவிந்த ''கண்ணீர் முத்துக்களில்'' இருந்தே அவர் மனிதருள் மாணிக்கம் என்பது புலப்பட்டது.

ஏசுவின் கொள்கைகளும் புத்தரின் பொன்மொழிகளும் அவர்களோடு போய் விடவில்லை. அவை இன்றும் வாழ்கின்றன. அது போலவே அண்ணாவின் கொள்கைகள், அமுத மொழிகள், என்றும் ஒளி வீசிக்கொண்டே இருக்கும்.

மக்கள் தலைவனே! நீ வாழ்ந்த காலத்தே நான் வாழ்ந்தேன் என்ற ஒன்றே என் பிறப்பின் இலட்சியத்தை முழுமையாக்கி விட்டது. என் இதய தெய்வமே! என் வாழ்நாள் முழுவதும் என் இதயக்கோயிலில் குடியிருப்பாய் என்று வேண்டி, உன் திருவடிகளுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன்.

கிழக்கும் மேற்கும்

ஒரு தவறான கருத்து இருக்கிறது. மேலை நாட்டுத் தத்துவங்கள் எல்லாம் லோகாயதமானவை; கீழை நாட்டுத் தத்துவங்கள் எல்லாம் ஆன்மீகமானவை என்பதே அந்தக் கருத்து.

நம் கீழை நாட்டில் லோகாயதத் தத்துவம் இல்லையா? சிவனைப் பற்றிப் பாடவந்தவர், ''பொன்னார் மேனியனே!'' என்றார். உலோகத்திலேயே மதிப்பு மிகுந்த தங்கத்தைத்தான் கடவுளின் மேனிக்கு அவர் ஒப்பிட்டிருக்கிறார்.

மேலை நாட்டுத் தத்துவங்கள் எல்லாம் லோகாயதமானவை என்றும் கூறிவிட முடியாது.

'பணக்காரனுக்குச் சுவர்க்கத்தில் இடமில்லை' என்று ஏசு கூறவில்லையா?

'எனது ராஜ்யம் பரமண்டலத்திலிருக்கிறது!' என்று அவர் கூறவில்லையா?

இன்னும் சொல்லப்போனால் மேலைநாடுகள் நமது தத்துவங்களை கற்றுக்கொண்ட அளவுக்கு அவர்களுடைய தத்துவங்களை நாம் கற்கவில்லை.

10—11—64 கிறித்தவக் கல்லூரியில் அண்ணா — தொகுப்பு: ஏஎன்ஏ.

சொல்லுங்கள் அண்ணா!

அபீபுர் ரஹ்மான்
புகுமுக வகுப்பு, 'அ' பிரிவு.

"திங்கள் முகமெடுத்துச் செவ்வாய் இதழெடுத்து
வெள்ளை மலர்ச்சிரிப்பில் அண்ணன் வருவான்"

ஆம்; அதோ வந்துவிட்டான்; வானில் மெல்ல தவழ்ந்து வந்துகொண்டிருக்கிறான். அவன்தான் சந்திரன். அதென்ன அவன் முகத்தில் அவ்வளவு பொலிவு? ஓ....அண்ணனின் முகத்தையே பெற்ற ஆணவமோ?...ஓ...திங்களே! அண்ணனின் முகத்தையே பெற்ற உனக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியின் பயனாக நீ தருகின்ற ஒளிதான் எவ்வளவு குளுமை! எங்கே? யாரையோ தேடிச் செல்வதுபோலிருக்கிறதே! ஓ...உன் காதலி அல்லியையா? அவள் இங்கில்லை. அவள், நீ முகமாகப் பெற்ற அண்ணனின் கரமாகிவிட்டாள். நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்.

அடடா!...சந்திரனே! உன்னுடைய ஒளியால்தான் இந்த ஆழ்கடலினுள்ளே முத்துக்கள் எத்தனை பிரகாசமாய்ச் சுடர்விடுகின்றன. ஏ...முத்தே! உனக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி! அண்ணனின் கண்ணைப் பெற்றதோடுமட்டுமின்றி, அவனுடைய கண்ணின் ஒளியாகவும் பெற்றாய். நீங்கள்தான் என்ன தவம் செய்தீர்களோ? ஆ...என்ன, முத்தே எங்கே உன் ஒளி? திடீரென்று மறைந்துவிட்டது?......இதென்ன—சந்திரனும் மறைந்துவிட்டான்!...ஓ...அண்ணன் முகத்தை மூடிக்கொண்டு உறங்க ஆரம்பித்துவிட்டான்போலும். ஆம், நடு இரவு ஆகிவிட்டதே!

"ஓடி வருகிறான் உதயசூரியன்"......

எங்கே? எங்கே?...இசைத்தட்டு முழங்குகிறதுபோலும். அதோ பொழுதும் விடிந்துவிட்டதே. ஆம், சூரியனும் கிழக்கில் தோன்றிவிட்டான். அவன்மட்டுமா தோன்றினான். மக்கள் மனம் என்னும் உலகிலே பரவியிருந்த அறியாமை என்னும் இருளை நீக்கவந்த உதயசூரியனும் அறிஞர் அண்ணாவும் அல்லவோ தோன்றியிருக்கிறார்—விழித்துக்கொண்டார். அந்தச் சூரியனுக்குத்தான் எவ்வளவு பெருமை? தன்னை அண்ணனுக்கு, அல்ல அல்ல, தனக்கு அண்ணனை உவமையாக்குகிறார்கள் என்று!

"அண்ணா"

அறியாமை என்னும் இருள் நீக்கிய நீங்கள் அறிந்தோ அறியாமலோ இருட்டறைக்குள் அடைக்கப்பட்டுவிட்டீர்களே. அறிவுக் கண்ணைத் திறந்துவைத்த நீங்கள், உங்கள் அழகுக் கண்களை மூடிவிட்டீர்களே.

'பணத்தோட்டம்' என்னும் கதையோட்டத்தை உருவாக்கிய நீங்கள், பணத்திற்கு இந்தப் பாழும் உலகம் பணிந்து கிடப்பதைப் பொறுக்கமாட்டாமல் சென்றுவிட்டீர்களோ. 'ஓர் இரவு' எழுதிய நீங்கள், பல இரவு கண் விழித்துப் பணி பல செய்து, இரவோடு இரவாக மீளா உறக்கத்திலே ஆழ்ந்துவிட்டீர்களோ. 'சுவர்க்கவாசல்' என்னும் கருத்தோவியத்தைப் படைத்த நீங்கள் சுவர்க்கவாசலை அடைந்துவிட்டீர்களோ.

'அண்ணா' என்றழைத்தவுடனே 'தம்பி' என்று அன்புக் குரல் கொடுக்கும் உங்களுடைய இனிய சொற்பொழிவை எப்பொழுது கேட்கமுடியும்? 'பகைவனையும் பாராட்டக் கற்றுக்கொள்' என்ற உங்களை எங்களிடமிருந்து பறித்துச்சென்ற அந்தக் காலனை எவ்வாறு பாராட்டமுடியும்? "எதையும் தாங்கும் இதயம் வேண்டும், தம்பீ!" என்று சொன்ன நீங்கள், எங்களிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டீர்களே, இதை எப்படி எங்களால் தாங்க முடியும்? சொல்லுங்கள் அண்ணா! சொல்லுங்கள். "எதையுமே சலிப்பு ஏற்படும் முன் முடித்துவிட வேண்டும்!" என்று சொன்ன நீங்கள், அதற்காகத்தானே, சலிப்புத் தட்டுமுன் சென்றுவிட்டீர்களோ?

ஊருக்குப் படியளந்து, எத்தனையோ படிகளையெல்லாம் கடந்து, புகழின் உச்சிக்கே சென்றுவிட்ட நீங்கள், வாழ்வின் துயரப் படிகளையும் கடந்து, ஆனால் அப்படிகளே வாழ்க்கையின் இறுதிப் படிகளாக, மேலுலகம் செல்லும் படிகளாக எண்ணி, சுவர்க்கப் பதியை அடைந்துவிட்டீர்களோ, சொல்லுங்கள் அண்ணா!

★

தமிழும் தமிழரும்

"தமிழர்கள் பிற நாடுகளுக்குச் செல்வது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த பண்பு. சாவா, மலேசியாவுக்குத் தமிழர்கள் சென்றனர். பண்பாட்டைப் பரப்பச் சென்றனரேயன்றி வெற்றிகொள்வதற்காக அல்ல. தங்கள் மொழியைப் பிறர்மீது திணித்தனர் என்று ஒரு நிகழ்ச்சியைக்கூடக் காண முடியாது. எங்கள் மொழிபற்றி எங்களுக்கு அதிகப் பெருமை உண்டு. இது நியாயமான பெருமை. ஆனால் இதர மொழிகளுக்கு இடையூறான முறையில் ஏற்பட்ட பெருமையன்று.

தங்கள் மொழிக்கும், தங்கள் வாழ்க்கை முறைக்கும் அபாயம் எதுவும் ஏற்படாதவாறு தமிழர்கள் விழிப்பாக உள்ளனர். வாழ்க்கை முறைக்கு உண்மையான அபாயம் ஏற்படும் கட்டம் வருமானால் தமிழர்கள் ஆர்த்தெழுவர். உலகில் எந்தச் சக்தியும் அவர்களைத் தடுத்து நிறுத்தமுடியாது".

10—1—68 உலகத் தமிழ் மாநாட்டு
கருத்தரங்கில் அண்ணா.

தொகுப்பு:
கன்னி.

STAR OF THE SOUTH

G. Purushothaman, Final B. A., Br. IV.

Mr. C. N. Annadurai, the most dynamic leader of South India in recent years, was born on September 15, 1909 at Kancheepuram. He was edudated at Pachaiyappa's College in Madras, where he took his M. A. degree. He established an early reputation for oratory and took keen interest in public affairs.

He was closely associated with Mr. E. V. Ramaswamy Naicker leader of D. K. party and he left D. K. because of certain differences of opinion between them.

So far there had been nothing to indicate that his career would be *much different* from that of his colleagues. He started a new party in South India—Dravida Munnetra Kazhagam, an important movement in the history of Tamil Nadu.

Rhetorical skill and oratorical power are in born and inherent qualities which are possessed by very few. It may be true that some of people by hard work acquire these qualities even though they are not born with the gift of the gap.

Anna is a born genius. He is a silver tongued orator. In Anna's speeches we hear the melodious music mirthtully played by a master musician, the jingling sound emanating from the anklet worn by the swift footed dancer, lusty laugh of a lovable lady and above all, enchanting alliterations and flowery language. His orations are irresistible.

He is not only an orator but also a great writer. He started his life as a teacher and then he worked as a sub-editor in the "Justice" an English Daily and later he started his own Tamil Weekly "Dravida Nadu". His "Nadum Edum" (Nation and book) became very popular among the people of Tamil Nadu. He conquered the hearts of the people of Tamil Nadu by his writings and by orations.

Till his death he expressed three principles apart from his party principles. His principles were simplicity, generacity and humility. Men and leaders of all parties whether politicians or statesmen respected him whole heartedly.

His tour of the United States brought him fame and name in ample measure. His Tirukkural teachings at Yale University was one more proof for knowing the ancient Tamil Culture.

In the true sense of the word he was an honest and upright democrat. It will be clear when we go through the statement which was given by him at a Reporter's Conference in United states.

In the two years of his Chief Ministership, he implemented some popular proposals like selling rice at one rupee a measure and he abolished Hindi by evolving the two language formula:

Shakespeare has said in his play Twelth Night

"Some are born great, some achieve greatness
And some have greatness thrust upon 'em"

Anna belongs to the second category.

Mr. Annadurai was a man of the masses. He was "Anna" to his followers, who called him "Tamil Nadu Gandhi")

At the age of 60 Thiru. C. N. Annadurai passed away due to heart attack. Anna is a man of sincerity, ability and simplicity. He was a great *patriot and statesman.* As a political leader he displayed self confidence and a sense of realism.

President Zakir Hussain says of him "......His demise is an irreparable loss not only to Tamil Nad but also to the whole of India". V. V. Giri in his grief remarks ".......He had the pulse of the people and always concerned with improvement and well being of the common" Prime Minister Indra Gandhi "It is tragic that death has taken him from us we had so much to give to the people".

The cruel hands of death had snached away a great leader at the hight of fame and popularity. A dynamic leader of the South had passed away in the lurch Annadurai's way of life and his service as a Chief Minister for twenty three months are the new land marks in the advancement of the country. A nation mourns the death of a man of wisdom whose high sense of duty earned him wide spread respect. THE STAR OF THE SOUTH had fallen.

Let us not forget his message: DUTY, DIGNITY, DISCIPLINE.

மாணவர்கள்

நம் நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான், நம் நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவரிடம் நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாறாக அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு எதுவும் இல்லை- அவர் முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களிலே பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதைக் காண நேரிடுவதாலும், அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது. நேர்வழி அடைபடுகிறது; கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன — என்று கருதுகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழக முதல் பட்டமளிப்பு விழாவில் (7-9-67) அண்ணா.

தொகுப்பு: செவ்வேள்.

அண்ணா

C. A. விமலானந்தன், M.A.,

இராமகிருஷ்ணரைப்பற்றிச் சிலர் இவ்வாறு கூறுவதுண்டு. வேதத்தைப் போன்று இராமகிருஷ்ணர் என்றும் உபநிஷத்துக்களைப்போன்று சாரதாமணி தேவியார் என்றும், உபநிஷத்துக்களில் வரும் ஐயங்களைப்போக்கும் பிரம்ம சூத்திரம் போன்றவர் விவேகானந்தர் என்றும் கூறுவர்.

இவ்வுண்மையை வேறு ஒன்றிலும் பொருத்திக் காணலாம். நீதிக்கட்சியின் வேதமாக பனகல் அரசர் இருந்தார் என்றால், பெரியார் உபநிஷத்துக்களைப் போன்று திகழ்கின்றார் எனலாம். பெரியார் கூறும் கருத்துக்கள் சில சமயம் திகைப்பூட்டுவனவாகவும் அதிர்ச்சியைத் தருவதாகவும் இருக்கும். அப்போது அண்ணா அவர்கள், அவர்கள் கருத்துக்களுக்கு விளக்கம் தரும் பிரம்ம சூத்திரம் போன்று, விவேகானந்தர் போன்று திகழ்ந்தார் எனலாம்.

அரசியல்வாதியாக வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த அண்ணா, தாம் ஒரு கட்சியை உருவாக்கியபோது அரசியல் அறிஞராகத் திகழ்ந்தார். சிறந்த அரசியல் அறிஞரான (Politician) அவர் ஆட்சி ஏற்றதும் மிகச் சிறந்த அரசியல் தந்திரியாக (Statesman) விளங்கினார்.

அண்ணாவின் நினைவில் யாண்டும் தமிழ்மக்களின் தற்போதைய நிலைமையும் சமுதாயத்தில் வறுமையுற்றிருக்கும் தமிழ்மக்களின் நிலைமையுமே நிறைந்திருந்தன. பழந்தமிழரின் பெருமையும் இன்றையத் தமிழரின் சிறுமையும் எண்ணி எண்ணி மறுகினார் அண்ணா. தமிழ் மக்களின் இன்றைய நிலைமைக்கு யாது காரணம் என்பதை அவரது உள்ளம் துருவித்துருவி ஆராய்ந்தது. இன்றையத் தமிழன், தானே அமைத்துக் கொண்ட 'சில தளைகள்' அவனது முன்னேற்றத்திற்கு பெரும் தடைகளாக அமைவதை உணர்ந்தார். சாதி—சமயம் ஆகிய இரண்டும் பெரிய தளைகளாக இருப்பதைத் தெளிவாக அறிந்தார்.

நாம் உள்ள இவ்வுலகு, இதனைக் கடந்து விண் வெளியில் இயங்கும் கோள்கள் பேரண்டம் (Universe) ஆகியவை அனைத்தும் தோற்றுவிப்பதற்கு, ஒரு 'முதல்' வேண்டும். அம் 'முதல்' என்றும் இவ்வனைத்தையும் இயக்கிவரும். அதனைப் பற்றி ஆராய்ந்து உள்ளுணர்வினால் உணர வகை செய்யும் சில நுண்ணிய கோட்பாடுகளும், நூல்களும் மதத்தின் கருவிகளாகும். முதிர்ந்த அறிவு வளர்ச்சி பெற்றோருக்கு அது இயலும். பழந்தமிழர் பலர் அந்தச் சிறந்த தெளிந்த அறிவினைப் பெற்றிருந்தனர். அதனை அவர் பாடிய சில பழம் பாடல்களினால் நாம் உணரலாம். ஆயினும் எவ்வாறோ சில தேவையற்ற சடங்குகளும், வழக்கங்களும் தமிழ்ச் சமுதாயத்தில் புகுத்தப்பட்டன. உள்ளுணர்வினால் அறியக்கூடிய ஒன்றை, தமது சிறந்த ஆராய்ச்சி அறிவினால் உணர வேண்டிய ஒன்றை, சில சடங்குகளையும், வழக்கங்களையும், கடைப்பிடித்து ஒழுகுவதனால் அறியலாம் என்ற பிழையான கருத்து தமிழர்கள் நெஞ்சில் புகுந்தது. தும்பைவிட்டு வாலைப்பிடிப்பது போன்ற நிலையை

தமிழ்ச் சமுதாயம் கடைப்பிடித்து ஒழுக ஆரம்பித்தது. சமய அறிவினுல் ஒருவன் பெற வேண்டியது மன நிறைவே. (Tranquillity of the mind). அம் மன நிறைவை உள்ளுணர்வினுல், அடைய வேண்டிய தமிழன் சடங்குகளினுலும் பிறவற்ருலும் அடைய முற்பட்டான். இவ்வாறு பெறும் மன நிறைவு நிலையானது அன்று. அப் போதைக்கு மன நிறைவு அளிப்பதுபோல் காணப்படினும் நிலையான மன நிறைவு அளிப்பதாக இல்லை. சிறிது காலம் கழிந்ததும் மீண்டும் மன அமைதியின்மை தோன்றும். இது, இயல்பாக இன்துயிலில் ஆழ்ந்து பெறும் சுகத்தை, மாத்திரைச் சாப்பிட்டு வலிந்து பெறுவதைப்போன்றது. இதற்காகத் தமிழன் செலவிடும் காலமும் பொருளும் மிகவும் அதிகமென்றே கூறலாம். மன நிறைவுக் காண அமைந்த சில வழிமுறைகளே மன நிறைவுத் தருவனவாக தவருகக் கருதப் பட்டன. அறிவு விளக்கத்தைத் தருவதற்காக அமைந்த மதம், போதைப் பொருளைப்போன்ற சடங்குகளையும் வழக்குகளையும் கொண்டதாக அமைந்தது. மன நிறைவை நாடும் தமிழன் திரும்பத் திரும்ப இச்சடங்குகளினுல் தன் 'மன நிறைவை' பெற முயன்று காலத்தையும் பொருளையும் வீணுக செலவழிப்பதைக் கண்டு மனம் வருந்திய அறிஞர் பலர். அவருள் அண்ணு தலை சிறந்தவர்.

இதனைப்போலவே, தமிழினத்தில் முன்பு யார் வேண்டுமாயினும் எந்தத் தொழிலையும் விரும்பிச் செய்யலாம் என்றிருந்தது. நாளடைவில் இந்நிலை மாறி ஒரு சாதிக்கு ஒரு தொழில் என வந்தது. தற்போது சாதி என்ற பாகுபாடுமட்டும் உள்ளதேயன்றி செய்தொழில் வேறுபடக் காண்கிருேம். வணிகர் மரபில் தோன் றிய ஒருவர் ஆசிரியராக இருந்தால் தொழில் முறையில் அவர் அந்தணராகத் தானே கருதப்படவேண்டும்? தொழில் வேற்றுமையினுல் இன்ஞர் இன்ன தொழில் செய்கின்றவர் என்பதைத் தெரிவிக்கும்பொருட்டுத் தோன்றிய சாதி வேறுபாடு கள் தற்காலத்தில் இல்லை. ஆயினும் இன்றும் தங்கள் தொழிலைப்பற்றித் தமது பெயருக்குப் பின் எழுதுகிருர்கள். ஆனுல் சாதி வேறு என்று கூறிக்கொள்கிருர்கள். இந்த வகையெல்லாம் சமுதாய அமைப்பில் உள்ளமை தமிழனின் முன்னேற்றத் திற்கு பெருந்தடைகளாக உருவாகியதை அறிஞர் கண்டார்,

அவரது ஒரு சில நூல்களை பயின்ருலும், ஒருவர், யாண்டும் அண்ணு, எல் லாம் கடந்த கடவுள் ஒருவர் இல்லையென்று கூறக் காணமாட்டார். அதுபோலவே தொழில்களிலும் உயர்வு தாழ்வு கூறக் காணமாட்டார். இவற்றையெல்லாம் நோக்கும்போது அண்ணுவின் நினைவில் பழந்தமிழரின் நிலை தோன்றியிருக்கவேண் டும். அந்நிலையை அவன் அடையவேண்டுமானுல் என்ன செய்யவேண்டும் என் பதனைப் பல்லாண்டுகளாக ஓர்ந்து இருக்கவேண்டும். முடிவில் தமிழனின் முன் னேற்றத்திற்கு இருபெரும் தடைகளான போலிச் சமய வழக்குகளும், சாதிகளும், களைந்தெறியப்படல்வேண்டும் என்பதனை உணர்ந்த அவர், பழமையில் ஊறி, பழக்கங்களில் படிந்து, கவலை மாடுகளைப் போன்று பழைமையில் உழலும் முதிய வர்களை விடுத்து, வளரும் செல்வங்களான இளந்தலைமுறையினருக்குத் தமது கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினர். 'நடந்தன நடந்தவையே, இனி நடப் பன நல்லனவாக அமையட்டும்' என்ற மனப்பான்மையே இதற்குக் காரணம்.

இவ்வாறு சீர்குலைந்த தமிழ்ச் சமுதாயத்தினை, வளமுறச் செய்த அவர் முயற்சிகள் ஓரளவுக்கு வெற்றியைத் தந்துள்ளன. ஆக, அண்ணு அரசியல்வாதி

யாக (Politician] இருந்துவந்தபோது பரப்பிவந்த கருத்துக்களை, அரசியல்மேதை யாக (Statesman) மாறியபோது செயல்படுத்தத் தொடங்கினர்.

இன்று அவர் இல்லை. ஆனால் அவர் வித்திட்ட கருத்துக்கள் சமுதாயத்தில் இளம் குருத்துக்களாக (seedlings) உள்ளன. ஆலம் விதையின் அளவு சிறியதாயி னும், மரமாகும்போது, அரசரே படையுடன் வந்து தங்குமளவிற்கு நிழல்தரும் அளவிற்கு மரமாகும். அதுபோன்று அவர் வித்திட்ட கருத்துக்கள் வளர்ந்து பெரியனவாகி, தமிழ்ச் சமுதாயத்தில் பெரிய ஆலமரங்களாகி, உலகின் பல பகுதி களில் இருந்தும் வரும் மனிதர்கள் அறிவுச் செல்வத்தையும், வாழும் முறையையும் அறிந்து செல்வதற்காக வந்து தங்கும் நிழல் மரங்களாகும் என்பது திண்ணம்.

★

வினையும் விளைவும்

மகிழ்ச்சியே மயக்கம்; மன்னுயிரைத்தான் மாய்க்கும்! என்று கூறினோர் அல்லர் நம் தமிழர்; எனினும் மகிழ்ச்சியே வினை; வேறு செயல் வேண்டாம் என்றிருத்தல் நன்றன்று; வினை வித்து; மகிழ்ச்சி விளைவு; அந்த விளைவு அவ்வளவும் தின்று தீர்த்துவிட்டால், பின் வினைக்கு வித்து ஏது? எனவே, விளைவு அளிக்கும் சுவையினை உண்டு மகிழ்ந்திருப்பதுடன் இருந்திடாது 'வித்து' எடுத்து வைத்து, மீண்டும் வினை மேற்கொளல் வேண்டும்; அங்ஙனம், முறை வகுத்துக்கொண்டால்தான், வாழ்வில் வளம் காண வகை கிடைக்கும், தொடர்ந்து.

ஒரு விளைவு, மறு வினைக்குத் துவக்கம்; மகிழ்ச்சி, வினையின் இறுதி முடிவு அல்ல; வினைப்பயன்; புதிய வினைக்கு அழைப்பு.

திராவிட நாடு-பொங்கல் மலரில் (1961) அண்ணா

தொகுப்பு: உ. சி. ந.

அண்ணாவின் அழகான உவமைகள்

தொகுத்தவர்: மு. இராமதாசன், இளங்கலை இறுதியாண்டு.

தமிழ் இலக்கியத்தைப் பற்றித் தத்துவஞானி அண்ணா!

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பிவைத்துக் கொண்டு, 'உள்ளே ஆடுதுகாளி வேடிக்கைப்பார்க்க வாடி' என்பது போலத் 'தொல் காப்பியத்தைப்பாரீர், அதன் தொன்மையைக் காணீர்' என்றால் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை வீட்டை விட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாடவிட வேண்டும். நடனச் சுந்தரிகளாகச் சிறு சிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான் தொல்காப்பியம் சிறு சிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மனதிலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சி அளிக்கும்.

விவசாயத்தைப்பற்றி வித்தகர் அண்ணா!

தானே பயிரிட்டு வரும் சொந்த நிலம், தாய்ப்பால் குடித்துவரும் குழந்தையைப் போல! நமது நிலத்தைக் கூலிக்கோ வாரத்திற்கோ விட்டுப் பயிர் செய்வது தாதியிடம் பால் கொடுக்கச்செய்தோ, அல்லது தகரடப்பாவில் வரும் தயாரிப்புப் பாலைக் கொடுத்தோ வளர்க்கப்படும் குழந்தையைப்போலத்தான். வளராது என்று அர்த்தமில்லை; வளரும், ஆனால் அந்தப் பாலிலே வாஞ்சை கலந்திருக்க முடியாது. அது போலவேதான் கூலிக்கோ வாரத்திற்கோ பயிரிடும் நிலத்திற்கு எவ்வளவு வளம் ஏற்பட்டபோதிலும், உடைமைக்காரனின் சொந்த உழைப்பும் பராமரிப்பும் கண்காணிப்பும் இல்லாமற்போனால், அந்த நிலம் இருபோகம் தரினும் சரியான வளம் பெற்றது என்று கூற முடியாது.

சமுதாயத்தைப்பற்றிச் சீர்திருத்தவாதி அண்ணா!

ஆசையைத் தட்டி எழுப்பிவிட்டு, வீணையை மீட்டத்தொடங்கியதும் இசை கேட்க வருபவனின் காதுகளை அடைப்பதுபோல, எழில்மிகு சித்திரத்தைத் தயாரித்து, காண வாரீர் என அனைவரையும் அழைத்து, காண வரும் சிலரின் கண்களைக் கட்டிவிடுவதைப்போல, பழச்சாற்றின் இனிமையைக் கூறிக்கொண்டு பருகக்கொஞ்சம் தருக என்று கேட்பவனை விரட்டுவதுபோல, ஆலயங்களுக்கு மகிமையும் மேன்மையும் பலனளிக்கும் சக்தியும் இருப்பதைக் கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது—நுழையக்கூடாது என்று சிலரை அல்ல, ஏறக்குறைய எட்டு கோடி மக்களைத் தடுத்து வந்தார்கள்.

மேடைப் பேச்சுபற்றி மேதை அண்ணா!

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், தொலைவிண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர், தொலைவில் உள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகளைக் கண்டு பிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்போல் மனிதரே. அவர்களால் முடிந்தது நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று. அவைகள் சாத்தியமானபோது, மேடைப்பேச்சா சாத்தியமாகாது? பேசாமல் இருப்பது வேண்டுமானால் சிரமம். சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது. பேசுவது எளிது. பேசுவதை ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப் படுத்துவதுதான் மேடைப்பேச்சு.

மாற்றான் வீட்டுத்தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம்! அதுபோலவே பேசுவோரின் கருத்து பயன் தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையாகி இருப்பினும் அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விழும்படி செய்வது மிக மிக முக்கியம். பூத்த மலரை அழகுறத் தொடுத்தல் போல, கிடைத்த கருத்தைத் தொகுத்தும் வகுத்தும் பிரித்தும் வெல்லும் சொல் தெளிவான நடை, நம்பிக்கை ஊட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைதல் வேண்டும்.

அண்ணல் காந்தியைப்பற்றி அறிஞர் அண்ணா

தோட்டத்தை மண்மேடாக்கியவனிடமிருந்து மீட்டு அதைப் புன்னகைப் பூந்தோட்டமாக்குவதற்காக, அழகிய மலர்ச் செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்கு சென்றபோது புதருக்குள்ளிருந்து பாம்பொன்று வந்து கடித்துக் கொல்வது போல், நாட்டை மீட்டு, நல்லாட்சி அமைத்து மக்களை நல்லவர்களாக்குவதற்காக கருத்தைப் பரப்பும்போது கோட்சே கிளம்பினான்.

ஏழைப் பங்காளர் எமிலிஜோலாவைப்பற்றி எளியவர் அண்ணா

மான் குற்றம் செய்யாமலா புலியார் தண்டித்தார்? ஏன் மான் அழகான கண்களைக் காட்டிற்று! புள்ளி மான் துள்ளி விளையாடுவதா? கள்ளம் கபடமற்று ஓடுவதா? சருகு உதிரும் சத்தம் கேட்டாலும் மருண்டு ஓடுவது ஒரு குற்றமல்லவா? சாதுவாக இருப்பது மற்றோர் குற்றம். பதுங்கிப் பாய்வது, பல்லால் கடிப்பது, இரத்தம் குடிப்பது, உறுமுவது போன்ற ஒரு நற்பண்பும் இல்லை! இவைகளைப் பெறாதிருத்தல் குற்றமல்லவா? புலியார் எத்தனைக் குற்றங்களைத்தான் பொறுப் பார்? ஆகவேதான் குற்றம் செய்த மானைத் தண்டித்தார்! டிரைபஸ் செய்த குற்றம் இவ்விதமானதே! இதனை இறுமாப்பாளருக்கு இடித்துக் கூற ஒருவர்தான் முன்வந்தார்; தன் தலை போகுமே என்ற பயமின்றி முன்வந்தார். அவர்தான் ஏழைப் பங்காளர் எமிலி ஜோலி.

சுயமரியாதை இயக்கச் சிங்கம், அஞ்சாநெஞ்சன்பற்றி அண்ணா!

சிங்கத்தைக் கண்டு சிறு நரி மறைந்தொழியலாம்; ஆனால் சிங்கத்தைச் சிங்கமே கண்டு அஞ்சுவதென்றால் அச்சுறுத்தும் அச்சிங்கத்தின் ஆற்றல் பெரிதென்று

கூறவேண்டும். அத்தகைய நெஞ்சுரமும் உடல் வன்மையும் கொள்கையில் பற்றும் கொண்டு வாழ்ந்தவர் அழகிரிசாமி அவர்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப்பற்றி அண்ணு

நல்ல மாடி வீட்டிலே அழகான பூந்தொட்டிகளை அலங்கார வரிசையாக வைத்துக் காட்டுகிருர், வ. ரா. அழகிய உயர்தரமான கோட்! அதிலே பூச் செண்டு செருகிவிடுகிருர் காண்டேகர். பாரதிதாசன் பூங்காவையே அமைத்துத் தருகிருர். காகிதப் பூஞ்சோலை, தழை மாலை, இவைகளையே தயாரிப்பவர்களும் உண்டல்லவா! அவர்கள்போலல்ல வ. ரா. வும் காண்டேகரும். ஆனுல் அவர்கள் செய்யாததை புரட்சிக் கவிஞர் செய்தார்.

அண்ணுவின் அடுக்குத் தொடரும் அழகிய உவமையும்!

உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானுல், வயலிலே வளம் காண முடியாது.

மலரிடம் மங்கையர்க்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரமை போல, குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகிறது.

அடக்கிவைத்திருந்த கோபம் கரையைப் பிளந்துகொண்டுவரும் வெள்ளம் போலாகும்,

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

பயனில்லாத வாழ்க்கை பரிமளமில்லாத மலரைப்போலிருக்கும்.

விழலுக்கு நீர் இறைப்பானேன்; விலா நோகுதே என்று விம்முவானேன்; அலி என்று அணைப்பானேன்; ஐயோ, சனியனே என்று ஆயாசப்படுவானேன்.

கிளி கொஞ்சிடும் சோலையிலே, நடுநிசி வேளையிலே, ஆந்தை அலறுகிற தல்லவா? அதுவும் பாபம் தனது ஆலாபனத்தைக்கேட்டு உலகு உவகையுடன் இருப்பதாகவே எண்ணிக்கொள்கிறது! தன் குறும்பையும் கோணற் சேட்டைகளையும் கண்டு, உலகு மகிழ்கிறது என்கின்ற மனப்பான்மை மந்திக்கே இருக்கும் போது, மக்களிலே சிலருக்கு இருப்பதிலே என்ன ஆச்சரியம்! மலர்ச்செடி அருகே புழு நெளிவதில்லையா! அது போலவே; உலகு அறிவொளி கண்டு, புதுப் பாதையைத் தேடிக்கொண்டு செல்லும் நிலை கண்டும் சில பந்தங்கள் தமது போக்கிலேயே பிரேமை கொண்டுள்ளன!

பாடமொழி

இப்போது என்னிடத்திலோ அல்லது நான் சார்ந்திருக்கிற அரசினிடத்திலோ ஆங்கிலத்தில் புலமை வேண்டுமா என்று கேட்டால் ஆம் என்று சொல்வோம். அந்தப் புலமை வரத்தக்க அளவிற்கு வழி வகை செய்யப் போகிறீர்களா என்ருல் செய்யப்போகிருேம் என்று சொல்வோம். அந்தப் புலமையைப் பெறுவதற்காக ஆங்கிலம் பாட மொழியாக இருக்க வேண்டுமா என்ருல் இருக்க வேண்டியதில்லை என்று சொல் கிருேம். ஏனெனில் பாடமொழியாக இல்லாமலேயே ஆங்கிலப் புலமை பெறமுடியும்.........

ஒரு மொழியில் புலமை வருவது அந்த மொழியின் மூலம் எல்லாப் பாடங்களையும் கற்பதால்தான் வரும் என்று எண்ணுவது பழைய நாளில் இருந்து வந்த ஒரு கருத்தாகும்.

28—11—67 சட்டமன்றத்தில் அண்ணு. தொகுப்பு: செவ்வேள்.

வள்ளுவர் வழித்தோன்றல்

முத்து. துரை, இளமறிவியல், முதலாண்டு, (கணிதம்.)

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனைச், சொல்லும்போது சோர்வு இல்லாதவனை, அஞ்சாதவனை உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது. இது வள்ளுவரின் கருத்து.

இக்குறளின் கருத்து எந்த அளவுக்கு உண்மை என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கும்போது நன்கு விளங்கும். வள்ளுவர் காட்டிய பாதையில் தவறாமல் சென்று அவரின் குறள் நெறிப்படி நடந்து வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொண்டவர் தமிழகத்திலேயே பேரறிஞர் அண்ணா ஒருவர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போலத் தம்மை இகழ் வாரையும் பொறுப்பதே தலையாய பண்பாகும் என்று உலகம் போற்றும் வள்ளுவர் கூறியுள்ளதைப்போல, பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னை இகழ் வாரையும் பொறுத்துக்கொண்டார். அவரைத் தூற்றியவர்கள் பிற்காலத்தில் நண்பர்களானார்கள். அவரைப் பகைத்துக்கொண்டவர்கள் பலர் பிறகு, அவரைப் புகழ்ந்தார்கள். இகழ்வாரைப் பொறுத்தல் தன்மை அவரிடம் குடி கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல தனது, இலட்சோபலட்சம் தம்பிகளுக்கும் பொறுத்தல் தன்மையின் இன்றியமையாமையைப்பற்றிக் கூறி

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு"

என்ற திருக்குறளை எடுத்துக் கூறி ஏற்றம்பெறச் செய்தார்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

என்ற குறளின் கருத்துக்கு ஏற்ப தன் இன்பத்தை விரும்பாமல், தன்னைச் சேர்ந்த மக்களுக்காக உழைத்தவர், அண்ணா அவர்கள். கொடிய நோய் என்று கருதப்படும் புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அமெரிக்கா சென்று சிகிச்சைமூலம் குணம் பெற்றுத் தமிழகம் திரும்பிய அண்ணா அவர்கள் ஓய் வெடுக்கவேண்டிய சமயத்தில் ஓய்வின்றி உழைத்தார். மருத்துவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவருக்கென ஒதுக்கிய வசதியுள்ள தனி மாளிகையைப் புறக்கணித்துவிட்டு, ஓயாமல் உழைத்து, தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்குகின்ற தூணாக விளங்கி பல கோடிமக்களின் கண்ணீர் வெள்ளத்திற்கிடையே 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் நாள் நம்மைவிட்டு மறைந்தார். எல்லோரும் நல்வாழ்வு பெற வேண்டும் என்று வாழ்ந்த அண்ணா அவர்களின் வழிநடந்து அவர் சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை வாழ்வில் கடைப் பிடிப்போமாக.

அண்ணாவுக்கு ஒரு மடல்

ஞா. சண்முக சுந்தரம், புகுமுக வகுப்பு, மூன்றாம் பிரிவு

எங்களை அனாதைகளாய்—ஆதரவற்றவர்களாய்த்—தவிக்கவிட்டுச் சென்று விட்ட அண்ணா அவர்களே!

நீங்கள் எங்களைப் பிரிந்ததாகவோ, இந்தப் பூவுலகை விட்டுச் சென்றதாகவோ எங்களால் நினைக்கவே முடியவில்லை. சென்னையிலுள்ள அவின்யூ தெருவிலே அயராது பணியாற்றிய நீங்கள் அலைகடலின் கரையோரத்தில் ஓய்வெடுப்பதாகவே தோன்றுகிறது. காற்றில், ககனத்தில், நீரில், நெருப்பில், நிலத்தில் வளரும் பயிரில், பச்சையில் எங்கும் நீங்கள் நீக்கமற நிறைந்துள்ளீர்கள் என்றே என் நெஞ்சம் நம்புகிறது.

இக் கடிதத்தை நீங்கள் உறங்கும் இடத்திலிருந்தே நான் வடிக்கும் கண்ணீரைக் கொண்டு எழுதுகிறேன். அதோ நீங்கள் துயில் கொண்ட இடத்தில் அழகான மேடைஒன்று அமைத்துள்ளார்கள். 'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது' என்னும் நெஞ்சுலுக்கும் எழுத்துக்கள் அதிலே பளிச்சிடுகின்றன. அங்கே 'அண்ணா, அண்ணா' என்று அழுதவண்ணம் மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியவண்ணம் இருக்கிறார்கள்.

'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்று யாரைப் பார்த்து மனம் பூரித்தீர்களோ அந்த இளைஞர் பட்டாளம்—

'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று எந்த மாற்றுக் கட்சிகளின் நல்லிதயத்தோரைப் பாராட்டினீர்களோ, அந்த நேசக்கரம் நீட்டி வரும் நண்பர்கள்—

கல்வியால் ஔவைக்கும், கற்பினால் கண்ணகிக்கும் சிலையமைத்து எந்தப் பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தீர்களோ, சாரை சாரையாகவரும் அந்தப் பெண் குலத்தினர்—

பள்ளிச்சிறார், பணிபுரியும் ஊழியர்—இல்லாதார், இல்லையென்று சொல்லாதார்—இந்நாட்டார், உங்களால் இந்நாட்டை உணர்ந்த பிற நாட்டார்—அனைவருமே அழுது புலம்பும் ஒலி காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்ந்த அந்நாளில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே! முகமதுநபியும் அம்முறையே! காந்தியும் அவ்வழியே! ஆனால் வாழ்நாளிலே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை உயர்த்தியவர் யார் அண்ணா! அந்தப்பெயரை நினைக்கும் போது மீளாத் துக்கத்தில் துடிதுடிக்கின்றேன்.

உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகமே கலங்கி உருகுகின்றது. ஒவ்வொருவருடைய முகமும் சுருங்கிவிட்டதே! அண்ணா, இமயமலையே புரண்டிருந்தாலும் இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. அப்படிப்பட்ட நிகழ்ச்சி தமிழ் நாட்டின் தலைநகரில் நடந்துவிட்டதே!

உங்கள் கொள்கைக்கு யாதொரு இடையூறும் ஏற்படாவண்ணம் கண்ணும், கருத்துமாகக் காப்பாற்ற நீங்கள் யார்மீது அதிகப் பற்றை வைத்திருந்தீர்களோ அந்த மாணவர்களாகிய நாங்கள் சூளுரை எடுத்துக்கொண்டோம்.

"மாணவர்களே எதிர்கால நாட்டை அமைக்கப்போகின்றவர்கள்;" "எதிர்காலமே உங்கள் கையில்தான் இருக்கிறது" என்று எங்களுக்குச் சொன்னதும், "நீங்கள் மாணவர்கள் என்று இந்தக் கல்லூரிகளுக்கு வந்திருப்பது, வெறும் புத்தகப்பூச்சிகளாய் இருந்து விட்டுப்போவதற்காக அல்ல; பயனற்ற பட்டங்களைப் பெற்றுவிட்டு அடிமைகளாய் அல்லற்படுவதற்கு அல்ல; கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக்;கடைப்பிடித்துவாழ்வதற்காவே என மேடையில் முழங்கினாயே! அதை எண்ணும்போது மாணவ சமுதாயமே தலைகுனிந்து மண்டியிட்டு வணங்குகிறது.

தாங்கள் கண்மறைவாக இருந்து நாட்டின் மக்களுக்கும், மாணவ சமுதாயத்திற்கும், துணையாக, அறிவு விளக்காக, நல்ல பாதையில் நடக்க வழி காட்டுவீர்களாக!

பழந்தமிழர் பாடிய பண்

இந்நாடு, பல்லாயிரம் ஆண்டுகளாகவே, இயற்கையின் பேருதவியை பெரிய அளவிற் பெற்றுத் திகழ்ந்து வந்திருக்கிறது. அந்த வளத்தைப் பழம்பெரும் புலவர்களின் பாக்களில் காண்கிறோம். அவர்களின் காலத்திலே, வியப்பளிக்கும் கருவிகள் இல்லை; உண்மை. ஆயினும் வளம் கொஞ்சிக்கிடந்தது. துள்ளும் வாளையைக்கண்டனர்; புள்ளிமான் கோலம் கண்டனர்; பிள்ளைமொழி கேட்டு இன்புற்றனர்; சந்தன மணம் பெற்று மகிழ்ந்தனர்; கடலிடை முத்தும், கைத்திறனுள்ளோர் செய்தளிக்கும் அணி பணியும் கண்டனர், பழமுதிர் சோலைகள், பாங்கு நிறை வயல்கள், செங்கரும்புக் கழனிகள் என்ற இன்னோரன்ன இயற்கை வளங் கண்டு பாடினரேயின்றி, வெடித்துக்கிடக்கும் வயல்கள், கொதித்துக் குழம்பிடும் கும்பிகள், நெருப்பைக்கக்கிடும் எரிமலைகள், அழிவினை ஏவிடும் நில நடுக்கங்கள், என்னும் கொடுமைகளைக் கண்டார்களில்லை. பன்னெடுங்காலமாகவே, இன்னொருவர் தயவு எதற்கு, இந்நாட்டில் வாழ்வதற்கு, என்று பண்பாடியே வாழ்ந்தனர் தமிழர்.

தொகுப்பு: குமரன்.

— அண்ணா.

மன்னனிங்கு வாரானோ?

க. ராசகுமார், இளமறிவியல் முதலாண்டு.

அண்ணா என்ற கீதம் ஓய்ந்துவிட்டது; தமிழர்க்காய், தமிழுக்காய் நாளும் உழைத்த நல்லவன் மறைந்துவிட்டார்; தட்டினால், தங்கமும், வெட்டினால் வெள்ளியும், மூழ்கினால் முத்தும் கிடைக்கும் நாடென்று தமிழ்நாட்டைப் போற்றிய அண்ணா மறைந்துவிட்டார்; 'அப்பப்பா, ஏனப்பா? ஆழி நீர் உவர்க்கின்றது?' என்று கேட்டால் அலைகடல் தாண்டி அயலகம் சென்று அல்லல்பட்டேங்கிநிற்கும் அருந்தமிழர் விட்ட நீரால் உண்ணநீர் உப்புநீராய் மாறியது என்றுரைத்த அண்ணா மறைந்து விட்டார்; தென்பாண்டிப் பொதிபிறந்து வைகையில் நடை பயின்று காவிரியில் கன்னியான தமிழ் நல்லாளை—தமிழரசிற்கு மணமுடித்த பாலாற்றின் கரைபிறந்த தலைவன் மறைந்துவிட்டார்; தமிழுக்கு, தமிழர்க்கு, தமிழ்நாட்டிற்கு தொண்டாற்றிவந்த தலைவன் மறைந்துவிட்டார். வேதனையால் வெந்திருக்கும் நெஞ்சங்கள் துயர் தீர்க்க

"மன்னனிங்கு வாரானோ?'
மனத்துயரை நீக்கானோ?"

விண்வெளிக் கப்பலில் செல்லும் விண்வெளி விமானிகளின் நாடித்துடிப்பு இரத்த அழுத்தம் முதலியன பற்றிய விவரங்கள் அவ்விண்வெளிக் கலத்திலிருந்து பூமிக்கு எப்படி அனுப்பப்படுகின்றன?

விண்வெளி விமானிகளின் நாடித்துடிப்பு இரத்த அழுத்தம் முதலியவையும் விண்வெளிக் கப்பலின் இயக்கம் பற்றிய விவரங்களும் தொலைக் கணிப்புமுறை மூலம் பூமிக்கு அறிவிக்கப்படுகின்றன. அளக்கவேண்டியவற்றை ஓரிடத்தில் வைத்து அளந்து அத்தகவல்களை இன்னொரிடத்திற்கு அனுப்பி அங்கு அவை மதிப்பிடப்படுவதும் பயனாவதும் தொலைக் கணிப்புமுறை என்பதாகும்.

உணர்வு இழைக் கருவிகள் அளக்கவேண்டியவற்றை அளவிடுகின்றன; அதன்பின் அத்தகவல்கள் மின்விசை அறிகுறிகளாக மாற்றப்படுகின்றன. இந்த அறிகுறிகள் 'ரேடியோ' மூலம் பூமிக்கு அறிவிக்கப்படுகின்றன. கிடைக்குமிடத்தில் அவை திரும்ப அவற்றின் அடிப்படையானத் தகவல்களாக மாற்றிக் கொள்ளப்படுகின்றன.

அமெரிக்கன் ரிப்போர்ட்டர் — தொகுப்பு : செவ்வேள்.

தமிழா!... உன் நிலை...?

கூ. வ. எழில்அரசு, புகுமுக வகுப்பு, 'அ' பிரிவு.

எழுது கோலொன்று எடுக்க கையற்றுக் கிடக்கிறது!
எழில் 'தமிழ்மேடை'யொன்று 'முழக்க'மற்று முடங்கிக் கிடக்கிறது!
உழைப் பிற்குழைத்த உயரிய கரங்களிரண்டு உணர்வற்றுக் கிடக்கின்றன!
தமிழகத்தில் தன் 'தமிழொலி' பரப்பிய ஒரு சிங்கத்தின் குரல்வளை குறுகிவிட்டது!

ஏன் இந்த நிலை? .. எதனால் ஏற்பட்டது இந்த நிலை?... என்று கேட்பின், கிடைக்கின்ற ஒரே பதில், இவையனைத்தும் "இயற்கையின் திருவிளையாடல்கள்" என்பதே. இயற்கை தன் படைப்புக்களை விரும்பியபடி அழிக்கலாம் அல்லவா?... அதைத்தான் செய்துவிட்டது... வேறு ஒன்றுமில்லை!

ஆம்!...... தமிழக வரலாற்றில் "பொற்காலம்" கண்ட அம் மாமேதை மறைந்துவிட்டார்!

தன் இன்பச் சுமையை இடையில் தாங்கி, தாங்கிய கருவிற்கு, உயிரளிக்கும் உயரிய தாய்ப்பருவத்தில் உணவின்றி, உண்ண நீரின்றி வாடிக்கிடக்கும் இரண்டடிப் பயிரின் நிலைதான் தமிழகத்தில் அன்று இருந்தது! கார் மேகம் வந்தது! கருணையும் உடன் வந்தது; தக்க தருணத்தில் தண்ணீரையும் தந்தது! குடிக்கின்ற நிலையில் தாய் மகிழ்கின்றாள்! ஆனால் ..... அவள் குடிக்குமுன் கதிரவன் அந்நீரைக் குடித்து விடுகின்றான்! பிறகு... அத்தாயின் நிலை யென்ன?... அந்த இரண்டடிப் பயிரின் நிலை யென்ன? அந்த நிலைதான் தமிழகமே, உன் நிலை! அந்த நிலைதான் தமிழா, உன் நிலை!

பாலைவனத்திலே பருகுவதற்குப் பசும் பால் கிடைக்காது; பச்சை நீர் கூடக் கிடைக்காது! தற்செயலாக நீர் கிடைக்கமட்டும் அப்பாலைவனத்தில் வாய்ப்புண்டு, அந்நீரைப் பருகவும் அங்கு வாய்ப்புண்டு! ஆனால்...... இயற்கை அதைவிடக் கொடியது! அளிக்கும் நீரை தான் அள்ளிப் பருகுமுன் அதுவே பருகிவிடும்! அதுதான் இயற்கையின் இயற்கை! இறைவனுக்கு இறைவன்!

ஆம் .. அந்தக் கொடிய இயற்கைதான் ஆயிரமாயிரம் தம்பிகளைத் தங்கள் அண்ணனை இழக்கும்படி செய்துவிட்டது! தான் படைத்த படைப்பினை நோக்கிற்று இயற்கை: அது 'உயர்ந்து விடும்' என்ற நிலையைக் கண்டு, பொறாமை கொண்டு, தன் படைப்புத்தான் என்றும் பார்க்காமல் அழித்துவிட்டது! அந்த உயர்ந்த உள்ளத்தின் காலடியில் உலகமே கிடப்பது அந்த இயற்கையின் கண்களுக்குத் தெரியுமா? சொல்லித்தான் புரியுமா? "வயலில் பச்சைப் பசேலென்று பரவியிருக்கின்ற பயிரினைப் பார்த்த, ஒரு காளைக்குப் பசிவராமல் என்ன செய்யும்? புசித்துப் பசிதீர்த்துக்கொண்டது! அக்காளைக்கு, தான் புசித்த பச்சிளந்தாள்களையும், அதன் ஒவ்வொரு இம்மியின் இன விருத்தியையும் கண்டு, கண்டு, ஏங்கி, ஏங்கி,

உண்ண காத்துக் கொண்டிருந்த தன் "எசமானின்" நெஞ்சத்தைப்பற்றித் தெரியுமா? ......இதுதான் இயற்கை! இந்த இயற்கைச்சுழலில் அகப்பட்ட அந்த உழவனின் நிலைதான் தமிழா... உன்நிலை!

'தெய்வமே இல்லை' யென்று கூறுகின்ற மனிதன் கூட உண்மையிலேயே தெய்வத்தைக்கண்டால், தன் எதிரில் கண்டால், வணங்கத்தான் செய்வான்! அதுபோன்றுதான் ஒரு தெய்வம் தோன்றியது; "நான் தான் தெய்வம்" என நற்றமிழால் நல்வழியில் தெளிவுறுத்தியது; மனிதன் உணர்ந்தான்! ஆனால்...... அந்தத் தெய்வத்தை வணங்க மனிதன் மண்டியிடும்போதுதானா அது மறைந்து விடவேண்டும்? ஆம் மறைந்துதான் விட்டது அம்மாபெரும் தெய்வம்! இனி எப்போது அத் தெய்வத்தைக் காண்பேன் என்று ஏங்கும் அந்த மனிதனின் நிலைதான், அந்த கேள்விக் குறிதான் (?) தமிழா!... உன் நிலை! இன்று!!

மணமேடையில் தலைவனும் தலைவியும் தாங்காத மகிழ்ச்சியுடன் தம்மை மறந்திருக்கின்றனர்! இங்கும் இயற்கை விபரீதம்! மஞ்சள் சூட்டும் வேளையிலே மன்னவனை இழக்கிறாள் அம்மங்கை! அவள் நிலை என்ன? ஆயிரமாயிரம் அழகுத் 'தலைவர்'கள் பிறகு வந்தாலும் அன்று நெஞ்சங் கொள்ளை கொண்ட அந்தத் தலைவனாக முடியுமா அனைவரும்? அந்த உத்தமத் தலைவனை இழந்த தலைவியின் நிலைதான் தமிழா!... உன் நிலை!

கன்றிழந்து கதறியது ஒரு பசு! இதுவும் இயற்கையின் விளையாட்டுதான்! இழந்த கன்றைப் பெற மனுநீதிச் சோழனிடம் மணிஅடித்து நீதி கேட்டது அந்தத் தாய் விலங்கு! நீதிவழங்கினான் மன்னவன்! கன்றைப் பெற்றதாம் பசு! இது கதை! கன்றைப் பெற முடியாமற் போயின் அந்தப் பசுவின் நிலையென்ன? அந்த நிலைதான் தமிழா! உன் நிலை!

"தமிழ் நாடு" என்ற சொல்லிலே உள்ள ஒருபுள்ளி அகன்றுவிட்டால் அச் செந்தமிழ்ச் சொல்லின் நிலை என்ன? அந்த நிலைதான்!... தமிழா உன் நிலை! உணர்க! தெளிக!

※

தமிழ்நாடு பெயர் மாற்ற விழாவில் அண்ணா

நான் இந்த மகிழ்ச்சி விழாவில் கலந்துகொள்ள முடிவெடுத்தபோது, நீங்கள் கூட்டத்தில் பேசக்கூடாது, அதிக நேரம் பேசினால் உடலுக்கு ஊறு நேரக்கூடும் என டாக்டர்களும் நண்பர்களும் தடைவிதித்தனர்.

இன்றையதினம் நான் பேசுவதால் இந்த உடலுக்கு ஊறு நேருமென்றால் இந்த உடல் இருந்தே பயனில்லை என்று நான் கூறி எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென மருத்துவர்களிடமும் நண்பர்களிடமும கேட்டுக் கொண்டேன்.

இத்தகைய வாய்ப்பு ஒருவரது வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும். பலமுறை வருவதில்லை.

1-12-68-தமிழ்நாடு பெயர்மாற்ற விழாவில் அண்ணா தொகுப்பு: கோபால். III B.A.

Anna the Great

V. Radhakrishnan, II. B.Sc., Br.i.

Anna, our beloved, is a pet name for us, the Tamils, for whose progress and prosperity, he devoted and dedicated his life. The name thrills our spirit and stirs our senses. Postulating his lofty ideals and promulgating his noble passions, he pompously prominaded our land, pervaded our life, permeated our soul, promoted our feelings, purified our emotions and glorified our actions. All people, irrespective of caste and creed, rich and poor, high and low felt secure in his firm resolve for fair rule and justice and reposed complete confidence in his able administration.

The unique feature of his fame and name is the admiration and adoration he won even among his hostiles. His crusade against social injustices, terrific tirade against religious evils, his eloquent speeches and powerful writings that swayed the masses and sowed the seeds of revolution, his enforcement and implementation of plans and schemes that dispelled the gloom and relieved the distress of the poors and their consequent worship for him irritated and incited fraudulent gamblers that traded on politics and ruthlessly ransacked the people to promote and perpetuate their own selves. But he valiantly and nonchalantly admitted and approved of their rights to differ from him, agreed to disagree with them, argued and asserted his views against them.

His remarkable achievement is his masterly blending of nobility and integrity with politics, which is invariably associated with strategy, treachery and treason Towering in structure and culture, clear in his convictions confident in his capacity, he was not daunted and dismayed by rivals but **derived pleasure in developing talents in others and delighted in their triumphs.**

People who rise to power by vile and wicked means, always find their position precarious and have resort to suppression and repression, murder and massacre to maintain their positions. They shudder to step down from their posts in fear of retaliation and revenge.

But Anna's throne was built with people's well wishes. plastered with their emotional devotion and adorned with their happy ovation. He sought neither police for protection and nor fort for his fortification. He was safe and secure with people's full support. Millions that mourn for Anna, actually mourn for their own selves that their lives are lost with Anna. The depth of their agony and annoyance is the measure of their feelings of despair and desolation that without Anna there is no happiness and peace for them. His magnanimity was his might. His word was his sword. With them he subdued his enemies who prostrated to him in penance and remorse for their offence.

Anna's demise has falsified the faiths that virtue wins and God is gracious. If these are true, Anna who chose virtuous life should have been spared and the passionate prayers and pathetic appeal of millions of people should have moved God to compassion to save the life of our Anna

Anna, who is the amalgamation of all greatness of great men in the world, is a supererogation of Nature's creation. His incredible fame and indelible name will be a permanent powerful bright beacon for the present and posterity.

பொய்க்கால்

டாக்டர் மு. வரதராசனுர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

மொழியைக் கற்பது ஒரு வகைக் கல்வி; மொழியின் வாயிலாக அறிவுத் துறைகளைக் கற்பது மற்றொரு வகைக் கல்வி.

அறிவுத் துறைகளைக் கற்பதில் நம்நாட்டு மாணவர்கள் போதிய அளவு முன்னேறவில்லை என்று பலரும் கருதுகின்றனர். அறிவுத் துறைகளில் நம் நாட்டு இளைஞர்கள் பின்தங்கிவிடக் கூடாது என்பது பலர் கூறும் அறிவுரை. இந்த உண்மையைக் கல்வித்துறை அறிஞர்கள் மட்டும் அல்லாமல், பெற்றோர்களும் தெளிவாக உணர்ந்து நாட்டின் எதிர்கால நன்மைக்கான வழியில் ஒத்துழைப்பது கடமையாகும்.

பி. எஸ்சி., பி ஏ., ஆகிய பட்டப் படிப்பு வகுப்புகளில் முதல் பிரிவு ஆங்கில மொழியாகவும் இரண்டாம் பிரிவு தாய்மொழி (அல்லது நாட்டு மொழி)யாகவும் மூன்றும் பிரிவு அறிவுத்துறைப் பாடங்களாவும் அமைந்துள்ளன. முதல் இரண்டு பிரிவுகளுக்காக முதல் இரண்டு ஆண்டு வகுப்புகளில் வாரம் பத்துப்பன்னிரண்டு மணி நேரம் செலவாகின்றது. இவ்வாறு மொழிக்குச் செலவானவை போக எஞ்சிய பதினாறு பதினேழு மணிகள் அறிவுத்துறை பாடங்களுக்கு உரியவைகளாக உள்ளன. கணக்கு, இரசாயனம், பௌதிகம், பொருளியல், அரசியல், வரலாறு முதலிய பாடங்களைக் கற்பதற்கு அந்த நேரம் போதாமையால், மாணவர்கள் அவைகளை நன்றாகக் கற்றுத் தேர்ச்சி பெற முடியவில்லை என்பது பலர் கருத்து. அதனால், மொழிகளைக் கற்பதற்குச் செலவாகும் நேரத்தையும் அறிவுத்துறைப் பாடங்களுக்கே ஒதுக்கி, மொழிக் கல்வி பி. எஸ். சி., பி. ஏ. வகுப்புகளில் இல்லாத வாறு செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த அறிவுரையின் அடிப் படையில் நல்ல நோக்கம் உள்ளது.

ஆனால் "நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு" என்கிறார் திருவள்ளுவர். கல்வித்துறையில் நன்றாக எண்ணிப்பார்க்காமல் மாறுதல் செய்துவிடுவதால் தீமை கள் விளையும். ஒருவகையில் நன்மை விளைய, மற்றொரு வகையில் தீமைகள் நேர் வதற்கு இடம் தரக்கூடாது. எதை முந்திச் செய்ய வேண்டும், எதைப் பிந்திச் செய்ய வேண்டும் என்ற தெளிவு இல்லாமல் செயலில் இறங்குவதால் பயன் இல்லை. செல்வாக்குள்ளவர்களின் எதிர்ப்பு இருக்குமே என்ற காரணத்தால், முந்திச் செய்யத் தக்கதை (தாய்மொழிப் பயிற்சித் திட்டத்தை) உடனே செய்யாமல் ஒத்திவைப்பதும் தள்ளிப்போடுவதும் தீமையாகும். அது போலவே, செல்வாக் குள்ளவர்கள் உடனே வரவேற்கின்ற காரணத்தால், பிந்திச் செய்யத்தக்கதை (தாய்மொழி வகுப்புக் குறைப்பை) அவசரப்பட்டு விரைந்து நிறைவேற்ற முற்படு வதும் தீமையாகும்.

பின்வருவன இவ்வகையில் சீர்திருத்தம் செய்ய விரும்புவோர் கருத்தில் கொண்டு எண்ணிப்பார்க்கத் தக்கவையாகும்:—

1. வெளிநாடுகளில் பி. எஸ்சி., பி.ஏ., முதலியவற்றிற்கு நேரான பட்டப் படிப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு மொழிக்கல்விக்காக இவ்வாறு நேரம் செலவாவதில்லை. மொழிக்கல்வி, தனிப் பட்டப்படிப்பாக உள்ளது. அறிவுத் துறைப் பாடம் பயில விரும்புகிறவர்கள் தம் காலம் முழுவதையும் அதற்காகவே செலவிடுகிறார்கள். இதை எடுத்துக்காட்டி, நம் நாட்டிலும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஓர் உண்மையை மறந்து விடுகிறார்கள். அந்த வெளி நாடுகளில் பட்ட வகுப்பில் அறிவுத் துறைகளைக் கற்கும் மாணவர்கள், அந்தப் பாடங்களைத் தம் தாய்மொழி வாயிலாகவே கற்கிறார்கள். ஜப்பானிய மாணவரும் ரஷ்ய மாணவரும் ஜெர்மானிய மாணவரும் அமெரிக்க மாணவரும் தம்தம் தாய் மொழியிலேயே அறிவியல் (சயன்ஸ்) முதலிய வற்றைப் படிக்கிறார்கள். அயல் மொழியில் படிக்கும் துன்பம் அவர்களுக்கு இல்லை. மூளையோடு நெருங்கிய தொடர்பு உடைய தாய்மொழியின் வாயிலாக அந்தப்பாடங்களைக் கற்கும் முறை அங்கெல்லாம் இருப்பதால், பாடங்களை எளிதில் விளங்கிக்கொள்ள முடிகிறது; விரைவில் தேர்ச்சிபெற முடிகிறது. தாய்மொழியில் கற்பது இயற்கைக் கால்களைக் கொண்டு நடப்பதைப் போன்றது. எவ்வளவு உயர்ந்த மொழியே ஆனாலும், எத்தனை ஆண்டுகள் பாடுபட்டாலும், அயல்மொழி அயல்மொழிதான். அயல்மொழியின் வாயிலாக, நம் நாட்டு மாணவர்கள் கற்பது, பொய்க்கால் கட்டிக் கொண்டு நடப்பதைப் போன்றது. பொய்க்கால் நடை, இயற்கையான உண்மை நடையோடு எக்காலத்திலும் போட்டியிட முடியாது. ஆகையால் வெளிநாட்டுப் பல்கலைக் கழக மாணவர்களை நம் நாட்டு மாணவர்கள் எட்டிப் பிடிக்க முடியாமல் இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. அவர்களைப்பார்த்து ஏங்குவதை விட்டு, அவர்களின் வாய்ப்பை நம் நாட்டு இளைஞர்களும் பெறுமாறு செய்யவேண்டும். அந்த முதல் கடமையை முடித்தபிறகே, நம் மாணவர்களின் தரத்தைச் சீர்தூக்க வேண்டும். நம் கடமையைச் செய்யாமல் இளைஞர்களின் தரத்தைச் சீர்தூக்க நமக்கு உரிமை இல்லை.

2. நம் நாட்டு இளைஞர்களும் இயல்பான மூளை வளர்ச்சி உடையவர்களே; அறிவுக் கூர்மை உடையவர்களே. இந்த வகையில் நம் மாணவர்கள் பிற நாட்டார்க்குச் சிறிதும் பிற்பட்டவர்கள் அல்லர். அறிவு வளர்ச்சி குறைந்தவர்கள் என்றும், மந்தமானவர்கள் என்றும் அவர்களைக் குறைகூற இடம் இல்லை. அவ்வாறு இருக்க, அறிவுத் துறையில் பின்தங்குவதற்குக் காரணம் என்ன? மற்ற நாட்டு மாணவர்கள் அறிவுத்துறையில் பொருளை-கருத்துகளை-வேகமாகக் கற்கும் காலத்தில் நம் நாட்டு மாணவர்கள் பொருளை-கருத்துகளை-உணர்வதில் வேகம் இல்லாமல், ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் கற்பதிலேயே பெரும் பொழுதைக் கழிக்கிறார்கள். மூளையின் பசி, கருத்துக்களையே உணவாக நாடுகிறது; சொற்களை உணவாக அளித்தால் மூளை வருந்துகிறது. ஊக்கம் இழக்கிறது; அக்கறை இழக்கிறது; சோர்ந்து மெலிகிறது. நம்நாட்டு நல்ல மாணவர்களின் கூரிய மூளைகள் இவ்வாறு சோர்ந்து மெலிவடையச் செய்தல் பெருங்குற்றம், கல்வித்துறையில் இந்தக் குற்றத்தை ஓயாமல் செய்துவருகிறோம்; நாகரிகமாகச் செய்து வருகிறோம். இதில் யாருக்கேனும் ஐயம் இருக்குமானால் இரண்டு இடங்

களுக்குச் சென்று ஐயம் தீர்லாம்; ஒன்று மாணவர்கள் தனித் தனியே உட்கார்ந்து அமைதியாகப்படிக்கும் இடம்; அங்கே அவர்கள் திரும்பத்திரும்ப ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் கிளிப்பிள்ளைபோல் சொல்லிச் சொல்லி நெட்டுருச் செய்வதைக் கேட்கலாம். மற்றோரிடம், வகுப்பறை; அங்கே ஆசிரியர்கள் ஊக்கம் இல்லாமல் தம் அயல்மொழிக் குறிப்பிலிருந்து எதையோ பார்த்துப் பார்த்துச் சொல்வதையும், மாணவர்கள் ஊக்கம் இல்லாமல் தம் ஏடுகளில் அவற்றை எழுதிக் கொண்டு கொட்டாவி விடுவதையும் காணலாம். இந்த இரண்டும் என்ன உண்மையைப் புலப்படுத்துகின்றன? அறிவுப்பசிக்கு ஏற்ற உணவாகிய கருத்துக்கள் ஒளி விட்டு விளங்க வேண்டிய இடத்தில், ஆங்கில மொழியின் சொற்களும் வாக்கியங்களும் திரையிட்டு மறைக்கின்றன என்ற உண்மையை இவை புலப்படுத்துகின்றன ஆகையால் அறிவுத் துறைக்கு இன்று உள்ள பதினேழு மணி நேரம் போதாது என்று மொழிவகுப்புக்களையும் வாங்கிச் சேர்த்துத்தந்தாலும் என்ன ஆகும்? பதினேழு பொய்க்கால் வகுப்புக்குப் பதிலாக, முப்பது தூங்கு மூஞ்சி வகுப்பு ஏற்படும். இன்னும் நெட்டுரு, இன்னும் சில சொல்லியெழுதல், இன்னும் பல சொற்கள் வாக்கியங்கள் என்று சுமை வளருமே தவிர, இன்னும் அறிவு வளர்ச்சி, இன்னும் பாடத்தெளிவு என்று ஏற்படுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, உளநூலார் பலர் கூறும் உண்மையை ஆராய்ந்து, மூளையின் இயற்கைப் பசிக்கு ஏற்ற உணவு முறையை உணர்ந்து, மூளை விரைவில் ஏற்கத்தக்க தாய் மொழியின் வாழிலாகக் கருத்துக்களை ஊட்டும் முறையை முதலில் ஏற்படுத்த வேண்டும். அதன் பிறகே, வகுப்பு நேரத்தைப் பெருக்குவதால் பயன் விளையும்.

3 நம் நாட்டுக் கல்வி முறையிலே குறை பல உள்ளன என்று உள்நாட்டு அறிஞர் பலரும் கூறிவருகிறார்கள். அந்தக் குறைகளைக் களைவதற்குப் போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அந்தக் குறைகளைக் களையாமல், வகுப்பு நேரத்தை மட்டும் பெருக்கிவிடுவதால் என்ன பயன் காண முடியும்? நூல் நிலயங்களை மாணவர்கள் தக்கவாறு பயன்படுத்துவதில்லை. காரணம் மாணவர்களின் உள்ளம் நூல்களை நாடுவதில்லை; தேர்வு எண்களையே நாடி ஏங்குகிறது. தேர்வே குறிக்கோளாக இருக்கும் போக்கை மாற்றி அறிவு வேட்கை ஏற்படுத்த முயல வேண்டும். இதுபோல் இன்றியமையாத சீர்திருத்தங்கள் பல உள்ளன. வகுப்பறைகள் இன்று வகுப்பறைகளாக இல்லை; பொது மேடைகள் போல் ஆகிவிட்டன. ஆசிரியர்கள் கடமைச் சுமை என உணர்ந்து சொற்பொழிவு செய்ய, மாணவர்கள் மணி நேரத்தைக்கணக்கிட்டுப் பொறுமை காட்டி வேதனைப் படும் நிலைமை உள்ளது. எப்போது முடியும் என்று பெருமூச்சுவிட்டு வெளியேறும் நிலையே ஆசிரியர் மாணவர் இருசாரார்க்கும் உள்ளது. காரணம்,, வகுப்பறை பெரிய பொதுமேடை போல ஆகிவிட்டது. ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்துக்கு வாய்ப்பு இல்லை; ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் தொகை நூற்றுக்கு மேற்பட்டதாக ஆகிவிட்டமையால், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. அவர் யாரோ நாம் யாரோ, ஏதோ கடமை, ஏதோ தொல்லை என்ற நிலையிலேயே ஆசிரியர் மாணவர் உறவு உள்ளது. அறிவு வள்ளல், அறிவுவேட்கை என்ற காரணம் பற்றிய நல்லுறவுக்கு வாய்ப்பு இல்லாத மந்தமுறை ஏழை நாட்டுக்கு ஏற்றதாக வளர்ந்துவிட்டது; இதுபோன்ற குறைகளைக் களைந்தால்தான் அறிவுத் துறைக் கல்வியில் முன்னேற்றம் காண முடியும்.

4. பலரும் அடிக்கடி மறந்துவிடும் மற்றோர் உண்மையும் கருதத் தக்கது. ஆங்கில மொழியறிவு பலர்க்கும் தேவையான ஒன்று. இதில் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் பிறநாட்டு அறிவுச் செல்வத்தை அறிந்துகொள்ளும் அளவிற்கே பலர்க்கும் ஆங்கில அறிவு தேவை. நம் நாட்டு அறிவுச் செல்வத்தைப் பிறர்க்கு வழங்கும் அளவிற்கு ஆங்கில அறிவு பலர்க்குத் தேவையில்லை; ஒரு சிலர்க்கு அந்தத் திறமை இருந்தால் போதும். இன்னொரு வகையாகக் கூறினால், ஆங்கிலத்தில் உள்ள நூல்களைக் கற்று உணரும் அளவிற்கு ஆங்கில மொழி அறிவு பலர்க்குத் தேவை; ஆங்கிலத்தில் நூல் எழுதும் அளவிற்குத் திறமை ஒருசிலர்க்கே வேண்டும். ஆங்கிலத்தில் கற்றுணரும் (Comprehension) திறம் பலர்க்கும், ஆங்கிலத்தில் எடுத்துரைக்கும் (Expression) திறம் சிலர்க்கும் வேண்டும். இதில் ஜப்பானியர் ரஷ்யர் முதலான பிற நாட்டுத் தலைவர்கள் தெளிவுபெற்றிருப்பதால், அந்நாட்டுக் கல்விமுறையில் ஆங்கிலத்திற்கு ஏற்ற சிறு இடமே அளிக்கப்பட்டிருக்கிறது. நெடுங்காலமாக இந் நாட்டில் மொழியடிமைத் தன்மை வேரூன்றியிருந்த காரணத்தால் இந்தத் தெளிவு இங்கே ஏற்படுவது அரிதாக உள்ளது. உலக நாடுகளில் எல்லாம் உணரப் பட்டுள்ள இந்த உண்மையைப்பற்றிப் பேச்செடுத்தாலேயே, இங்கே பலரும் அலறி எழும் நிலைமை உள்ளது. இது வருந்தத்தக்கது. இந்த நிலைமை மாறத்தக்க வகையில், பொறுமை யான சிந்தனை வளரவேண்டும்.

5. ஆங்கிலத்தை ஒரு மொழியாகப் படிக்கும்முறை நல்ல பயன் தரும். நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக்கொண்டு கற்றும், விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே ஆங்கில மொழியில் திறமை பெற்றமை காண்கிறோம். வர வர அவர்களின் தொகையும் அருகி வருகிறது. ஆகவே, அது இனிப் பயன்படாது என உணர்ந்து, ஆங்கிலத்தை ஒரு மொழியாக — மொழியறி வுக்காகவே—கற்கும் முறை வகுக்க வேண்டும். இலக்கிய நயத்திற்காக சேக்ஸ்பியர் முதலான கவிஞர்களின் படைப்புகளைக் கற்கும் வாய்ப்பு, ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்ட சில மாணவர்களுக்குமட்டுமே இருக்கவேண்டும்; மற்றவர்கள் எல்லோரும் இருபதாம் நூற்றாண்டின் ஆங்கில உரைநடை நூல்களை மட்டுமே கற்று அந்த மொழியை அறிந்தால் போதும் என்று கொள்ள வேண்டும். இன்று உள்ள முறைப்படி , ஆங்கில நாட்டுப் பல்கலைக் கழக மாணவர்கள் படிக்கும் இலக்கிய நூல்களையே படித்து, ஆங்கிலேய இளைஞர்களைப்போலவே நம் நாட்டு இளைஞர்களும் ஆங்கிலத்தில் விடை எழுத வேண்டும் என எதிர்பார்க்கிறோம். கண்ட பயனோ பெருந்தோல்வி என்றே கூறலாம். நெட்டுருப் போட்டுச் சிலபல கட்டுரைகளைப் படித்துத் தேர்வில் எழுதி எப்படியோ வெற்றி பெறுவதையே பெரும்பாலும் காண்கின்றோம். நூற்றுக்கு எழுபது எழுபத்தைந்து பேர் தவறி விடும் தேர்வு ஆங்கிலத் தேர்வே. மூன்று ஆண்டு படிப்பதற்கு உரிய பட்டப் படிப் பில், அறிவுத்துறைக்கு நேரம் இல்லாமல், தேர்வில் மறுபடியும் மறுபடியும் தோல்வியுற்று மூன்று நான்கு ஆண்டுகள் ஆங்கிலத்தில் தேர்வுக்காகவே படித்து மாணவர் பலர் சோர்ந்து போகிறார்கள். இந்த உதவாத முறை பற்றி நமக்குள் இனியும் பெருமைப்படுவதில் பயன் இல்லை. தாய் மொழியைக் கற்கும் மொழிக் கல்வி ஒரு வகையானது; தாய்மொழி அல்லாத பிற மொழியைக் கற்கும் மொழிக் கல்வி வேறு வகையானது. ஆகவே, இந்நாட்டு மாணவர் ஆங்கில நாட்டுப் பல் கலைக் கழக முறைப்படி ஆங்கில மொழியைக் கற்பது பொருந்தாது; உதவாது.

ஆங்கிலேயர் தமிழைக் கற்பதுபோல் நாம் ஆங்கிலத்தைக் கற்கவேண்டும். எவ்வளவு கற்றாலும், ஒலிக்கும் முறையிலும் வாக்கிய அமைப்பிலும் சிறுசிறு பிழைகள் இடம் பெறும். அதைக் குறையாகக் கருதி மாணவர்களைச் சோர்வுறச் செய்யக்கூடாது. தமிழுக்காகவே காலமெல்லாம் உழைத்த கால்டுவெலும் போப்பும் தமிழ் பேசுவதிலும் எழுதுவதிலும் குறை இருந்திருக்கும். ஜப்பானியர் ஆங்கிலேயர்போல் ஆங்கிலம் பேசவும், எழுதவும் முயல்வதில்லை; ஆங்கில நூல்களையும் ஆங்கிலப் பேச்சுக்களையும் கற்றும் கேட்டும் உணர்வதுமட்டுமே தம் குறிக்கோளாகக் கொள்கிறார்கள். ரஷ்யர் முதலானவர்களும் அவ்வாறே அமைகின்றனர். அதனால் முயற்சி வீணாகாமல் அறிவுத்துறையில் அவர்கள் வேகமாகக் கல்விப் பயன்பெற முடிகிறது

6. விதிவிலக்காக ஒரு சிலர் இரண்டு மூன்று மொழிகளில் திறமை பெறத் தக்கவர்களாக இருக்கிறார்கள். ஓவியம் சிற்பம் இசை முதலிய கலைத்திறன் சிலர்க்கு மிகுதியாக அமைவது போலவே, மொழித்திறனும் சிலர்க்கு மிகுதியாக இருக்கக் காண்கிறோம். அவர்களைத் தேர்ந்தெடுத்துத் தனிப்பயிற்சி தந்தால், பிறமொழிகளில் புலமையுடையவர்களாகவும் ஆக்கலாம்; அவர்களை மட்டும் அந்தந்த மொழிகளில் தேர்ச்சி பெறச் செய்தால் அவர்கள் சிறந்த மொழி பெயர்ப்பாளர்களாக நாட்டுக்குப் பயன்பட முடியும். ரஷ்ய நாட்டில் அத்தகைய மொழி பெயர்ப்பாளர்களை ஊக்கமூட்டி வளர்த்து வருவதால், அவர்கள் உலகத்து நாடுகளோடெல்லாம் உறவு கொள்ளத் தக்க வகையில் மொழித்துறையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் அந்த முறையே பின்பற்றத்தக்க முறையாகும். அதைவிட்டு, எல்லாத் தமிழ் மாணவர்களின் தலைமேலும் ஆக்ஸ்போர்டு முறையைச் சுமத்தி எல்லோரும் வருந்தச்செய்து, போதிய பயன் காணாமல் போவதில் பயன் இல்லை. இந்த உண்மை உணர்ந்து நன்முறை வகுத்தால் ஆங்கிலப் பாடத்தால் மாணவர்கள் சோர்ந்து வாடாமல் அறிவித்துறையில் வளர்ச்சி பெறுவார்கள். வகுப்பு நேரத்தை மிகுதியாக்கினால் மட்டுமே அறிவுத் துறையில் வளர்ச்சி மிகுதியாகும் என்று நம்புதல் கூடாது. எந்தத் துறையில் ஊக்கமும் அக்கறையும் உள்ளனவோ, அந்தத் துறையில் உழைப்புத்திறன் மிகுதியாக இருப்பதைக் காணலாம். ஆகவே, மாணவர்களின் ஊக்கத்தையும் அக்கறையையும் கெடுத்து வரும் பிற மொழிச் சுமையைக் குறைத்து, பிற மொழியைப் புதிய முறையில் சுவையாகக் கற்கும் திட்டம் வகுக்கவேண்டும். உள்ளம் ஆற்றல் உடையது. உழைப்பாளியின் உள்ளம் ஊக்கமான சூழ்நிலை உள்ளபோது சிறிது நேரத்தில் பெரிதும் செய்து முடிக்க முடியும்; ஊக்கமற்ற சூழ்நிலை நேர்ந்தால், நெடுநேரம் தந்தாலும் அவ்வளவு செய்து முடிக்க இயலாமல் வாடும். ஆகவே, நேரம் மிகுதியாக்கலைவிட ஊக்கம் மிகுதியாக்கும் திட்டம் இன்றியமையாதது என்பதை மறத்தல் கூடாது.

7. ஆங்கிலக் கல்வியில் முந்திய தலைமுறையில் இருந்த நிலையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று சிலர் கனவு காண்கின்றனர். செய்தித்தாள், வானொலி, பேச்சு மேடை, திரைப்படம் முதலியவற்றின் வாயிலாகத் தமிழ் இவ்வளவு பரவலாகவும்ஆழமாகவும் இடம் பெறாத காலம் அது. ஆகவே தமிழ்ச் சமுதாயத்தில் நகரங்களில் சிறு தீவுகள்போல் இருந்த சில குடும்பங்கள் ஆங்கிலமே கேட்டும் பேசியும் கற்றும் முன்னேற முடிந்தது. காலம் மாறி வருகிறது. தமிழ் எங்கும் பரப்பும் ஆழமும் பெருகிவருவதால், ஆங்கிலத் தீவுக் குடும்பங்கள் இனிப் பெருக முடியாது. மற்ற மக்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வாக்குப் பெற்றுவிடவும்

இனி முடியாது. வீணில் உண்டு களித்திருப்போரின் நன்மையை மட்டும் கருதித் திட்டமிடும் காலமானால், அந்தத் தீவுக் குடும்பங்களின் நலத்திற்கு ஏற்பக் கல்வி முறை அமைக்கலாம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வதே குறிக்கோள் ஆகிவிட்ட இக்காலத்தில்; பெரும்பாலோரின் மொழியை இனியும் புறக்கணித்துத் திட்டமிடமுடியாது. ஆகவே, தாய்மொழியின் வாயிலாக அறிவுத்துறையை வளர்க்கத் திட்டமிட்டு, கிராமத்துக் குடும்பங்களிலிருந்தும் நகரத்து உழைப்பாளிக் குடும்பங்களிலிருந்தும் வரும் இளைஞர்களின் கல்விக்கு ஊக்கமளிப்பதே முதல் கடமையாகக் கொள்ள வேண்டும். அந்தச் சீர்திருத்தத்தைக் குறைவறச் செய்துமுடிக்கும் நாள் விரைவில் வரவேண்டும். அதுவரையில் தாய்மொழி வகுப்புகளைக் குறைத்துவிட்டு, மற்றப் பாட வகுப்புகளைப் பெருக்கும் முயற்சி, நகரத்தில் உள்ள சில தீவுக் குடும்பங்களுக்கு மட்டும் நன்மை செய்யும் திட்டமாகவே நிற்குமாகையால், அது சமுதாயத்திற்குத் தீங்காகவே முடியும், அந்தத் தீவுக் குடும்ப மாணவர்களுக்கு ஆங்கிலம் பொய்க்கால் அன்று; மெய்க்கால் போலவே ஆகிவிட்டது. அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்தாலும், வளர்ப்பாலும் மனப்பான்மையாலும் பிற நாட்டாராகவே உள்ளனர். தாய்மொழி வகுப்புகளைக் குறைப்பது, அவர்களுக்குமட்டும் ஊக்கம் ஊட்டி வளர்ப்பதாகும். தமிழ்நாட்டில் தமிழராக வாழ விரும்பும் குடும்பத்து இளைஞர்கள் இனி வாரத்தில் முப்பது மணி நேரமும் ஆங்கிலமே கேட்டு, ஆங்கிலத்திலேயே கற்றுத் தேறவேண்டும் என்று திட்டமிடுவதன் பொருள் என்ன? தமிழ்ப்பற்று என்ற குற்றத்தின் காரணமாக, பொய்க்கால் கட்டிக்கொண்டு மற்ற வேகநடைக்காரரோடு போட்டியிட்டுத் தோல்வியுறவேண்டும் என்பதாகும்.

நன்றி: நித்திலக் குவியல்.

Costly clock that does not work!

Sometimes I hear people talking that I am not religious. If faith in sacrifices makes one religious then I am a religious man.

If it is only the presentation of costly ornaments that adorn the deity and the gallons of oil that are poured over it are the criteria then I am not religious. If praising the Lord is to be at the expense of the poor makes one religious, then I am not religious.

But if you believe that God is seen through Service to Humanity, then I am religious, and I believe in it.

We have high principles in our land but they are like clock that does not work. High principles and low life do not go together. We must get rid of this situation and I assure you Love is the only path for salvation.

Compiled by: Kumaran.

ANNA in Home Rule. 4-6-67.

★

திரைப்படத் தலைப்புகளில் அண்ணா

நா. பாண்டுரங்கன், இளங்கலை இரண்டாமாண்டு.

'தென்னவர் திலகமே', 'அன்பு வழி'யில் உருவான தமிழ்த் 'தாய்க்குத் தலைமகனே', என்றும் பளிச்சிடும் 'ஒளிவிளக்கே', தமிழகத்தின் சிறந்த 'குடும்பத் தலைவனே', தன் தம்பிகளைக் 'காக்கும் கரங்களை' உடையவனே, 'தங்கச்சுரங்கம்' போன்ற எழுத்தோவியனே, 'சொற்சுவை மிகுந்த சொல் வன்மையுடையவனே, வாதத்தில் 'நக்கீரன்' போன்றவனே, 'தெய்வத்தாய்' ஈன்ற 'தாய் சொல்லைத்தட்டாத' திருமகனே, 'கட்ட பொம்மன்' போன்ற வீரனே, 'அரிச்சந்திரன்' போன்ற உண்மையுள்ள மன்னவனே, என்றும் புன்னகை பூக்கும் புதுப்பூஞ் செம்மலே, நீ பலகோடி மக்களுக்குக் காவல் காரன் ஆவாய். 'முத்துச்சிப்பி' போன்ற பெருமையுடையவனே. 'நீ', 'நாணல்' போன்று அனைத்துக்கும் வளைந்து கொடுக்கும் தன்மையை உடையவன்.

சிறந்த 'தாழம்பூவின்' தரத்தைப்பெற்று, எங்கள் 'இதயக்கமலமாய்' உருவாகி, 'செந்தாமரை' போன்ற முகத்தைப்பெற்று, தளராத நெஞ்சம் கொண்டு, 'எதையும் தாங்கும் இதயம்' பெற்று, உங்கள் 'நெஞ்சிருக்கும் வரை' எங்களுக்காகத் 'தூக்கு தூக்கி' போன்று எவ்வளவோ இன்னல் அடைந்தீர். 'தனிப்பிறவி' எடுத்து எங்களுக்குக் 'கைகொடுத்த தெய்வம்' போல் அவதரித்தீர் 'காஞ்சித் தலைவ! கருணைக்கடவுளே! வாழ்க்கை என்பது 'நீர்க்குமிழி' போலாகும் என்பதை நினது மறைவே எடுத்துக் காட்டிற்று

'முதலாளிக்கும்', 'தொழிலாளிக்கும்' இடையில் இருந்து அனைவர் உள்ளத்திலும் 'பந்தபாசத்'தை உருவாக்கிப் 'பங்காளிகளை'ப் போல் இருக்கச்செய்து அதையும் 'நீதிக்குப்பின் (தான்) பாசம்' என்று அறிவித்து யாருக்கும் 'உயிர்மேல் ஆசை' இருக்கக்கூடாது என்றும், அனை வரிடத்தும் 'ஆசை முகத்'துடனும் 'குழந்தை உள்ளத்'துடனும், 'பேசும் தெய்வம்' போலும் இருந்து, நும் வாழ்க்கையில் 'எதிர் நீச்சல்' போட்டு அதன்பயனாக 'சுபதினம' எனக்கூடிய நாள் அன்று உன் உழைப்பின் பயனால், 'கொஞ்சும் சலங்கை' என ஒலிக்கும் உன் பேச்சின் ஆற்றலாலும், படிப்போரின் மனதை நெகிழவைக்கும் உன் எழுத்தின் திறனாலும், தமிழ கத்தின் ஈடு இணையிலா தலைவரானீர்.

தலைமைப் பொறுப்பைத் தாங்கள் 'ஆண்டவன் கட்டளை' என்றும், 'அரச கட்டளை' என்றும் சிரமேற்கொண்டு 'தாயைக்காத்த தனய'னைப் போல் தன் தமிழ் நாட்டைக் காக்க முற்பட்டு நின்றீர். 'நீ', 'நான்' என்று இல்லாமல் என்றும் 'நேர்வழியில்' செல்ல 'நிமிர்ந்து நில்' என்று 'வழி காட்டியாக' இருந்து 'உயர்ந்தமனி'தராகிவிட்டீர். உன் திருமுகத்தைப் 'பார்த்தால் பசிதீரும்'. 'பாலும் பழமும்' கைகளில் ஏந்தி பவளவாயில் புன்னகை சிந்திய உமது சிரிப்பு எங்கே? அன்பும் அருளும் மனதினில் ஏந்தி சிந்தையும் செயலும் ஒருங்குடனமைந்த நின் திருஉடல எங்கே? 'திருஅருட் செல்வரா'கிய 'எங்கள் ஊர் ராஜாவே', நீ எங்கே? போந்தாய்? இறைவா! இறைவா! 'மன்னாதிமன்னனே' புதுமைப்பித்தனே, உன், 'அன்புக்கரங்களை எங்கெடுத்துச் சென்றனையோ? என் இதயத்தில் நீ' ஆனாய்!

கொடும் இந்திதனை விரட்டியடித்துத் தமிழ் நாடு எனப் பெயர் கொடுத்துப் பல துன்பங்கள் அடைந்த 'எங்கள் தங்கமே'! எழிலகத்து இளவரசனே! வீரத்திருமகனே! உத்தமப்புத்திரனே! தன்னிகர் இல்லாத் தலைவனே! உன் 'தெய்வீக உறவை' இழந்த நாங்களும், 'நான் பெற்ற செல்வமே' மறைந்தாயா என்று நமது தமிழ் அன்னையும் வருந்துமாறு நீர் அமருலகு அடைந்தீரே நியாயமா அண்ணா! 'தமிழுக்குப் புத்துயிர் அளித்து, தன்னுயிர் மாய்த்துக்கொண்ட செம்மலே! தெய்வமே! வாழ்க உன்புகழ் விளங்குக உன் நாமம்!!

✱

கோயிலில் தமிழ் வழிபாடு

" ஆண்டவரை நமது வாயினால் வாயார வாழ்த்துவது தவிர, பிறரைக் கொண்டு வேறு பாஷைகளில் அர்த்தம் விளங்காமல் அர்ச்சனை முதலியன செய்தல் அவ்வளவு முறையானதல்ல" —இராமலிங்க வள்ளலார்.

'முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்'

—அருணகிரிநாதர்.

பற்றுஞ் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றங்குணமாகக் கொள்ளும் குணக்கடலே

❖

'தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்த சிவாநுபூதியைக் கொடுக்கும் என்பதாம்'

—வள்ளலார்.

தொகுப்பு; நா.கணேசன், III B SC. Br. i

THE THREE DOMAINS

I have offered much food for thought and I know that you will relish the stuff. But that is not what I expect from you. You should come forward to right the wrong, to befriend the afflicted, to defend the weak, advocate the unfortunate, in short, offer your services for the cause of the Dignity of Man!

Renaissance, Rationalism and **Socialism** are the three domains where in you should play a big role—a leading role!

The Pongal day is not a day for prayer, it is as I have stated earlier, a day of rededication—the objective being the ennobling dictum-Dignity of Man.

ANNA-in Home Rule. 14-1-1968. Compiled by: **Chevvel.**

பூமியை வலம்வரும் விண்வெளிக்கலம் விண்வெளிப்பாதையிலிருந்து விலகாமலிருப்பதேன்?

இதற்குரிய விடை ஒரு புதிர் போலத்தோன்றும். வலம்வரும் விண்வெளிக்கலம் இடைவிடாது பூமியை நோக்கி விழுந்தவண்ணம் இருப்பதனால்தான் அது விண்வெளிப்பாதையிலிருந்து விலகாமல் வலம் வந்த வண்ணம் இருக்கிறது! அது பூமியை நோக்கி விழுந்த வண்ணம் இருந்தாலும் பூமிக்கும் அதற்கும் உள்ள தூரம் குறைவதில்லை.

இது எப்படியெனில் ஐசக் நியூட்டன் கூறிய உவமையைக் காண வேண்டும். அவர் கூறினார். பீரங்கியிலிருந்து கிளம்பும் குண்டு செல்லும் வளைவான பாதை பூமியின் அளவுக்கு இணையாக இருக்குமானால் அந்தக் குண்டு எப்போதும் பூமியை வளையம் வந்தவண்ணம் இருக்குமேயொழிய பூமியில் வந்துவிழாது.

அமெரிக்கன் ரிப்போர்ட்டர் தொகுப்பு: ஆ. பூ. பெரியசாமி, I B.A. Br. i

நன்றியுரை

கல்லூரிப் பேரவையின் சார்பில் வெளியிடப்பெறும்
அறிஞர் அண்ணா நினைவு மலருக்காகக்

கட்டுரை, கவிதை, ஓவியம் அளித்த,

ஆசிரியர்கள்,
மாணவ மணிகள்,

வாழ்த்துச் செய்திகளை அனுப்பிய

குடியரசுத் துணைத் தலைவர்,
மாண்புமிகு அமைச்சர்கள்,
சட்டமன்ற மேலவைத் தலைவர்,
சென்னை மாநகராட்சித் தலைவர்,
சட்டமன்ற உறுப்பினர்கள்;

விளம்பரம் தந்து உதவிய

அன்பர்கள்;

மலரைச் சீரிய முறையில்
ஒரே வாரத்தில் அச்சிட்டுத்
தந்துதவிய

துரை அச்சகத்தினர்
மலர்ஆசிரியர்க் குழுவினர்

ஆகிய எல்லாருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரிப் பேரவை

பேராசிரியர் சி. சிவசுப்பிரமணியன், பி. எஸ், சி.
தலைவர்.

உ. சி. நடராசன், III B.A.
மாணவர் தலைவர்.

பேராசிரியர்.வி. என் சதாசிவ ராவ், எம். ஏ
துணைத் தலைவர்.

கோ. தமிழ்வாணன் III B. SC.
மாணவர் செயலர்.

THE INDIAN OVERSEAS BANK LIMITED

(Central Office- 151, Mount Road, Madras-2.)

With Branches in India, Ceylon, Hongkong, Malaysia, Singapore and Thailand and with World wide agency arrangements

THE INDIAN OVERSEAS BANK LIMITED

Offers you

A COMPREHENSIVE BANKING SERVICE

Please contact your nearest branch for full particurars regarding our:

- RECURRING DEPOSITS
- GIFT CHEQUES
- TRAVELLERS' CHEQUES
- MINORS' LOANS
- PERSONAL LOANS
- FARM FINANCE
- FINANCE FOR SMALL INDUSTRIES

Chairman:
R. N. CHETTUR.

General Manager:
A. M. KADHIRESAN.

உங்கள் அன்பையும் ஆதரவையும்

என்றும் விரும்பும்

துரை அச்சகம்

45-பி, இராச வீதி, காஞ்சிபுரம்.

காஞ்சனம் ஏஜன்ஸீஸ்

43, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்-1.

Pro: **K.** சுதர்சனன்

ஏஜண்ட்ஸ்:

நெய்வேலி லிக்னைட்கார்ப்ரேஷன் லிமிடெட்,

காரவான் கூட்ஸ் காரியர்ஸ் (p) Ltd.

லீக்கோ, காஞ்சிபுரம், திருத்தணி, அரக்கோணம் தாலுக்காக்களுக்கு வினியோகம் செய்கிறோம். ஓட்டல், ஆஸ்டல், டீஸ்டால், வீடுகள், சாய கம்பனிகள், பட்டு சாய கம்பனிகள், ஆகியவற்றிற்கு சப்ளை செய்கிறோம். விற்பனை செய்பவர்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் சலுகைகளைத் தருகிறோம். மிகச்சிக்கனமாக, நவீனமான மிக உபயோகமான லீக்கோவை எங்களிடம் வாங்குங்கள்.

காஞ்சிபுரத்திலிருந்து இந்தியாவின் முக்கிய இடங்களுக்கும் தமிழ்நாட்டின் முக்கிய இடங்களுக்கும் குறித்த நேரத்தில் டெலிவரி & புக்கிங் செய்து சரியான சேவை செய்கிறோம். காரவான் கூட்ஸ் காரியர்ஸ் மூலம் உங்கள் சரக்குகளை அனுப்பியும் டெலிவரி எடுத்தும் பயன் அடையுங்கள்.

With best compliments of:

WHITE FIELD.
Ice Cream Bakery

COFFEE HOUSE

6, Purasawakkam High Road,
MADRAS-7.

Stockist:

GAYATHRI STORES,
(Next to Post office)
516, Gandhi Road, KANCHEEPURAM-1

சிறந்த முறையில் பல வகைகளில் வண்ண முடியமைவுகள் அமைப்பவர்கள்

மாடர்ன் ஹேர் கட்டிங் சலூன்

நெ. 25, ரயில்வேரோடு, சிறிய காஞ்சிபுரம்.
(ராஜா டாக்கீஸ் அருகில்)

உரிமையாளர்: M. S. மணி.

கவின் மிகு காஞ்சியில்

ஒலி, ஒளி அமைப்பிற்குச் சிறந்த இடம்:

R. K. எலக்டிரிக்கல்ஸ்,

காந்தி ரோடு, [தேரடி அருகில்] காஞ்சிபுரம்.

போன்: 512 உ தந்தி: 'லக்ஷ்மி விலாஸ்'

காஞ்சிபுரம் பட்டு ஜரிகை சேலைகள்

வாங்க

நம்பிக்கையான இடம்

புதிய ஜவுளிக் கடை

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் சன் சங்கரன் &

A. அருணாசல முதலியார்

184, காந்தி ரோட், காஞ்சிபுரம்-1.

Mark: D. G. M. **Phone: 343**

D. GURUNATHA MUDALIAR & BROR.

VEGETABLE COMMISSION AGENTS,

Rajaji Market, KANCHEEPURAM-1

D. குருநாத முதலியார் & பிரதர்

காய்கறி கமிஷன் ஏஜண்ட்,

ராஜாஜி மார்க்கட், காஞ்சிபுரம்-1

With best compliments from:

G. K. VALE & CO.

24, Mount Road, Madras-2.

Phone: 86611 & 85191

**Specialists in Color still photographs
Studio photographs, Enlargements
and oil-paintings of National
Leaders' Portraits etc.**

ஆர்வீஸ்

காபி

38, நெல்லுக்காரத் தெரு, : : காஞ்சிபுரம்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு!

உங்கள் வேளாண்மைத் தேவைகள்.

* பம்ப் செட்
* உழவுக் கருவிகள்
* விதை
* உரம்
* இதர ஆலோசனைகள் பெற

அக்ரி-சென்டர்,

86-B, காமராசர் தெரு, காஞ்சிபுரம்-1

அணுகவும்:- (உழவர் நலம் கோரும் நிறுவனம்.)

புத்தம் புதிய வண்ணங்களில் நவநாகரீக டிசைன்களில் அழகுக்கு அழகுசெய்யும் கண்கவர் காஞ்சீபுரம் பட்டு சேலைகளும், சோளி பீஸ்களும், பாவாடை தான்களும் உயர்ந்த சரிகை வேலைப்பாடுடன் தயார் செய்தவை நியாயமான விலையில் கிடைக்கும்.

விஜயம் செய்யுங்கள்!

V

போன்: **478**

காஞ்சீபுரம் பட்டு நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிட்.,

No. G. 1099.

443, காந்தி ரோட், காஞ்சீபுரம்-1.

C. சந்திரராவ் முதலியார்,
தலைவர்.

BEST WISHES

Sri Lakshmi Stores,

162, GANDHI ROAD, KANCHIPURAM-1.

★

Distributors for:

O. K. Prefined Oil,
Vanaspathi & Cattle feed.

R. பாலசுப்ரமணியம்

பலசரக்கு மளிகை &
ஜுபிடர் ஐஸ் பேக்டரி,

★

287-288, காந்தி ரோட்,
காஞ்சிபுரம்.



எம். ஆர். சௌரி

(கிருஷ்ணா டாக்கீஸ் எதிரில்)

வால் கிளாக், கண் கண்ணாடிகள்

கை கெடியாரங்கள்

அலாரம் டைம்பீஸ்கள்

கை கெடிகார பட்டைகள்

பழுது பார்ப்பதுடன் விற்பனைக்கும் கிடைக்கும்.

122-G, எண்ணைக்காரத் தெருவு,
காஞ்சிபுரம்.

Phone:

244

Mark:

R C M

R. சின்னசாமி முதலியார்

காய்கறி வியாபாரம் & கமிஷன் ஏஜண்ட்,

ராஜாஜி மார்க்கட், காஞ்சிபுரம்.

Phone No. **245**

எங்களிடம் நோட்டு புத்தகங்களும், அக்கௌண்ட் நோட்டு புத்தகங்களும், கல்யாண விசேஷங்களுக்கும், அன்பளிப்புக்கும் ஏற்ற பொருள்களும், மற்றும் காலணி, டிரங், சூட்கேஸ், அயிட்டங்களும் விலை மலிவாக கிடைக்கும்.

ராயல் ஸ்டோர்ஸ்

(கார்னர் ஷாப்)

149, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1.

prop: K. S. K. ஷெரீப்

பொதுமக்களுக்கு ஓர் நற்செய்தி!

காலத்திற்கு ஏற்ற கண்கவர் ஆடைகள் வாங்க அனைவரும் **ஸ்ரீ ஆண்டாள் சில்க் ஹவுஸுக்கு** விஜயம் செய்யுங்கள்! காஞ்சீபுரம் பட்டு, பனாரஸ் சேலைகள், கோயம்புத்தூர், சேலம், உறையூர், மதுரை, சின்னாளம்பட்டி முதலிய ஊர்களின் 60, 80, 100 நெம்பர் 6 கெஜம், 8 கெஜம் சேலைகளும் பாவாடை ரகங்களும், கதர் வேஷ்டி ரகங்களும், மபத்லால்சர்டிங், கோட்டிங், சூட்டிங், டெரிகாட்டன், டெர்லின் ரகங்களும், டெக்ரான் சில்க் சேலைகளும், கண்ணையும், கருத்தையும் கவரும்படி, வண்ண வேலைப்பாடுகள் நிறைந்த டிசைன்களும், ஜியார்ஜட், ஷிபான் சில்க் ரகங்களும், புல்வாயல் சேலைகளும், லான் ரகங்களும், ஸ்டைலக்ஸ் பனியன்களும், திருமணத்திற்கு வேண்டிய கூறை புடவை, வேஷ்டி ரகங்களும் எங்களிடம் விலை மலிவாக சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும். பொதுமக்கள் அனைவரும் பொங்கலுக்கு தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய ஜவுளிகள் வாங்க உடனே விஜயம் செய்யுங்கள்.

ஸ்ரீ ஆண்டாள் சில்க் ஹவுஸ்

prop: M/s. S. V. நடேச முதலியார்,

512, காந்தி ரோட், காஞ்சிபுரம்-1.

ஸ்தாபிதம்: **1933** உ

போன்: **311** தந்தி: **"தம்பி"**

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. பெரியதம்பி முதலியார் & சன்ஸ்,

பட்டு ஜவுளி வியாபாரம்,

183-A-B, காந்தி ரோட், காஞ்சிபுரம்-1.

உ

ஸ்ரீராமஜெயம்

வீட்டின் எழிலுக்கு ஏற்ற எவர்சில்வர் பாத்திரங்களும், கல்யாண சீர்வரிசைக்குத் தேவையான பித்தளை, செம்பு பாத்திரங்களும் மலிவான விலைக்கு வாங்க சிறப்பான கடை

"மல்லிகா மெட்டல் ஸ்டோர்ஸ்"

38, சங்கூசாபேட்டை, :: காஞ்சிபுரம்.

நல்ல தரமான செம்பு, பித்தளை பாத்திரங்களை எங்கள் தொழிற்சாலையில் தயார்செய்து மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

உரிமையாளர்: **தே. எல்லப்பன்.**

காஞ்சிபுரத்தில்
நவீன வசதிகள் நிறைந்தது!

ஸ்ரீராமா கேப் & லாட்ஜ்

(போர்டிங் & லாட்ஜிங்)

பஸ் நிலையத்திலிருந்து இரண்டே நிமிடம்!

போன்: 395

* ஏர்கண்டிஷண்ட் மற்றும்
  'கல்யாண்' டீலக்ஸ் சிற்றுண்டிக் கூடங்கள்!
* மாடிப்பூங்கா!
* பார்டிகளுக்கான சிறப்பு அமைப்புகள்!
* ஒருவர், இருவர், குடும்பம் மற்றும்
  ஏர்கண்டிஷண்ட் அறைகள்!
* குளியல் அறை இணைப்பு-தண்ணீர்/வெந்நீர்!

ஸ்ரீராமா கேப்-சுவையான சேவையில் இருபத்தியேழு ஆண்டுகள்!

With Best compliments

S. PRAKASAM

Silk and Cotton Merchant

27, Mettu Street,

KANCHEEPURAM.

FOR QUALITY

PHOTOGRAPHS

Please Contact:

JANAKIRAM

STUDIO

259, GANDHI ROAD, KANCHEEPURAM.

வீடு உங்களுக்கு ஒரு பிரச்சனையா!

இக்குறையை நீக்க

மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்

ஆவன செய்யக் காத்திருக்கிறது.

(மனை வளம் ஓங்க விழைகிறது)

A. Kannappa Nayagar Son

GENERAL MERCHANT,

No. 208, Gandhi Road,
KANCHEEPURAM.

Prop: **A. K. Thiruvengadam.**

கல்லூரித் தோழர்களுக்கு
நவ நாகரிக உடை
தைக்கச் சிறந்த இடம்

G பெருமாள்
உரிமையாளர்

வீனஸ் டெய்லர்

57, செட்டித் தெரு,
காஞ்சிபுரம்-3.

இடம் மாற்றல் அறிவிப்பு

ஸ்ரீ சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ்,

காமராஜர் வீதி, காஞ்சிபுரம்.

100-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் இருந்து தற்காலிகமாக 99-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் மாற்றப் பெற்றுள்ளது.

அன்பர்களும் வாடிக்கைக்காரர்களும் வழக்கம்போல வருகைதந்து நல்லாதரவு தருமாறு வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

M. ஷண்முக உடையார்,

திருப்பூர் திருவாங்கூர் நிட்டிங் கம்பெனி சங்கு மார்க் பனியன்களை உபயோகியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்:

ஸ்ரீ சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ்,

100, காமராஜர் வீதி, *காஞ்சிபுரம்-1.*

V. R. VENKATADRI,

*

வி. ஆர். வெங்கடாத்திரி,

மலைவாழை வியாபாரம்,

*

289, காந்தி ரோட், (தேரடி அருகில்)

காஞ்சிபுரம்-1.

தென்னாட்டுக்காந்தி
அறிஞர் அண்ணாவிற்கு எங்களது அஞ்சலி

சுவையுள்ளதும் சுத்தமானதும்
மழலை செல்வங்களின்
மகிழ்ச்சிக்கு

செங்கற்பட்டு

சுகுமார்

கேக், பிஸ்கேட், ரொட்டி, பன் & புரை

அனைவரும் விரும்பி வாங்குவது.

தயாரிப்பாளர்:—

சுகுமார் ரொட்டி கிடங்கு

99, எண்ணெய்க்காரத் தெரு,

காஞ்சீபுரம்:

காஞ்சி தந்த செல்வம்!

அறிஞர் பெருந்தகை!!

மாமேதை தமிழக முதல்வர்

மாண்புமிகு அண்ணா அவர்களுக்கு

எங்கள் இதயங்கனிந்த வணக்கங்களை
காணிக்கையாக்குகிரேம்.

எங்கள் சங்க ஆரம்ப காலமுதல் புதிய விற்பனை நிலையத்தை துவக்கி, 400க்கும் மேலான நெசவாளர் குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான ஆக்கப்பணியில் எங்களை ஈடுபடுத்திய அண்ணா அவர்களின் விருப்பத்திற்கிணங்க பணியாற்றி வருகிரேம்-வருவோம்!

தங்கள் தேவைகளுக்கு வருகை தாருங்கள்!

வணக்கம்.

காஞ்சிபுரம்

திருவள்ளுவர்

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., நெ. G. 2054

207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

(தேரடி எதிரில்)

போன்: 222 தந்தி: 'திருகோசில்க்'

சிறந்த செப்பு, பித்தளை, வெண்கல, எவர்சில்வர்
பாத்திரங்கள் குறைந்த விலையில்
மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்குவதற்கு
தகுந்த இடம்

தொலைபேசி: **255**

துரை-பச்சையப்பன்

பாத்திர உற்பத்தி விற்பனையாளர்

216, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

N. B:- பழைய செப்பு, பித்தளை வெண்கலம், தெரா சாமான்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

With the best Compliments from:

World Famous O'sram, Phillips, Cromption Bulbs and Electrical Goods Available Here at

VIJAY ELECTRICALS

(Electricals Dealers)

No. 517, Gandhi Road, Kanchipuram-1.

தமிழகத்தின் ஒளி விளக்கு,

அறிஞர் பெருந்தகை,

அண்ணா அவர்களுக்கு

எங்களது

இதய அஞ்சலி

❖ ❖ ❖ ❖

காஞ்சிபுரம் முருகன்

பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட். எண். G. 1653

79, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1.

தொலைபேசி: 201

C. P. கன்னியப்ப முதலியார் M. C.
தலைவர்.

V. சுப்பிரமணியம், M. A.
செயலாளர்.

அரசாங்க வல்லுநர்களின் அங்கீகாரிப்பையும், அமைச்சர் பெருமக்களின் பாராட்டினைப் பெற்றதுமான நீடித்த உழைப்பினைத் தரும் வகையில் தயாரித்தளிக்கும் எமது விவசாயக் கருவிகளையே விவசாயப் பெருமக்க்ள் விரும்பி வாங்குகின்றனர்.

மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுரை:-

மதுராந்தகத்தில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியில் என் நீண்ட நாளைய நண்பர் C.P. இராமலிங்கம் தயாரித்த புதுமுறை விவசாயக் கருவிகளைக் கண்டு களிப்படைந்தேன். அந்தக் கருவிகளைக் கண்ணுற்ற விவசாயப் பெருங்குடி மக்களும் பெரும் மகிழ்ச்சி பெற்றனர். இக்கருவிகளின் துணை கொண்டு விவசாயம் செய்திடின் உற்பத்தி பெருகுவதுடன் உழவர்களின் வருமானமும் வளரும். இக் கருவிகளைப் பயன்படுத்தி விவசாயமுறையில் வெற்றி காண வேண்டுமென்று உழவர் பெருங்குடி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்
அண்ணாதுரை.
15/1/68.

26/1/1981

எமது தொழிற்சாலையின் தயாரிப்புக் கருவிகள்:

பால்பேரிங்குகள் பொருத்தப்பட்ட
தழைமிதிக் கருவி
புஷ்பேரிங்குகள் பொருத்தப்பட்ட
தழைமிதிக் கருவி
ஜப்பானியமுறை களையெடுக்கும் கருவி
கட்டாக் மாடல் களையெடுக்கும் கருவி

வரிசை நடவுக் கருவி
சக்கரக் கலப்பைகள்
பரம்புப் பலகைகள்
ஸ்டீல் கொழுக்கள்
மருந்துக் கலவை கருவி

சி. பி. ஆர். இன்ஜினிரிங் ஒர்க்ஸ்

நெ. 47, இராச வீதி, காஞ்சிபுரம்.

துரை அச்சகம், காஞ்சிபுரம்.